


மக்களிடமிருந்து மக்களுக்காய் வருவன கலைகளும் இலக்கியங்களும்

# புளியமரம்

மு. தயாளன்

# புளியமரம்

**மு. தயாளன்**

**மகுடம்**

இல.90, பார்வீதி,

மட்டக்களப்பு 30000

இலங்கை.

ISBN : 978 - 955 - 4041 - 11 - 0

**மகுடம் பதிப்பக வெளியீடு - 15**

● நூல் - புளியமரம்-சிறுகதைத் தொகுதி ● ஆசிரியர் - மு.தயாளன் ● உரிமை - ஆசிரியருக்கு ● முதல் பதிப்பு - ஜூன் - 2018 ● பக்கம் - 140 ● வெளியீடு - மகுடம் பதிப்பகம் 90, பார்வீதி, மட்டக்களப்பு. 30000 ● தொ.பே. இல. 0774338878 ● அட்டைப் படம் - ந.ரமணன் ● வடிவமைப்பு - அச்சு - வணசிங்கா அச்சகம், மட்டக்களப்பு. ●

● Book - Puliyamaram (short stories) ● Author - M. Thayalan ● © Author ● First Edition - June - 2018 ● Size - 1/8 ● Pages -140 ● Published by - Magudam Publication. 90, Bar Road, Batticaloa. ● Ph.No. 0774338878 ● Cover Design - N. Ramanan ● email - magudammichael@gmail.com ● Printing - Wanasinghe Printers, Batticaloa

# உள்ளே...


| | | |
|---|---|---|
| பதிப்புரை | - | 04 |
| புளியமரத்தின் கதைகள் | - | 07 |
| நானும் என் எழுத்தும் | - | 13 |
| புளியமரம் | - | 17 |
| பனிவிழும் ஒரு நாள் | - | 25 |
| மாறிலிகள் | - | 35 |
| கனவுகளைத் தொலைத்தவள் | - | 42 |
| வயிற்றிற் சுமந்தவள் | - | 52 |
| நரபலி | - | 64 |
| சத்தியாக்கிரகம் | - | 69 |
| நந்தனும் சின்னானும் | - | 78 |
| கலாசாரம் | - | 91 |
| உடைந்த கண்ணாடி | - | 109 |
| பச்சோந்தி | - | 121 |
| சூடிக் கொடுத்தவள் | - | 130 |

# பதிப்புரை

மகுடம் பதிப்பகத்தின் பதினேழாவது வெளியீடாக மு.தயாளன் அவர்களின் புளியமரம் என்ற சிறுகதைத் தொகுதியை வெளியிடுவதில் பெருமகிழ்வடைகின்றோம்.
தற்போது லண்டனில் புலம்பெயர்ந்து வாழும் மு.நற்குணதயாளன் அவர்கள் அண்மைக்காலமாக நிறையவே எழுதி வருகின்றார். நிறைய எழுதினாலும் நிறைவாக எழுதி வருகின்றார்.
கவிதை, கட்டுரை, நாவல், மொழி பெயர்ப்பு என இலக்கியத்தின் பல துறைகளிலும் தனது முத்திரையைப் பதித்து வருகின்றார்.
கவிதையில் குறும்பா, திருக்குறும்பா என பல்வேறு விதமான பரிசோதனை முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார். இலக்கண இலக்கிய விதிகளை தளர்த்தி தனது பாணியில் இவர் வடித்த குறும்பாக்கள் 'தயாளனின் குறும்பாக்கள்" என்ற பெயரில் மகுடம் வெளியீடாக வெளியிடப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.
அதேபோன்றே தனது முகநூல் பக்கத்தில் திருக்குறும்பா என்ற வடிவில் பல தத்துவ விடயங்களைக் கவிதைகளாக்கி வருகின்றார்.
தனது முகநூல் பக்கத்தினையே ஒரு கவிதைப் புத்தகமாக வெகு சிறப்பாக அதனைப் பயன்படுத்தி வருகின்றார். விரைவில் திருக்குறும்பாவையும் நூலாக வெளியிடும் முயற்சியில் உள்ளார்.
இந்தப் புளியமரம் என்ற சிறுகதைத் தொகுப்பில்

மொத்தமாகப் பன்னிரண்டு சிறுகதைகள் உண்டு. மு.தயாளன் தனது கதைகளில் சமூக அவலங்களையும் சமகாலப் பிரச்சினைகளையும் வெகு அழகாகப் படம் பிடித்து விடுகிறார். இவரது சிறுகதைகள் கூட ஒரு வித்தியாசமான அமைப்பு முறையில் அனைவருக்கும் புரியக்கூடிய வகையில் அமைந்துள்ளது.

எழுத்தைத் தவமாக மேற்கொண்டுள்ள தயாளன் அவர்கள் எந்த இஸங்களுக்குள்ளும் தன்னை இணைத்துக் கொள்ளாதவர். அவரது வாழ்வின் அனுபவம் அதன் முதிர்வுத்தன்மை, அவரை இயல்பாக வாழ்க்கை மீது தத்துவ விசாரணை செய்ய வைக்கிறது. ஆன்மீகத் தேடலுடனான அவரது பார்வை அவரது எழுத்துக்களுக்குப் புதிய வீச்சைக் கொடுக்கிறது.

இத்தொகுதியில் உள்ள சிறுகதைகளில் இரண்டு சிறுகதைகள் ஏனையவற்றில் இருந்து முற்றிலும் வேறுபட்டதாகும்.

'நரபலி' மற்றும் 'சூடிக் கொடுத்தவள்'.

நரபலி திருகோணமலை தம்பலகாமம் ஆதி கோணேசர் ஆலயத்துடன் தொடர்புபட்டது, கி.பி 1223 காலகட்டத்தில் நடைபெறுவதாகவும், மக்களின் நல்வாழ்விற்காக வருடந்தோறும் கன்னிப் பெண்களை நரபலி கொடுக்கப்படுவதைக் கேள்விக்குரியதாக்கும் சிறுகதை.

சூடிக் கொடுத்தவள் ஆண்டாள் தொடர்பாகவும் அவள் குலம் தொடர்பாக ஏற்படும் சிக்கலில்

அதனால் விரக்தியுற்ற அவள் கண்ணனையே தனது காதலனாகக் கொண்டு அவனுடன் சல்லாபிக்கும் விதத்தில் கவிதைகள் எழுதத் தொடங்க, எல்லாவற்றையும் தமது இஷ்டப்படியே செய்யும் ஆணாதிக்க வர்க்கம், அவளைத் தெய்வமாக்கிப் பலி கொள்வதைக் கூறும் கதையாகும். இவ்விரண்டு கதைகளிலும் இளம் பெண்கள் இறைவனின் பெயரால் பலி கொள்ளப்படுகிறார்கள்.

இதனைச் சரித்திர பூர்வமாகவும், சமய பூர்வமாகவும் வெகு அழகாகப் படைத்துள்ளார் தயாளன்.

அண்மைக்காலமாக ஆண்டாள் பற்றிய சர்ச்சை எழுந்து இன்னும் அடங்காத நிலையில் இவரது ஆண்டாள் பற்றிய சிறுகதை பல புதிய சர்ச்சைகளை உருவாக்கும். தான் சார்ந்த சமயத்தைக் கேள்வி கேட்கும் துணிவு எல்லோருக்கும் வந்து விடுவதில்லை. சத்திய ஆவேசமும், அறமும் கொண்ட எழுத்தாளனால் மட்டுமே அது சாத்தியமாகின்றது.

அது தயாளனினால் முடிந்திருக்கிறது. சமூகத்தைக் கேள்வி கேட்ட அவர் சமயத்தையும் துணிவுடன் கேள்வி கேட்கிறார். அந்த கேள்விகளுக்கான பதிலை அவரது ஆன்மீகத் தேடல் அவருக்குப் பெற்றுக்கொடுக்கும் என்ற நம்பிக்கையில்.

வாழ்த்துக்களுடன்,

**வி. மைக்கல் கொலின்**

(ஆசிரியர் - மகுடம்)

## புளியமரத்தின் கதைகள்

கதை என்பது தயாரிப்பதல்ல. அப்படித் தயாரிப்பது கதையாக இல்லாமல் கட்டுரையாகவோ அல்லது வேறு ஒன்றாகவோ மாறி விடுவதை வாசகர்கள் அடையாளம் கண்டுவிடுகின்றனர்.

தமிழில் கதை சொல்லும் விற்பன்னர்களை நான் அடையாளம் கண்டுள்ளேன். கதை அளப்பவர்களையும் கண்டுள்ளேன்.

இலங்கையில் கிட்டத்தட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறுகதையாளர்கள் தமிழில் தோன்றிவிட்டார்கள். இன்னும் பலர் இத்துறைக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். இனியும் வருவார்கள்.

இவர்களில் தேறியவர்கள் யார் ?

தேறப்போறவர்கள் யார் ?

இந்த இரு கேள்விகளுக்கும் பதில் சொல்வது என்பது மிகவும் சிக்கலான விடயம் எமது விமர்சகர்களினது சிறுகதையாளர்களின் பட்டியல் எனக்கு ஏமாற்றமளிப்பதுண்டு.

கதைசொல்லும் வல்லமை பெற்றவர்களின் வரிசையில் வல்லமை பெறாத சிலரது பெயர்களை என்ன காரணமோ இவர்கள் இணைத்துக் கொள்ளுகிறார்கள்.

பெயர் பெற்ற இந்த விமர்சகர்களின் செயல் ஒரு வாசகன் என்ற முறையில் எனக்கு அதிருப்தியை ஏற்படுத்தியதுண்டு.

அவர்கள் இப்போது உயிருடன் இல்லை.

இப்போது இலக்கிய விமர்சனம் மிகவும் நீர்த்துப் போய் விட்டது. விமர்சனம் என்ற பெயரில் எழுதுபவை எல்லாம் நயவுரைகளாகவும், ரசிகமணித்தனமாகவும் மாறிப்போய் விட்ட ஒரு அவலம் நேர்ந்துள்ளது.

எழுத்தாளர்களும் சரி அவர்களது எழுததுக்களைப் பற்றி எழுதுபவர்களும் சரி தேர்ந்த வாசிப்பு அற்றவர்களாக இருப்பதுவே இந்த நிலைக்குக் காரணமென்பதை நாம் விரும்பியோ விரும்பாமலோ ஒப்புக்கொண்டு தானாக வேண்டும்.கதை கதையாக இருக்கவேண்டும் என்பதை ஒரு வாசகன் அவாவுவதில் என்ன தவறு இருக்கிறது ?

அவனது மனக் குறையைத் தீர்ப்பதற்கு எப்போதாவது தான் ஒரு கதை வருகிறது.

ஒரு நல்ல வாசகன் அக்கதை வரும் போது அடையும் மகிழ்ச்சி சொல்லுந்தரமன்று.

இப்படியான புளகாங்கிதத்தை நான் சமீபகாலமாக அனுபவிக்கிறேன்.

ஆயிரம் கதைகள் ஒருவர் எழுதிவிடமுடியும் அதில் நினைவில் நிற்கக் கூடியவை எவை என்பதே பிரச்சினை. ரசனை ஆளுக்காள் மாறுபடும். இது

தவிர்க்கமுடியாதது. ஆயினும் நல்ல கதை எப்போதும் நல்ல கதைதான்.

சுய அனுபவ வெளிப்பாடுகள் ஆளுமை நிறைந்த எழுத்தாளர்களின் கைகளினால் நேர்த்தியான சிறுகதைகளாகின்றன.

நண்பன் தயாளன் ஒரு மனிதன்.

அவனிடம் போலித்தனங்கள் எதுவும் இல்லை, தான் கண்டவற்றை, தான் அனுபவித்தவற்றை அவன் கவிதை, கதை, நாவலாக்குகிறான்..

புலம்பெயர் வாழ்க்கையையும், தாய்நாட்டின் வாழ்க்கையையும் அவன் கதைகளாக்குகிறான்.

அனுபவத்திற்கும், வார்த்தைகளுக்கும் அவனிடம் பஞ்சமில்லை.

தமிழ்ச் சிறுகதை தோன்றியதிலிருந்து இன்று வரை கதை சொல்லல் முறையில் பல மாற்றங்களைச் சந்தித்து விட்டது. இன்னும் மரபுவழிக் கதை சொல்லிகள் பலர் இருக்கவே செய்கின்றனர்.

கதைஞர்களை இருவகையாக ஏ.ஜே போன்றவர்கள் பிரிக்கின்றனர்.

கலைஞர்கள்! வினைஞர்கள்.! கதைத் தொழில் நுட்பம் வாய்க்கப் பெற்றவர்கள் வினைஞர்களாக இருந்து கலைஞர்களாக மாறுகின்றனர்.

அப்படி மாறிக் கொண்டிருப்பவர்தான் நண்பன் தயாளன்.

இந்தப் புளியமரம் கதையில் வரும் புளியமரம் எனக்குப் பரிச்சயமான ஒன்று.
எனது ஆறாம் வகுப்பிலிருந்து இந்தப் புளியமரத்தைக் கடந்து எனது கல்லூரிக்குச் சென்றிருக்கிறேன்.
கிட்டத்தட்ட அரை நூற்றாண்டு கழிந்து இக் கதையின் மூலம் புளியமரத்தையும் அதனோடு அன்றைய, இன்றைய எமது பசுமை நிறைந்த அர்த்தம் நிறைந்த வாழ்க்கை முறைமையையும் தயாளன் நினைவுபடுத்தி இருக்கிறார்.
ஒரு தொகுதி போடப்போகிறேன் ஆலோசனை வழங்கு என அவன் என்னிடம் கூறியபோது "தொகுதிக்குப் 'புளியமரம்' எனப் பெயரிடல் எனது பிரியம்" எனத் தெரிவித்தேன்.
"அதுவே நானிட்டுள்ள பெயரும் ஒரேவிதமாகச் சிந்திக்கிறோம்" எனப் பதிலிட்டான்.
இப்போது 'புளியமரம்' உங்கள் கைகளில்.....
இத்தொகுப்பில் 12 கதைகள் இருக்கின்றன. இவை சென்ற ஆண்டிலும் இந்த ஆண்டின் முற்கூற்றிலும் தினக்குரல், வீரகேசரி, தினகரன், அரும்பு, மகுடம், பார்வை ஆகியவற்றில் பிரசுரமானவை.
இவற்றில் பல கதைகள் பற்றி இரத்தினச் சுருக்கமாக எனது அபிப்பிராயத்தை-கவனியுங்கள்-விமர்சனங்களை அல்ல ---- தெரிவித்திருக்கிறேன்.
புளியமரம், பனிவிழும் ஒரு நாள், மாறிலிகள்,

கனவைத் தொலைத்தவள், வயிற்றில் சுமப்பவள், சூடிக்கொடுத்தவள், நரபலி, சத்தியாக்கிரகம், நந்தனும் சின்னானும், கலாச்சாரம், உடைந்த கண்ணாடிகள், பச்சோந்தி. இவையே புளியமரம் என்ற இத் தொகுப்பில் உள்ள கதைகள்.

ஒவ்வொரு கதையும் எமக்குக் கூறுவதென்ன? படைப்பாளி என்பவன் சமுதாயத்தின் ஒவ்வொரு நிகழ்வுகளையும் அவதானிப்பவன்.

அவதானிப்பதோடு நில்லாமல் அவற்றின் சாதக பாதகங்களை உற்று நோக்கி எதிர்வினை ஆற்றுபவன். இக்கதைகளை ஒரு தேர்ந்த அவதானிப்போடு படைத்ததின் மூலம் தன்னை ஒரு நேர்மையான படைப்பாளியாகத் தயாளன் நிறுவியிருக்கிறார்.

இக்கதைகள் எல்லாமே ஒரு சமூக விமர்சனம் என்று நான் கூறுவேன். இடதுசாரியான இவருக்குள் அந்தச் சிந்தனை இழையோடு வதைக் கதைகளைப் படிப்பவர்கள் உணர்வார்கள். கலாச்சாரச் சீரழிவுகள் முதல் ஆண்டாள் பிரச்சினை, சாதியப் பிரச்சினை, சமகாலப் பிரச்சினைகள் என இவர் கதைகள் உரத்துப் பேசுகின்றன.

முன்னுரை என்ற பெயரில் கதைகளையும் கதைகளின் சாராம்சங்களயும் கூறி உங்களைத் திசை திருப்ப நான் மனதற்றுள்ளேன்.

ஆயினும் ஒரு வார்த்தை கரவெட்டி, வடமராட்சியின்

நல்ல படைப்பாளிகளைத் தந்த மண். மறைந்த செ. கதிர்காமநாதன், நெல்லை க.பேரன் போன்றவர்களைக் குறிப்பிடலாம்.

இன்று இன்னும் சிலர் கரவெட்டி மண்ணுக்குப் புகழ் தருகிறார்கள் அவர்களில் முக்கியமான ஒருவர் மு. தயாளன்.

நான் ஒரு வாசகன் என்ற முறையில்,தயாளனின் கதைகள் எனக்குப் பிடித்திருக்கிறது. அதற்குக் காரணம் தயாளன் தன் கருத்துகளை வாசகனான என்மீது வலிந்து திணிக்கவில்லை.

அதுவே அவனது பலம்.

வாசகர்களான என் போன்றவர்களுக்குத் திருப்தி அளிக்கக் கூடிய ஒரு தொகுதியை அவன் எமக்கு தந்திருக்கிறான்.

அது போதும்.! அவன் தொடர்ந்து எழுதவேண்டும், முக்கியமாகப் புதுப் புது உத்திகளைக் கதைப் பரிசோதனைகளை நிகழ்த்தவேண்டும். இதுவே என் வாசக விருப்பு.

தயாளனால் அது சாத்தியமாக்கப்பட முடியும்.

அவனுக்கு எனது அன்பு !

அன்பு வாசக நண்பர்களே இனி புளியமரத்தின் நிழலில் ஒதுங்குங்கள். சரியா?

**நந்தினி சேவியர்**

269 N.C வீதி, திருகோணமலை

# நானும் என் எழுத்தும்

எழுத்து என்பது தவம்.
நான் என்னை எழுத்தாளனாக என்றும் கருதியதில்லை.
கதை சொல்வதிலுள்ள ஆசையும் ஆர்வமும்தான் என்னை எழுத வைக்கிறது.
நான் எந்தத் தத்துவத்திற்குள்ளும் என்னை அடக்கிக் கொள்ள விரும்பவில்லை.
நான் ஒரு வெளியாளாக (out sider) இருப்பதையே விரும்புகிறேன். இதன் கருத்து நான் சமூகத்துக்கு வெளியே சென்றுவிட்டேன் என்பதல்ல.
சமூகத்தின் பிரச்சினைகளை இயல்பாகப் பார்க்காமல் முற்போக்கு பிற்போக்கு என்ற தத்துவங்களைக் கொண்டு பார்க்கும் அளவு கோல்களை விட்டு வெளியில் வாழ்கிறேன் என்பது தான்.
நான் எழுத்துலகின் எல்லாத் துறைகளிலும் என் கால்களைப் பதித்துள்ளேன்.
என்னுடைய அனுபவங்களையும் நண்பர்களின் அனுபவங்களையும் இலக்கிய ஆக்கங்களாக வெளிக்கொணர்கிறேன்.

இதன் ஒரு அங்கம்தான் இச் சிறுகதைத் தொகுதி.
பன்னிரண்டு  கதைகள் உள்ளன.
என் நண்பர்கள் சிறிபாலன் நந்தினி சேவியர் மற்றும் என் மனைவி சாருகேசி ஆகியோர் தங்கள் பங்களிப்பின்மூலம் இப் பன்னிரு கதைகளுக்கும் அழகு கூட்டியுள்ளனர்.
என் எழுத்துலக வாழ்க்கையில் மறக்க முடியாத பாத்திரங்கள் இவர்கள். என் ஒவ்வொரு எழுத்திலும் இம் மூன்றுபேரும் வாழ்கிறார்கள். இவர்களின்றி என் எழுத்துகள் முழுமை பெறுவதில்லை.
அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றிகள்.
உங்களை என் கதைகள் மகிழ்விக்க வேண்டும் என்பதுதான் என் விருப்பம். நான் எந்தக் குழுவையும் சார்ந்து இல்லாததால் சுதந்திரமாக எழுதியுள்ளேன்.
இந்தக் கதைகளைப் பிரசுரித்த வீரகேசரி தினக்குரல்-தினகரன்-பார்வை-மகுடம் ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியர்களுக்கும் என் நன்றி கலந்த வணக்கங்கள்.
அத்தோடு இச் சிறுகதைத் தொகுதியைப் பதிப்பித்து வெளியிடும் பொறுப்பை ஏற்றுக் கொண்ட மகுடம் ஆசிரியர் மைக்கல் கொலினுக்கும் அவருடைய பதிப்பகமான மகுடம் பதிப்பகத்தாருக்கும் என் நன்றிகள்.
அத்தோடு இதனை அச்சிட்ட வணசிங்க

அச்சகத்தாருக்கும் என் அன்பு நன்றிகள். இந்தப் புத்தகத்தின் அட்டைப்படத்தை அழகுற அமைத்துத் தந்த என் மகன் ரமணனுக்கும் என்னையிட்டுப் பெருமைப்படுகின்ற என் குடும்பத்தாருக்கும் குறிப்பாக என் இனிய பேரப்பிள்ளைகளுக்கும் என் இனிய அன்புகள்.

**மு. தயாளன்**

# புளியமரம்

கொடிகாமத்தைவிட்டு பஸ் புறப்பட்டுவிட்டது.
பின் சீற்றில் சுதாகரன் இருந்தான்.
பல வருடங்களுக்குப் பிறகு வந்திருக்கிறான்.
எல்லாமே புதிதாக இருக்கிறது.
கொழும்பிலிருந்து வானில் போகும்படி நண்பர்கள் வற்புறுத்தியும் மறுத்துப் புகையிரதப் பயணத்தைத் தேர்ந்து கொண்டான். புகையிரதத்தின் யன்னலூடாக வெளியில் பார்க்கிறான்.
மரங்கள் கட்டிடங்கள் அவனுக்கு எதிராக ஓடிக் கொண்டிருக்கின்றன.
மதவாச்சியைத் தாண்டிப் புகையிரதம் ஓடிக் கொண்டிருக்கிறது.

ஆனையிறவு வந்ததும் மனதுக்குள் ஒரு மகிழ்ச்சி. முன்பெல்லாம் மாதமொரு முறை இப்படி வருவான். அப்போதெல்லாம் அம்மாவைப் பார்க்கப் போகிறேன் என்ற சந்தோசம் மனதில் இருக்கும். இப்போ அம்மாவுமில்லை அப்பாவுமில்லை.

எத்தனையோ வருடங்களுக்குப் பிறகு வந்திருக்கிறான்.

பனை மரங்களைக் கண்டவுடன் மனதுக்குள் ஒரு கிளுகிளுப்பு.

புகையிரதம் கொடிகாமத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறது.

கொடிகாமத்தில் இறங்கி நெல்லியடி ஊடாகப் பருத்தித்துறை பஸ்சிலும் ஏறிவிட்டான்.

அவன் போகவேண்டிய இடம் கரவெட்டி.

அவனுக்குள்ள ஒரே அடையாளம் அந்தப் புளியமரம்.

கொடிகாம வீதியில் கம்பீரமாக நிற்கும் மரம். சடைத்துச் செழித்து நிற்கும் அழகான புளியமரம்.

அந்த வீதியில் புளியமரத்துக்குச் சரி நேராக இடப்பக்கத்தில் நீண்டு நெளிந்து செல்வது கன்பொல்லை வீதி.

அந்த வீதியின் முடிவில் வருவது கன்பொல்லைக் கிராமம்.

அந்தப் புளியமரத்தைக் கண்டவுடன் இறங்கிக்

கன்பொல்லை வீதியால் சென்று முதல் வலது பக்க வீதிக்குள் அவன் போகவேண்டும்.

அந்த வீதியின் முடிவில் இருக்கும் அந்திரான் கிராமமே அவன் உறவினர்கள் வாழும் இடம்.

அந்தப் புளியமரத்தின் பின்னால் எத்தனை கதைகள்.

அந்தப் புளியமரம் இப்பவும் இருக்குதோ அல்லது வெட்டிப் போட்டார்களோ யாருக்குத் தெரியும்.

மரத்தைத்தானே வெட்ட முடியும். நினைவுகளை இல்லையே!

சுதாகரனின் உடையைப் பார்த்துப் பக்கத்தில் இருந்தவர் கேட்கிறார்.

“தம்பி வெளி நாடோ?”

சுதாகரன் மெதுவாகச் சிரித்தபடி

“ஓம் நான் லண்டன்”

“அப்ப தம்பியிட்டை நல்ல காசிருக்கும்”

சுதாகரன் அவரை ஒரு மாதிரியாகப் பார்த்தான்.

“கோவிக்காதை தம்பி. லண்டன் காரரிட்டைக் காசிருக்கெண்டு இஞ்சை கதைக்கிறவை. அதனாலைதான் சொன்னனான்”

புளிய மரத்தைப் பற்றி இவரிடம் கேட்கலாமோ! மனதுக்குள் நினைத்துக் கொள்கிறான் சுதாகரன்.

“இஞ்சை இப்ப எல்லாம் மாறிப் போச்சுது.”

சுதாகரன் சொன்னான்.

“தம்பி கனகாலத்துக்குப் பிறகு வாறியளோ.?”

"ஓம் பதினைஞ்சு வருடமாச்சுது"
"அப்ப எல்லாம் புதுசாய்த்தான் இருக்கும்"
சிறிது நேரம் இருவரும் பேசவில்லை.
பஸ் பள்ளங்களுக்குள் விழுந்து விழுந்து போய்க்கொண்டிருந்தது.
"சண்டைக்கு முதலே இந்த றோட்டெல்லாம் பழுதாகியிட்டுது." அவர் சொன்னார்.
"ஏன் அரசாங்கம் செய்யாதோ?"
அவர் சிரித்தார். அந்தச் சிரிப்பின் அர்த்தம் அவனுக்குப் புரிந்தது. பஸ் கலிகைச் சந்தியைத் தாண்டிச் சென்று கொண்டிருந்தது.
வறணியில் பஸ் நின்றது.
பலர் இறங்கினார்கள். சிலர் ஏறினார்கள்.
"தம்பி எங்கை போறியள்"
"கரவெட்டிக்குப் போறன்"
"கரவெட்டியிலை எவடம் தம்பி"
அவர் கேட்டார்.
"கன்பொல்லை வீதிக்குப் போகவேணும்"
"ஓ! அங்கையோ போறியள்" அவருடைய பதிலில் ஒருவகை எகத்தாளம் இருப்பதை உணர்ந்தான். இப்ப புளியமரம் சம்பந்தமாகக் கேட்டுவிடு என மனம் சொன்னது.
"அந்தப் புளியமரம் இப்பவும் இருக்குதோ?."
"அதைச் சரிச்சுப் பல வருடமாச்சுது." அவர் சொன்னார்.

அமைதி. மயான அமைதி.
சுதாகரனுக்குக் கவலையாக இருந்தது.
“அந்தப் புளியமரம் ஒரு அடையாளமெல்லே”
அவர் அவனைப் பார்த்துச் சிரித்துவிட்டு
“உப்பிடி எத்தினை அடையாளங்கள் அழிஞ்சு போச்சுத் தம்பி”
சுதாகரன் உள்ளுக்குள் வேதனைப்பட்டான்.
சில காட்சிகள் அவனுக்கு ஞாபகம் வந்தன.
சுதாகரனும் சிவமும் சிவப்புக் கட்சியில் இருந்த காலம்.
கரவெட்டியிலை சாதிப் பிரச்சினையும் உச்சம்.
கன்பொல்லைக் கிராமம் சாதி குறைஞ்சவர்கள் இருக்குமிடம். அவர்களைச் சுற்றவர உள்ளவர்கள் மேல் சாதிக்காரர்கள்.
ஒரு தடவை சாதிப் பிரச்சினை உச்சமான நேரத்தில் கன்பொல்லையில் உள்ளவர்களுக்கான உணவு வழங்கலைத் தடை செய்து விட்டார்கள்.
சுதாகரனும் சிவமும் அந்தப் புளியமரத்தினுடா கத்தான் அவர்களுக்கு உதவி செய்திருக்கிறார்கள்.
“என்ன தம்பி யோசிக்கிறாய்” அவர் கேட்டார்.
“ஒண்டுமில்லையண்ணை...பழசுகள் ஞாபகத்துக்கு வருகுது.” அவர் பெரிதாகச் சிரித்தார்.
ஏன் சிரிக்கிறியள் என்று சினத்தோடு கேட்டான்.
“தம்பி பழசுகளை நினைத்து என்ன செய்யப் போகிறியள்”

“அதுவும் சரி” சுதாகரன் சலித்துக் கொண்டான்.
“தம்பி அந்தப் புளியமரத்துக்குக் கீழை ஆறு பேரை ஆமிக்காரங்கள் சுட்டவங்கள்”
“அந்த நேரம் இந்தப் புளிய மரம்
“போராளியளுக்குக் கவசம் மாதிரி.
மறைஞ்சு நிண்டு வெடி வைச்சா வைச்சதுதான்.
ஒருதரும் தப்பேலாது”
“உங்களுக்கென்னெண்டு தெரியும்.”
“அந்த நேரம் நானும் ஒரு போராளி தம்பி”
சுதாகரன் கொஞ்சம் தள்ளி இருந்து கொண்டான். ஒரு பாதுகாப்புத்தான்.
“உனக்கு என்ன நினைவுக்கு வருகுது தம்பி”
சுதாகரன் கொஞ்ச நேரம் அவரைப் பார்த்து யோசித்துவிட்டு
“அந்த நேரம் கன்பொல்லைச் சனங்களுக்கு நானும் நண்பனும் பாண் கொண்டுபோனது அந்தப் புளிய மரத்தடியாலை தான். அப்ப களைச்சுப் போய் அந்த மரத்துக்குக் கீழை நின்று கதைச்சது இப்பவும் நினைவுக்கு வருகுது.”
“நீங்கள் பாண் கொண்டு போகேக்கை உங்களை வழி மறிச்சு மேல் சாதிக்காரர் சாத்து சாத்தெண்டு சாத்தினவங்கள் தானே.”
சுதாகரன் திடுக்கிட்டு அவரைப் பார்த்தான்.
“அது உங்களுக்கு எப்பிடித் தெரியும்” அவர் சிரித்துவிட்டு

“அடிச்சவங்களிலை நானும் ஒருவன் தம்பி”

சுதாகரன் திடுக்கிட்டு அவரை அருவருப்போடு பார்த்தான்.

“நீங்கள் பழைய போராளியெண்டு சொன்னியள்.”

“அதுக்குப் பிறகுதானே தம்பி போராட்டம் தொடங்கினது”

சுதாகரன் அவரை வியப்போடு பார்த்தான்.

“அந்தப் புளிய மரம் நல்ல அகலம் தம்பி. அதின்ரை மறைவிலை நிண்டு எத்தனை ஆமிக்காரனைப் போட்டுத் தள்ளியிருக்கிறம்.”

“உண்மையாய் அண்ணை அந்த மரம் செய்த சேவை கனக்க. எவ்வளவு புளியம்பழம் கொட்டும். அந்தக் காலத்திலை கொங்கிரஸ்காரர் எத்தனை கூட்டங்கள் மரத்துக்குக் கீழை வைச்சிருந்திருக்கினம்” என்று சுதாகரன் கூறத் தொடர்ந்து அவர்

“கரவெட்டியிலை ஆர் செத்தாலும் சவ ஊர்வலத்தை அந்தப் புளிய மரத்தடியிலை நிற்பாட்டிப் பறைமேளத்தைக் கொஞ்ச நேரம் வாசிச்சுத்தான் போவினம் தம்பி” என்றவர் தொடர்ந்து

“ஆனால் தம்பி இந்த ஆமிக்காரர் அதை அடியோடை வெட்டிப் போட்டாங்கள்.” என்று கூறிவிட்டு அமைதியாக இருந்தார். சுதாகரனும்

எதுவும் கதைக்கவில்லை.
அவனுக்கேதோ தன் உறவினர் ஒருவர் இறந்தது
போன்ற துயரம் நெஞ்சை
அடைத்தது.
கொண்டக்டர் பலமாகச் சொன்னார்.
"புளியடியிலை இறங்குகிறவை இறங்குங்கோ"
புளியமரம் இறந்தாலும் புளியடி வாழ்கிறது.
சுதாகரன் எழும்பி இறங்குவதற்காக
முன்னுக்குச் சென்றான்.

*தினக்குரல் 2017*

# பனிவிழும் ஒரு நாள்...

அதிகாலை மூன்று மணி.
அலாரத்தின் சத்தம் கேட்டுத் திடுக்கிட்டு எழும்பிய சுதர்சன் யன்னல் சீலையை விலக்கி வெளியே பார்த்தான்.
வெள்ளை வெளேரென்று இருந்தது.
அவனுடைய 'காரை'ப் பனி மூடி வெள்ளையாக்கி விட்டிருந்தது.
திரும்பிக் கட்டிலைப் பார்த்தான். பூரணி ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள்.
அவளை எழுப்பாமல் பூனைபோல் நடந்து குளியலறைக்குச் சென்று காலைக் கடன்களை முடிப்பதில் கவனமானான்.

அவன் வேலை செய்யும் இடம் பக்கத்திலில்லை.
காரில் செல்லவே ஒரு மணித்தியாலம் வேண்டும்.
வீதியில் அவன் கார் மட்டும் ஓடிக்கொண்டிருந்தால்
மட்டும்தான் இது சாத்தியம்.
இல்லையெனில் இரண்டு மணித்தியாலங்கள்
எடுக்கும். அவனுடைய வேலைத் தலம் ஒரு
பெற்றோல் நிலையம்.
லண்டன் நகரத்து வீதிகள் அவனோடு
ஒத்துழைப்பதில்லை.
காலை 5 மணிக்கு அவன் நின்றாக வேண்டும்.
அப்போதான் அங்கு வேலை செய்யும் மற்றவர்
வீட்டுக்குச் செல்ல முடியும்.
இன்றைக்குச் சரியான பனி கொட்டிக்
கொண்டிருக்கிறது.
வேகமாகவும் கார் ஓட முடியாது.
ஊர்ந்து ஊர்ந்துதான் செல்ல முடியும்.
வேலைக்குச் சடுதியாக விடுப்பும் எடுக்க முடியாது.
பத்து மணித்தியாலங்கள் வேலை செய்ய
வேண்டும்.
இந்தப் பத்து மணித்தியாலங்களில் அவன் துப்புரவு
செய்ய வேண்டும் சாமான்கள் முடிந்திருந்தால்
அவற்றை நிரப்ப வேண்டும் காசாளர் வேலை
பார்க்க வேண்டும்.
அவனுக்குச் சில வேளை நாரி வலிக்கும்.
முள்ளந்தண்டு எரியும். என்ன செய்வது?

பல்லைக் கடித்துக் கொண்டு செய்ய வேண்டும்.
சில வேளை கொஞ்சம் ஓய்வாக நின்றால்
வீட்டிலிருந்து கமராவில் பார்க்கும் முதலாளி
ஏதாவது வேலை சொல்லிவிடுவார்.
இத்தனைக்கும் அவனுக்குக் கிடைக்கும் சம்பளம்
மணித்தியாலத்துக்கு ஐந்து பவுண்கள் மட்டுமே.
சம்பளத்தைக் கூட்டச் சொல்லிக் கேட்டால்
வெளியேற்றி விடுவார் என்கின்ற பயம்.
வெளியில் மூன்று பவுண்டுகளுக்கு வேலை
செய்வதற்கும் பலர் தயாராக இருந்தார்கள்.
இதனால் சுதர்சன் அடக்கி வாசித்துக் கொள்வான்.
காலைக் கடன்களை முடித்துக் கொண்டு
சமையலறைக்குள் சென்று தேனீர்
தயாரித்தான்.
அங்கே நின்றபடியே தேனீரைக் குடித்துவிட்டு
வந்து பார்த்தான் மனைவி இன்னும் தூங்கிக்
கொண்டிருந்தாள்.
பாவம் என்று மனதிற்குள் முணுமுணுத்துக்
கொண்டான்.
வேகமாக உடையை அணிந்து கொண்டு பையை
எடுத்துத் தோளில் மாட்டிக்கொண்டு புறப்பட்டான்.
வெளியில் வந்தபோது குளிர் அவன் முகத்தில்
பளாரென்று அறைந்தது.
வாகனத்துக்குக் கிட்டச் சென்றபோது கைகள்
விறைத்துவிட்டது.

பனி அப்படியே அவனது வாகனத்தின் மீது உறைந்து போயிருந்தது.
கதவைத் திறந்து பனியை விறாண்டும் தகட்டை எடுத்து விறாண்டினான்.
கை இருப்பதே தெரியாமல் விறைத்துப் போயிருந்தது.
வாழ்க்கை மீது அவனுக்கு வெறுப்பே வந்தது.
நேற்று அவன் அம்மா ஊரில் இருந்து எழுதிய கடிதம் ஞாபகத்துக்கு வந்தது.
'கட்டியவீடு முடியவில்லையாம்.
எப்படியும் தைக்குள்ளை முடிச்சால்தானாம் தங்கச்சிக்குக் கல்யாணம் முற்றாக்கலாமாம்.'
ஒருமாதிரிப் பனியோடு போராடி வெற்றி அடைந்துவிட்டான்.
'காரின்' சாவியை எடுத்துத் திருப்பினான்.
அவனின் போதாத காலம் அது இயங்க மறுத்துவிட்டது.
முடிஞ்ச மட்டும் திருப்பிப் பார்த்தான்.
அது நகர்வதாக இல்லை.
அவனுக்கு அழுகை வரும் போலிருந்தது.
அப்படியே இருந்தான்.
அம்மா எழுதியிருந்தாள்.
'தம்பி இஞ்சை ஊரிலை எல்லாரும் கார் வைச்சிருக்கினம். தங்கச்சி ஆசைப்படிறாள். உனக்கு ஏலும் எண்டு நினைக்கிறன்.

ஒரு பத்து லட்சம் அனுப்பினியெண்டால் வாங்கியிடலாம்.'

காரைவிட்டு வெளியில் இறங்கிப் போனற்றைத் திறந்து பார்த்தான்.

பிளக் வையரைக் கழட்டிப் பூட்டினான்.

இனிமேல் சரிவரும் எண்டு மனதிற்குள் சொல்லிக் கொண்டான்.

இன்று உண்மையில் அவனுக்கு வேலை இல்லை.

அங்கு வேலை செய்கின்ற ஒருவர் விடுப்பு எடுத்ததால் தான் அதைச் செய்வதாக முதலாளிக்கு வாக்குக் கொடுத்துவிட்டான்.

காருக்குள் ஏறி ஸ்ராட் செய்தான்.

அதற்கும் அவனது பிரச்சினை புரிந்திருக்கவேண்டும். இம்முறை அவனை ஏமாற்றாமல் சிரித்தது. அவனும் சிரித்தான். கார் மெதுவாக நகர்ந்தது.

வீதியில் கார்கள் மெதுவாக நகர்ந்து கொண்டிருந்தன. வழுக்காமல் இருக்க உப்புத் தூவி இருந்தார்கள்.

லண்டனில் குளிர் அதிகமானால் பனி விழலாம் என்ற அனுமானத்தில் வழுக்கலாமென்ற எதிர்பார்ப்பில் வீதிகளில் உப்புத் தூவுவார்கள்.

அன்று அவன் மனைவி கூறியது ஞாபகத்துக்கு வந்தது.

'இஞ்சரப்பா இந்தக் கோடைக்கு விடுமுறை

நாங்கள் போவமே. எல்லாரும் போகினம். நீங்கள் நெடுக உங்கடை அம்மா கேட்க கேட்க அனுப்பிக் கொண்டிருக்கிறியள். எங்களைக் கவனிக்காயளாம்.'
அவளின் நியாயமான கேள்வியும் ஆதங்கமும் அவனுக்கும் புரிந்தது.
அவனுக்கும் விடுமுறை போக ஆசைதான்.
மனைவி கேட்டபோது அவன் எதுவும் சொல்லவில்லை.
"சும்மா நெடுக அம்மாவை இழுக்காதையும்" என்று கடிந்துவிட்டான்.
தான் செய்வது பிழை என்பது அவனுக்குப் புரிந்ததுதான். ஆனால் அவளிடமிருந்து வந்த நியாயமான கோரிக்கையைத் தட்டிக் கழிக்க அவளைக் கடிந்து பேசுவதைத் தவிர வேறு வழி அவனுக்குத் தெரியவில்லை.
கார் இப்போ கொஞ்சம் வேகமாகச் சென்று கொண்டிருந்தது.
இன்னும் பதினைந்து நிமிடத்தில் நின்றாக வேண்டும்.
வீதி வெறிச்சோடித்தான் இருந்தது.
அவனுடைய மனம் இன்னுமொரு வேலை செய்வதைப் பற்றி யோசிக்கத் தொடங்கி இருந்தது.
அம்மாவும் தங்கச்சியும் ஆடம்பர வாழ்க்கையை நோக்கி நகர்வது அவனுக்குப் புரிந்தது.
ஆனால் தாய்க்கு இதனை உணர்த்த அவனால்

முடியவில்லை.
ஊரில் இருப்பவர்கள் வெளிநாட்டில் ஏதோ காசு மரத்திலை முளைக்குதென நினைப்பதாக அவன் நண்பன் ஒருதரம் சொன்னது நினைவுக்கு வந்தது.
அவனுடைய அக்காவும் அடிக்கடி கடிதம் எழுதிக் காசு கேட்பாள்.அவளின் கணவன் ஒரு சோம்பேறி.
மச்சான் வெளியில் இருக்கிறார் என்றதும் வேலைக்குப் போவதை விட்டு விட்டார்.
மனைவியை நச்சரித்துக் கடிதம் எழுத வைப்பதும் அவரே.
எந்தப் பொறுப்பையும் தன்னுடையதாக்காத உதவாக்கரை.
இதையெல்லாம் நினைக்க நினைக்க அவனுக்கு மண்டை இடிக்கத் தொடங்கி இருந்தது.
வேலைத் தலத்துக்கு வந்துவிட்டான்.
கணக்குகளைப் பொறுப்பெடுத்துக் கொண்டான்.
இப்போ வேலை செய்து கொண்டிருந்தவர் அடுத்த வேலைக்குச் செல்லத் தயாராகிக் கொண்டிருந்தார்.
அவரிடம் சுதர்சன்
"அண்ணை உங்கடை இடத்திலை எனக்கும் ஒரு வேலை கேட்டுப் பாருங்கோ" என்று கேட்டுக் கொண்டான்.
அவர் பெயர் சுந்தரமூர்த்தி.
இவனைவிட வயது மூத்தவர்.
அவருக்கு மூன்று சகோதரிகள்.

அவர்களுக்காக இன்னும் முப்பந்தைந்து வயதாகியும் கல்யாணம் கட்டாமல் ஓடிஓடி வேலை செய்து கொண்டிருக்கிறார்.

“அதுக்கென்ன தம்பி கேட்டுப் பார்க்கிறன்.” என்று கூறிவிட்டு அவர் புறப்பட்டுவிட்டார்.

அவனின் வேலை ஆரம்பமாகிவிட்டது.

இன்று பனி கொட்டுவதால் பெற்றோல் நிலையம் அவ்வளவு கூட்டமாகவில்லை.

“இந்த முறை கடன்பட்டோ என்னவோ மனைவியையும் பிள்ளையையும் எப்படியும் விடுமுறைக்குக் கூட்டிக் கொண்டு போகவேணும்” மனதுக்குள் நினைத்துக் கொண்டான்.

எங்கு போவதென்று யோசிக்கத் தொடங்கினான்.

அவனுடைய சிந்தனையில் எதுவும் தட்டுப்படவில்லை.

தொலைபேசி அடித்தது.

முதலாளிதான் எடுத்திருந்தார்.

“சனம் இல்லை எண்டால் ஏன் வாய் பார்த்துக் கொண்டு நிற்கிறாய். முன் பக்கத்தைத் துப்பரவு பண்ணன்.”

சுதர்சன் எதுவும் சொல்லவில்லை.

மறு பக்கத்தில் படாரென்று தொலைபேசி வைக்கும் சத்தம் கேட்டது.

தொழில்நுட்பம் வளர்ந்ததால் வந்த பிரச்சினை.

கமராவில் வீட்டிலிருந்து பார்த்துக் கதைக்கிறார்.

‘தாறது 5 பவுண் அதுக்குள்ளை அவற்றை கதை’

சுதர்சன் தனக்குள் முணுமுணுத்துக்
கொண்டான்.
மீண்டும் தொலைபேசி கிணுகிணுத்தது.
எடுத்தது அவன் நண்பன்.
‘மச்சான் அந்தக் காசு எடுக்கலாமே.அவசரமாய்
வேணும்’
ஒரு மாதத்துக்கு முன் நண்பனிடம் தாய்க்கு
அனுப்புவதற்காக வாங்கியிருந்தான்.
பொறுத்த நேரத்தில் கேட்கிறான்.
கொடுத்துத்தானே ஆகவேண்டும் ‘சரி மச்சான்
பார்க்கிறன்’ என்று சொல்லிவிட்டு வைத்து விட்டான்.
ஒரு மனிதனின் உழைப்பில் ஓராயிரம் தேவைகள்.
‘இந்த முறை விடுமுறை போவது சாத்தியப்படாது.
மனிசியைக் கொஞ்சம் சமாளிக்கவேணும்’
மனதுக்குள் நினைத்துக் கொண்டான்.
அம்மாவுக்கு அனுப்ப என்ன செய்வது?
சீட்டும் எடுக்க முடியாது! எடுத்தாலும் அது
நண்பனுக்குக் கொடுக்க வேண்டும்.
அதை நம்பித்தான் விடுமுறை பற்றி யோசித்தவன்.
இப்போ அதுவும் முடிந்துவிட்டது.
“இதுவரைக்கும் இரண்டு வீடு கட்டிற காசு
அனுப்பியாச்சு.
இன்னும் வீடு முடியேல்லை. அம்மாவின்
ஊதாரித்தனமும் ஆடம்பர எண்ணமும்தான்” என்று
மனைவி கத்திய குரல் காதில் ஒலிக்கிறது.

எவ்வளவுதான் அவளை அடக்கினாலும் அவள் சொல்கிற உண்மைகளைத் தூக்கி எறிய முடியாது என நினைத்துக் கொண்டான். தன்னைக் கலியாணம் கட்டி வந்த நாள் தொடக்கம் தன் மனைவி மற்றவர்கள் போல் வாழவில்லை என்ற உண்மை அவனை வருத்தத்தான் செய்தது.

அவனுடைய வேலை முடிய இன்னும் ஒரு மணித்தியாலம்தான் இருக்கிறது.

'வேலை முடியச் சீட்டுக் கூறலுக்குப்போய் என்ன கழிவெண்டாலும் கழிச்சு எடுத்து நண்பனின் கடனைக் கொடுக்க வேண்டும்.

அப்படிக் கொடுக்காவிட்டால் இன்னும் ஒரு முறை தேவையான போது கேட்க முடியாது' என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டான்.

அம்மாவுக்குத் தன் நிலைமையை விளக்கி விரிவாய் ஒரு கடிதம் எழுத வேண்டும் என்றும் நினைத்துக் கொண்டான்.

அவனிடமிருந்து வேலையைப் பொறுப்பேற்பவரும் வந்து விட்டார்.

வேலையைப் பொறுப்புக் கொடுத்துவிட்டுக் காரை நோக்கி நடந்து கொண்டிருந்தான் சுதர்சன்.

மனம் எப்படியும் இன்னொரு வேலை தேட வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தது.

*தினக்குரல் 2017*

# மாறிலிகள்

தமிழர்கள் புலம் பெயர்ந்தபோது புதிய சூழலும் பழக்க வழக்கங்களும் மாறுதற்கான சூழ்நிலைகள் ஏற்படலாமெனக் கதிரேசன் நினைத்தான்.
தமிழர்கள் மாறி விடுவார்கள்.
சாதி ஒழிந்துவிடும் என்றெல்லாம் கதிரேசன் கனவு கண்டிருந்தான்.
ஏற்றத் தாழ்வுகள் அறவே ஒழிந்து விடும் என்றும் நினைத்தான். அவன் நினைத்தமாதிரி எல்லாம் இல்லை என்றான போது அவன் உடைந்து போய் விட்டான். கதிரேசன் தன்னுடைய காதலை வந்து சொன்ன போது அவன் பெற்றார் கொண்ட கோபம் அவனைத் திடுக்கிட வைத்தது.

'நீ காதலிச்சுக் கட்டிறதைப் பற்றி எங்களுக்கொண்டும் ஆட்சேபணை இல்லை. ஆனால் உந்தப் பெட்டை வேண்டாம்' கதிரேசனின் அப்பா உறுதியாகச் சொன்னார்.

'நீ உந்தப் பெட்டையைக் கட்டிக் கொண்டு வந்தால் நீ எங்களை மறந்திடு'

கதிரேசனின் அம்மா உரத்த குரலில் கூறினாள்.

கதிரேசன் தாயை வியப்போடு பார்த்தான்.

கதிரேசனின் தாய் ஒரு கவிஞை. தாயின் சில கவிதைகளால் தாயைப் பெருமையாக நினைத்தவன் கதிரேசன். இப்போ தான் எழுதியவற்றுக்கு எதிராகக் கதைப்பதைப் பார்க்கும்போது தாயின் மீது வெறுப்புத்தான் வந்தது. அவர்கள் ஏன் இப்படிக் கதைக்கிறார்கள் என்பதும் அவனுக்குத் தெரியும் ஆனாலும் அவர்கள் வாயால் சொல்ல வைக்க அவன் விரும்பினான்.

"ஏன் இந்தப் பெண்ணைக் கட்டினால் என்ன?" என்று கதிரேசன் கேட்டான்.

"அவள் எங்கடை சாதியில்லை. சரிப்பட்டு வராது" என்று தகப்பன் கூறினார்.

"அவையள் எங்களைவிட நல்லாய்த்தானே இருக்கினம்."

"உனக்குச் சொன்னால் விளங்காது. அவளை நீ கட்ட விடமாட்டம்"

ஒரே வார்த்தையில் சொல்லி முடித்தார் கதிரேசனின் அப்பா.

கதிரேசன் இதை எதிர் பார்க்கவில்லை.
வெளிநாட்டில் நம்மவர் சாதி பார்க்கமாட்டார்கள் என்றே நினைத்தான்.
சில நிமிடங்கள் எந்தவித சப்தமும் இல்லாமல் அமைதி ஆக்கிரமித்திருந்தது.
கதிரேசன் அந்தக் குடும்பத்தில் மூன்றாவது பிள்ளை.
மூத்த இருவரும் பெண்பிள்ளைகள்.
அவர்களுக்குத் திருமணம் முடிந்துவிட்டது.
மூத்த பெண்ணின் பெயர் கௌரி.
கௌரியின் கணவர் சிவராசன் என்கின்ற சிவா.
கதிரேசனின் அம்மா உடனேயே மூத்த பெண்ணுக்குத் தொலைபேசி மூலமாக விடயத்தைக் கூறிவிட்டாள்.
கௌரி விடயத்தைத் தன் கணவனுக்குக் கூற சிவா தாண்டவமாடத் தொடங்கினான்.
இப்போ கௌரி வீடு போர்க்களமாகிவிட்டது.
சிவாவின் அப்பாவும் சிவாவும் சேர்ந்து கௌரியை உண்டு இல்லை என்றாக்கி விட்டார்கள்.
“உன்ரை தம்பி இந்தச் சாதி குறைஞ்சவளைக் கட்டினால் நீயும் வீட்டைபோக வேண்டி வரும்.
இந்தப் பிரச்சினை தீருமட்டும் உன்ரை அம்மாவும் அப்பாவும் எங்கடை வீட்டுப் பக்கம் வரக் கூடாது.”
கௌரியின் கணவன் கத்திச் சொன்னான்.
கௌரி வாயடைத்துப் போயிருந்தாள்.
அவளுக்கு முன்னால் இந்தப் பிரச்சினை பூதாகரமாக உருவெடுத்திருந்தது. தம்பி ஒரு

பக்கம் கணவன் ஒரு பக்கம். அவளுக்கும் தன் தம்பி சாதி குறைஞ்சவளைத் திருமணம் புரிவது விருப்பமில்லைத்தான்.
ஆனால் அது அவனுடைய விருப்பம் என்கின்ற பார்வையும் இருந்தது.
இதைச் சாட்டாக வைத்துத் தன் கணவனின் அப்பா கணவனைத் தூண்டிவிட்டு ஆடுகிற ஆட்டம் அவளுக்குச் சகிக்கவேயில்லை.
தாய் வீட்டுக்குத் தொலைபேசி எடுத்தாள்.
கதிரேசனின் அம்மாதான் தொலைபேசியை எடுத்தாள்
“அம்மா நீங்கள் என்ன சொல்லிறியள்.” என்று கௌரி கேட்டாள்.
“என்னத்தைச் சொல்லிறது..உவன் சாதி குறைஞ்சவளைக் கட்டிக் கொண்டு வந்தால் நான் என்னெண்டு நாலுபேரோடை கதைக்கிறது.”
இதைக் கேட்ட கௌரிக்கு வியப்பாக இருந்தது.
அம்மாவா இப்படிக் கதைப்பது தனக்குள் தானே கேட்டுக் கொண்டாள்.
“அம்மா நீங்கள் உங்கை கூட்டங்களிலை வேறை மாதிரியெல்லே கதைக்கிறனீங்கள்.”
“உனக்கென்ன விசரே அதெல்லாம் சும்மா ஒரு மரியாதைக்காகக் கதைக்கிறது.
அதை எல்லாம் வாழ்க்கையிலை பாவிக்க ஏலுமே”
கௌரி விக்கித்துப்போய் நின்றாள்.
இவர்கள் இருவரினதும் சம்பாசணைகளை கேட்டுக்

கொண்டிருந்த கதிரேசனுக்குக் கோபம் உச்சத்துக்குப்போக தொலைபேசியைப் பறித்துக் கௌரியோடு கதைத்தான்.

“அக்கா எனக்கு மற்றவையின்ரை கதை வேண்டாம். நீ என்ன நினைக்கிறாய். அதைச் சொல்லு.”

“நான் என்னத்தைச் சொல்லிறது. உன்ரை வாழ்க்கை நீ தான் முடிவெடுக்கவேணும். ஆனால் இஞ்சை உன்ரை அத்தான் தாம் தூமென்று துள்ளிக் குதிக்கிறார்.

நீ அவளைக் கட்டினால் என்னைக் கலைச்சுப் போடுவராம்” இப்போ கதிரேசன் மௌனமானான்.

கௌரி தொடர்ந்து கதைத்தாள்.

“இதுக்கு நீ ஒண்டும் யோசியாதை.

அத்தானின்ரை துள்ளலுக்குப் பயப்பிடாதை. எல்லாம் ஒரு வெருட்டல்தான்.

நான் சமாளிப்பன் நீ உன்ரை மனம் என்ன சொல்லுதோ அதைச் செய்” கதிரேசன் குழப்பமடைந்தாலும் கௌரி இறுதியாகச் சொன்ன ஆறுதல் அவனுக்குத் தைரியத்தைக் கொடுத்தது. தாயை ஒரு புழுவைப் பார்ப்பது போல் பார்த்தான்.“நாகரிகமடைஞ்ச இந்த நாட்டுக்கு வந்தும் நீங்கள் மாறவேயில்லை.

இன்னும் ஊரிலை இருக்கிற மாதிரி வாழப் பார்க்கிறியள். நான் அப்பிடி வாழமாட்டன். என்ரை முடிவு இந்த நாடுகளிலையும் சாதி பார்க்கிற

ஆக்களுக்கு ஒரு பாடமாக இருக்கவேணும்"
"அப்பிடி எங்களை மீறிக்கட்டினால் இங்கை வராதை." தாயும் தகப்பனும் சாபம் இட்டதுபோல் கூறினார்கள். அவர்களை முறாய்த்துப் பார்த்துவிட்டு கதவை இறுகச் சாத்திக் கொண்டு வெளியேறினான்.
கதிரேசன் அவன் காதலி றீனா வீட்டுக்கே நேராகப் போனான்.அங்கு நிலைமை தலைகீழாகப் போய் விட்டிருந்தது. அவன் எதிர்பார்க்காத ஒரு சூழ்நிலை அது. அவன் அங்கு சென்றபோது றீனாவின் அப்பாதான் எதிர் கொண்டார்.
"தம்பி கொஞ்சம் இருங்கோ. நீங்கள் குறை நினையாமல் உங்கடை அப்பா அம்மா சொன்ன பிள்ளையைக் கட்டுங்கோ. றீனாவை விட்டிடுங்கோ"
கதிரேசன் கொதிக்கத் தொடங்கினான்.
"ஏன் இந்த முடிவெண்டு சொல்லுங்கோ."
"எனக்கு என்ரை மகள் வேறை சமயத்திலை கட்டிறது அவ்வளவு சம்மதமாய் இல்லை.
நீங்களும் அவ்வளவாய்ப் படிக்கேல்லை. எங்கடை குடும்பத்திலை எல்லாரும் படிச்சவை. றீனாவும் உம்மைவிடப் படிச்சவ. அவவை மறக்கிறது உமக்கும் நல்லது றீனாவுக்கும் நல்லது"
"றீனாவை வரச் சொல்லுங்கோ.
அவள் சொல்லட்டும் நான் போறன்." என்று கதிரேசன் கத்தினான்.
றீனா வெளியில் வந்தாள்.

அவள் கண்களில் கண்ணீரில்லை. கவலையும் இருக்கவில்லை. “கதிர் அப்பா சொல்லிறதை நான் யோசிச்சுப் பார்த்தன்.

சரிபோலத்தான் படுகுது. நீங்களும் யோசிச்சுப் பாருங்கோ.” அவள் அப்படிக் கூறியபோது அவன் எதுவும் கூறாது அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அவனுடைய பார்வையில் அவள் பயந்து கதிரையில் இருந்து எழுந்துவிட்டாள்.

அவனுடைய பார்வை அவள் மனதைச் சுட்டெரித்திருக்க வேண்டும்.

மெதுவாக உள்ளே சென்று கதவைச் சாத்திவிட்டாள். கதிரேசன் மட்டுமே வெளிவிராந்தாவில் இருந்தான். சிறிது நேரம் அப்படியே இருந்து அந்த மூடிய கதவை வெறித்துப் பார்த்துக் கொண்டவன் மெதுவாக எழுந்து வீட்டை நோக்கி நடந்தான். வீட்டுக்கு வந்து தாய்க்குச் சொல்லிச் சொல்லிக் கதறினான். உள்ளுக்குள் அவன் அம்மாவின் மனது சந்தோசப்பட்டாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் “உதுக்குத்தான் வேண்டாம் என்றனாங்கள்.

உதுகள் உப்பிடித்தான்” என்று அவள் சொல்லக் கதிரேசன் தன் தாயைப் பார்த்த பார்வைக்கு விளக்கமேயில்லை.

*வீரகேசரி 2017*

# கனவுகளைத் தொலைத்தவள்

அவள் பாவம்.
சிறிய வயது.
தனக்கு என்ன நடந்ததென்றே புரியாத வயது.
வித்தியாசமாக ஏதோ நடந்துவிட்டது என்பதை மட்டும் புரிந்து கொண்டாள்.
தாயிடம் தன் நிலைமையை விளக்கியபோது தாயின் முகத்தில் தோன்றிய புன்னகைக்கு ஈடே இல்லை.
அவள் உடலில் தோன்றிய மாற்றம் உருவாகி வருடங்களாகி விட்டன.
அவள் வாழ்வில் எந்தவிதமான மாற்றங்களும் ஏற்படவில்லை.
இதற்கான காரணம் அவளுக்கும் தெரியவில்லை.

அவளின் பெற்றாருக்கும் தெரியவில்லை.
அவளின் பெயர் காஞ்சனா.
இந்த மாதத்தோடு அவளுக்கு வயது முப்பத்தைந்தாகிறது.
அவளின் பாடசாலைக் காலங்களில் காதலிக்க முயற்சித்திருந்தாள். கைகூடவில்லை.
காதலிப்பது அவளுக்கு அவ்வளவு சுலபமாகவும் இருக்கவில்லை.
மற்றவர்கள் திடீர் திடீரென்று காதலில் விழும்போது அவளுக்கு வியப்பாக இருந்தது.
தன் உருவைத் தானே கண்ணாடியில் பார்ப்பாள்.
தன் அழகையிட்டு அவளுக்குப் பெருமை.
உண்மையில் அவள் நல்ல அழகிதான்.
இருந்தென்ன! காதலும் வரவில்லை கல்யாணமும் வரவில்லை.
அவளின் அப்பா பல வரன்களை ஒழுங்கு செய்தார். வருவார்கள். பார்ப்பார்கள்.
பிறந்த ஊர் கேட்பார்கள். அந்த ஊரில் தங்களுக்குத் தெரிந்த சில பெயர்களைச் சொல்லி ‘அவர்களை உங்களுக்குத் தெரியுமா?’ என அவளின் அப்பாவைக் கேட்பார்கள். ‘தெரியும்’ என அப்பா சொன்னால்’ அவர்கள் உங்களுக்குச் சொந்தமா?’ எனக் கேட்பார்கள்.
‘இல்லை’ என்று அவர் சொன்னால் வேறு சிலரின் பெயர்களைச் சொல்லித் தங்களுக்குத்

தேவையான விடையைப் பெறுவதில் மும்முரமாக இருப்பார்கள்.
இவை எல்லாம் அவளின் குடும்பம் என்ன சாதியென அறிவதுதான் நோக்கம்.
அவர்களின் சாதியாக அவள் குடும்பம் இல்லை எனும்போது சாதுரியமாகப் பிறகு சொல்வதாகக் கூறி நழுவி விடுவார்கள்.
காஞ்சனா ஒன்றும் ஊரில் பிறந்தவளல்ல.
லண்டனில் பிறந்து லண்டனில் வளர்ந்து லண்டனில் வயதுக்கு வந்தவள்தான்.
இந்தச் சாதி விடயம் அவளுக்குத் தெரியாது.
தகப்பன் சொல்லித்தான் தெரியும். அவள் லண்டனில் பிறந்து வளர்ந்தாலும் ஊரிலே ஒரு பிள்ளை வளர்வதுபோல் தான் வளர்ந்தாள்.
அவளைப் பெண்கேட்டு வருபவர்களின் மகனும் லண்டனில் பிறந்து வளர்ந்தவன் தான்.
'எங்கடை பிள்ளையை விடேக்கை நாங்கள் நல்ல இடத்திலை விடவேணும்' என்று பெரிய காரணம் சொல்வார்கள்.
என்னதான் வளர்ந்த நாடுகளுக்கு வந்தாலும் தமிழ்ச் சமூகம் இப்படித்தான் வாழ்கிறது.
அவர்கள் தங்களை மாற்றிக் கொள்வதில்லை
இது புதிய தலைமுறைப் பிள்ளைகளுக்குத் தவறாகத் தெரிந்தாலும் பெற்றார்களால் பல காரணங்கள் சொல்லப்பட்டு அடக்கப்பட்டு

விடுகிறார்கள். சில பிள்ளைகள் இதனால் காதல் செய்வது சிறந்தது என நினைத்து விடுகிறார்கள். ஏனென்றால் காதலென்று வரும்போது சாதிப் பிரச்சினை அங்கு பெரிதாக எடுபடுவதில்லை.

'சாதி குறைந்தவர்கள் ஒழுக்கமற்றவர்கள் சுகாதாரம் தெரியாதவர்கள்' என்று தங்கள் பிள்ளைகளுக்கு நாளும் பொழுதும் அவர்களை மூளைச் சலவை செய்து விடுவார்கள்.

சில பெற்றார்கள் எங்கள் பிள்ளைகளுக்கு எதுவும் தெரியாதெனக் கூறினாலும் நடை முறையில் எதுவுமே இல்லை.

காஞ்சனாவைப் பலர் பார்க்க வந்தும் இன்னும் எதுவும் நடக்கவில்லை.

சில மாப்பிள்ளைகள் அவர்கள் நிராகரித்தது.

சில மாப்பிள்ளைகள் காஞ்சனாவின் அப்பா நிராகரித்தது.

அவளின் ஆசைகளை யாரும் பொருட்படுத்து வதில்லை.

அவளின் உணர்வுகளை யாரும் உள்வாங்குவது மில்லை.

அவளின் பெற்றாராகட்டும் அல்லது அவளை வந்து பார்க்கின்ற மாப்பிள்ளைப் பெருமக்களாகட்டும் அவளை ஒரு பெண்ணாகக் கருதவேயில்லை.

பதினைந்து வயதில் ருதுவடைந்தாள்.

'இனி என்ன நீங்கள் மாப்பிள்ளை பார்க்க

வெளிக்கிட வேணும்' இப்படி காஞ்சனாவின் அப்பாவைப் பார்த்து கிண்டல் செய்தார்கள்.
காஞ்சனாவும் மெல்லிய புன்னகையை உதிர்த்து அவர்களின் கிண்டலுக்கு உரம் சேர்த்தாள்.
ஏதோ இனி தனக்குக் கல்யாணம் நடக்கப்போகிறது என்று கனவு கண்டாள்.
காஞ்சனாவைப் பொறுத்த வரை அவளுக்குக் காதல் கல்யாணத்தில் அவ்வளவு விருப்பமில்லை.
லண்டனில் பிறந்தாலும் பெற்றாரின் கையில் தன் திருமணத்தை விட்டுவிட்டாள்.
அவள் ருதுவானவுடன் பெரியவர்களால் அவள் கிண்டலடிக்கப்பட்டபோது அவள் கனவுலகத்தில் மிதந்தாள் என்பதுதான் உண்மை.
யாரோ தெரியாத ஒரு அந்நியனை தன் கணவனாக எண்ணி அவள் கனவுகள் வலம் வந்தன. இப்படிப் பல வருடங்கள். எதுவுமே நடக்கவில்லை.
அவள் சர்வகலாசாலை சென்றபோது அவளின் அம்மாவும் அப்பாவும் 'பிள்ளை கவனம். யாரையும் பார்த்திடாதை. நாங்கள் இருக்கிறம்.
உனக்கேற்ற கணவனை நாங்கள் பார்த்துத் தருவம்' என்று எச்சரித்து அனுப்பியிருந்தார்கள்.
இதனால் அவளுக்குக் காதலும் வரவில்லை.
இன்னும் கல்யாணமும் நடக்கவில்லை.
உணர்ச்சிகள் கொப்புளிக்கும்போது வெறும் தண்ணீரைக் குடித்துத் தன்னை அடக்கிக் கொள்வாள்.

இப்போ அவளுக்கு முப்பத்தி ஐந்து வயதாகிவிட்டது.
கல்யாண வயதையும் தாண்டியாகி விட்டது.
இப்போ அவளை முதிர்கன்னி என்கிறார்கள்.
ஒரு தடவை அவளின் கூடப்படித்த நண்பியின் வளைகாப்புக்கு அழைப்பு வந்திருந்தது. அவளுக்குச் சந்தோசமாக இருந்தது.
அந்த நிகழ்ச்சிக்கென வெம்பிளி சென்று கிருஸ்ணாவில் நல்லதொரு சாறி வாங்கிக் கொண்டாள்.
தாயையும் கூட்டிக் கொண்டு புறப்பட்டாள். அங்கு பலர் கூடி இருந்தனர்.
பெரும்பாலானவர்களுக்குக் காஞ்சனாவையும் தாயையும் தெரியும்.
ஒரு சிலர் அவளைப் பார்த்து முணுமுணுத்துக் கொண்டனர்.
அந்தக் கட்டம் வந்ததும் எல்லோரும் எழும்பி ஒருவர் பின் ஒருவராகக் காஞ்சனாவின் நண்பிக்கு வளைகாப்பிட்டுக் கன்னத்தில் சந்தனம் இட்டனர்.
காஞ்சனா போகவில்லை.
அவள் வராதிருப்பதைக் கவனித்த அவள் நண்பி கையசைத்து அவளைக் கூப்பிட்டாள்.
காஞ்சனாவும் எழும்பிச் செல்ல அவளின் நண்பியின் அம்மா மெல்ல முன்னுக்கு வந்து ‘காஞ்சனா இஞ்சை ஒருக்கா வாரும்’ என்று அவளைக் கூட்டிக் கொண்டு உள்ளே சென்று

‘காஞ்சனா குறை நினைக்காதையுங்கோடா வயித்துப் பிள்ளைத் தாச்சிக்கு நீர் சந்தனம் பூசக் கூடாது’ என்று சொல்ல காஞ்சனாவுக்கு முகத்தில் யாரோ அறைஞ்சது போல இருந்தது. அவளுக்கு எதுவும் புரியவில்லை.

ஏன் அப்படிச் செய்தார்கள்? என்று தனக்குள் தானே கேள்வி எழுப்பிக் கொண்டாள்.

சமூகத்திலுள்ள இப்படியான சில விடயங்கள் இந்த நாட்டிலே பிறந்து இந்த நாட்டிலே படித்த அவளுக்கு ஆச்சரியத்தைத் தந்தது.

வெளியில் வந்து தாயைக் கூப்பிட்டாள். அப்போ யாரோ தாய்க்கு ‘நீங்களெண்டாலும் மகளுக்குச் சொல்லக் கூடாதோ’ என்று கூறிய வார்தைகள் அவள் காதுகளிலும் விழுந்தது.

எதையும் கேளாதவள் போல் தாயையையும் கூட்டிக் கொண்டு வெளியில் சென்று விட்டாள். வழி நெடுகிலும் இருவரும் ஒன்றுமே கதைக்கவில்லை.

வீட்டுக்கு வந்ததும் காஞ்சனா விக்கிவிக்கி அழுதாள். தாய் அவளை ஆற்றுப்படுத்திவிட்டு “ இதுக்கெல்லாம் அழக்கூடாது” என்று ஆறுதல் சொன்னாள்.

“ஏனம்மா நான் செய்யக் கூடாது?” என்று காஞ்சனா கேட்டாள்.

“உனக்குக் கல்யாண வயது வந்தும் நடக்கயில்லைத்தானே.

அதனாலை அதை அபசகுனமாய் நினைக்கினம். அவை கிடக்கினம் விடு” காஞ்சனாவுக்கு இப்பவும் அது புரியவேயில்லை.

அப்போதான் வீட்டுக்குள் நுழைந்த காஞ்சனாவின் அப்பா “நாளைக்குப் பிள்ளையைப் பார்க்க வருகினம்” என்ற செய்தியைக் கூறினார்.

காஞ்சனாவின் அம்மா நடந்ததைக் கூறினாள்.

“ஒண்டுக்கும் கவலைப்படாதையுங்கோ.

இந்த முறை எல்லாம் நல்லாய் நடக்கும்” என்றார்.

என்ன நம்பிக்கை. இந்த நம்பிக்கைக்கு அடித்தளம் வருகின்ற மாப்பிள்ளை வீட்டாரும் இவர்களும் ஒரே சாதி என்பதுதான். அவருக்கு ஒரே சந்தோசம்.அடுத்த நாளும் வந்தது.

மாப்பிள்ளை வீட்டாரும் வந்தனர்.

பெண் பார்க்கும் படலம் அழகாக நடந்தது.

அவர்களுக்குப் பெண்ணைப் பிடித்து விட்டது.

சாதகத்தைக் கேட்டார்கள்.

சாதகம் கொடுக்கப்பட்டது.

“ஏதும் பாரதூரமான குற்றம் இருக்கோ” என்று மாப்பிள்ளையின் அப்பா கேட்டார்.

“நாங்கள் அறிஞ்ச அளவிலை ஒண்டும் இல்லைப் பாருங்கோ” அவர்கள் சாதகத்தோடு போய்விட்டார்கள்.

மூன்று நாட்கள் கடந்து விட்டன. பதில் ஏதும் வரவில்லை.

நான்காம் நாள் மாப்பிள்ளையின் அப்பா வீடு வந்திருந்தார்.
காஞ்சனா முன்னுக்கு வரவில்லை.
காஞ்சனாவின் அப்பாவும் அம்மாவும் பதட்டத்தோடு அவரையே பார்த்துக் கொண்டிருந்தனர்.
அவர் செருமிக் கொண்டு ஆரம்பித்தார்.
“எங்கடை பொடியனுக்கு உங்கடை மகளை நல்லாய்ப் பிடிச்சிருக்கு.”
இவர்கள் இருவரும் மெதுவாகச் சிரிக்க ஆரம்பித்தனர்.
அவர் தொடர்ந்தார்.
“ஆனால் சாதகம் கொஞ்சம் பிரச்சினை.
உங்கடை மகளின்ரை சாதகத்திலை கனக்கப் பாவக் கிரகங்கள் கூடி நிற்கினம்.
இராகுவும் கேதுவும் ஒன்றையொன்று பார்க்கிறது மாப்பிள்ளைக்குப் பாதகம் என்று சாத்திரியார் சொல்லிறார். நான் பாருங்கோ உதிலை அவளவு நம்பிக்கை கொண்டவனில்லை.
நம்ம மனிசி பிடிவாதமாக நிற்கிறா.
குறை நினைக்காதையுங்கோ” என்று கூறிவிட்டுக் காஞ்சனாவின் சாதகத்தை அவர் மடியில் வைத்து அவர் எழுந்து நடந்தார்.காஞ்சனாவின் பெற்றார் திகைத்துப் போயிருந்தனர்.
அறைக்குள் இதைக் கேட்ட காஞ்சனா சோகமாக இருந்தாள்.

அவளுக்கு முன்னால் அந்தமாத சஞ்சிகையொன்றில் வந்த நக்கீரன் மகளின் ‘அவள்’ என்ற கவிதை படபடத்துக் கொண்டிருந்தது.

வனிதையர்க்கு விடுதலையாம் எங்கெங்கும்
குரல்கள் ஒலித்தபடி
இவள் கண்ணீர் சிந்தி
முதிர் கன்னியாய் வீட்டுக்குள்
துறவறம் பூண்டு
கனவுகள் தொலைத்த
கைம் பெண்ணாய்
சீதனச் சந்தையில் விலை கூவி
விற்கும் பொருளாய்
மகவற்று மலடியென
பட்டம் பெற்று
வன் புணர்ந்து
கசக்கி எறியும்
வலிமையற்ற பூவாய்
ஆதிக்க அடிமையாய்
இன்னும் இருக்கிறாள்.

*தினகரன் 2018*

# வயிற்றில் சுமந்தவள்

மாக்சிம் கார்க்கியின் அம்மா பற்றிய நாவல் படித்திருக்கிறேன்.
ரா. கணபதியின் அம்மாவும் படித்திருக்கிறேன்
ஆனால் என்னவோ யாசகனின் அம்மா இவர்கள் எல்லாரையும் விடப் பல படிகள் உயரத்தில் நிற்பதாகவே என் மனதிற்குப்படுகிறது.
அவனின் தாயின் பெயர் ஆதிரை.
அவள் அதிகமாக யாரோடும் பழகுவதில்லை.
கோயிலுக்குச் சென்று கடவுளைக் கும்பிடுவதில்லை.
யாசகன் - மாறன் - சாந்தன்- பூரணன் - பூரணி -அவள் கணவன் இவர்கள் தான் அவளின் உலகம்.
இவர்களுக்காக அவள் எதுவும் செய்வாள்.

அவள் ஐந்து பிள்ளைகளுக்குத் தாயாக இருந்த போதும் யாசகனும் மாறனும் மட்டும்தான் அவளின் கடினமான காலங்களோடு போராடியவர்கள்.
யாசகன் அவளின் செல்லப் பிள்ளை.
எனது நண்பன்தான் யாசகன்.
நேரம் கிடைக்கும் போதெல்லாம் தாயைப் பற்றியே கதைப்பான்.
நானும் சில தடவைகள் அந்த அம்மாவைப் பார்த்திருக்கிறேன்.
மிகச் சாதுவான அன்பான அம்மா.
அந்த அம்மா இவர்களை வளர்க்க படிப்பிக்க படாதபாடுபட்டாள்.
யாசகனின் அப்பா ஆசிரியராக இருந்தாலும் அவன் அம்மா பலகாரம் சுட்டு விற்றே அவர்களை வளர்த்தாள்.
காலை மூன்று மணிக்கு எழுவாள்.
அப்பம் - தோசை - இடியப்பம் என எல்லா வகையான பலகாரமும் அவள் செய்து அவற்றை விற்று வரும் பணத்தில் அவர்களின் தேவையைப் பூர்த்தி செய்வாள்.
அம்மா என்கின்ற பாத்திரம் ஒவ்வொருவர் வாழ்விலும் பிரகாசமான ஒரு ஒளி.
நானும் யாசகனும் நண்பர்களாக இருந்தாலும் கூடப் பிறந்த சகோதரர்களாகவே பழகிக் கொண்டோம்.
காலைவேளைகளில் அம்மா சுடும் அப்பங்களை ஒரு பெட்டியில் போட்டு மாறனிடம் கொடுத்தால் மாறன்

அவற்றைத் தலையில் வைத்துக் கொண்டு விற்கப் புறப்படுவான்.
அவனின் பின்னால் சாந்தன் ஒரு கம்பு கொண்டு காகம் கலைத்துக் கொண்டு செல்வான்.
யாசகனை மட்டும் யாரும் எதுவும் செய்ய விடுவதில்லை.
அப்பம் விற்று வரும் பணத்தைக் கொண்டுதான் அன்றைய சாப்பாட்டுக்கான மரக்கறியும் மீனும் வாங்கப்படும்.
என்றைக்காவது ஒரு நாள் தன் நாலு ஆண் பிள்ளைகளும் படித்து நல்லாய் வந்து தன் துன்பங்களைத் தீர்ப்பார்களென்று அந்தத் தாய் நம்பினாள்.
யாசகனின் அப்பா மது நன்றாக அருந்தும் பழக்கம் கொண்டவர்.
அவர் மது அருந்தினால் யாசகனின் அம்மாவுக்கு அடித்துத் துன்புறுத்தும் வழக்கம் கொண்டவராக இருந்தார்.
யாசகனுக்கும் மாறனுக்கும் இது பிடிப்பதேயில்லை. சிறுவர்கள் ஆனதால் எதுவும் செய்ய முடியாதவர்களாக இருந்தார்கள்.
அம்மா அழும்போது அவளோடு சேர்ந்து அழுவதைத் தவிர வேறெதுவும் அவர்களால் செய்ய முடிய வில்லை.
அவர்கள் வளர்ந்த பின் நிலைமை மாறியது.
ஒரு தடவை நல்ல குடிவெறியில் ஆதிரையை அவர்

மிதிக்க வந்தபோது மாறன் தாயின் முன்னால் வந்து நின்று கொண்டான்.

மாறன் குசினிக்குள் சென்று கத்தியை எடுத்து வந்து "இனிமேல் அம்மாவைத் தொட்டால் வெட்டுவன்" என்று ஆக்ரோசமாகச் சத்தமிட்டான்.

அவர் கொஞ்சமும் இதை எதிர் பார்க்கவில்லை. அப்படியே ஏங்கிப்போய் நின்றுவிட்டார்.

இந்த நிகழ்வை யாசகன் எனக்குச் சொன்ன போது அழுது விட்டான்.

"என்ன இருந்தாலும் அவர் உனது அப்பாவல்லவா?" என்றேன் நான்.

"அப்பா அப்பாவாக இல்லாவிட்டால் அதற்குரிய மதிப்பு அவருக்குக் கொடுக்க முடியாது" என்று அடித்துச் சொல்லி விட்டான்.

யாசகனைச் சிலவேளைகளில் புரிந்து கொள்ளவே முடியாது. ஒரு சமயம் அவன் ஒரு கடிதம் கொண்டு வந்து தந்தான்.

அதை வாசித்ததும் நான் அதிர்ந்துவிட்டேன்.

அந்தக் கடிதம் அவனது தகப்பனது சகோதரரால் எழுதப்பட்டிருந்தது.

தகப்பன் அதைக் கவனமாக வைக்காததால் அது அவன் தாயின் கையில் சிக்கிவிட்டது.

தாய்தான் அவனிடம் கொடுத்தது.

அந்தக் கடிதத்தைத் தாய் அவனிடம் கொடுக்கும் போது அழுத நிலையைச் சொல்லிச் சொல்லி அழுதான்.

அதிலுள்ள ஒரு வசனம்..

“.....மாடு வழிக்கு வராவிட்டால் அடிச்சு வரச் செய்..” அதன் தார்ப்பரியத்தை யாசகன் எனக்கு விளக்கினான்.

தகப்பனின் பணத்தை அதாவது சம்பளத்தை யாசகனின் தாய்க்குக் காட்டியதே இல்லை. சம்பள தினத்தில் சம்பளத்தைத் தகப்பனின் சகோதரி மூலமாக அவரின் சகோதரர்கள் பாடசாலைக்கே சென்று வாங்கிச் சென்று விடுவார்களாம்.

இந்த விடயம் தாய்க்குத் தெரியவர அதனைத் தட்டிக் கேட்ட தாய்க்கு அடியும் உதையும்தான் பரிசாகக் கிடைக்குமாம்.

இந்த அடியும் உதையும்தான் கடிதத்தில் கூறப்பட்டிருந்தது.

யாசகன் கடிதத்தைத் தந்துவிட்டுக் கொதித்துக் கொண்டிருந்தான்.

அவனை ஆசுவாசப்படுத்துவதற்குள் போதும் போதும் என்றாகிவிட்டது.

இத்தனை நெருக்குவாரத்துக்கு இடையிலும் துரோகங்களுக்கிடையிலும் மற்றவர்கள் முன்னிலையில் தன் கணவனை அவள் விட்டுக் கொடுத்ததே இல்லை.

அந்தத் தாய் அன்பின் உருவம்.

யாசகன் கொழும்பிலிருந்து வரும்போது அவனுக்காக அவள் செய்பவைகளைச் சொல்லிச் சொல்லி அழுவான்.

அவனுக்கு என்ன பிடிக்குமோ அத்தனையும் வீட்டிலிருக்கும்.
எந்த வேலையும் செய்ய விடமாட்டாள்.
யாசகன் வந்திருக்கும் காலங்களில் யாசகனின் மற்றைய சகோதரர்கள் அடிமைகள் போன்று எல்லா வேலைகளையும் செய்வார்கள்.
இல்லை இல்லை அவள் செய்விப்பாள்.
யாசகனின் மேல் அவளுக்குக் கொள்ளைப் பிரியம்.
யாசகனின் அரசியல் ஈடுபாடுகள் அவளுக்குப் பிடிக்காவிட்டாலும் யாசகனைப் பல தடவை தகப்பனிடமிருந்து காப்பாற்றி இருக்கிறாள்.
ஒரு நாள் யாசகன் வந்து சத்தமாக அழுதான்.
ஒரு சம்பவத்தை அவன் சொன்ன போது நானே திடுக்கிட்டு விட்டேன்.
அவனுடைய அப்பா மாதாந்த சீட்டு ஒன்று போட்டிருக்கிறார்.
அது அவனது அம்மாவுக்கும் தெரியும்.
அவளும் பல கனவுகளோடு அந்தப் பணத்துக்காகக் காத்திருந்திருக்கிறாள்.
ஆனால் மாதங்கள் ஓடிக் கொண்டிருந்ததே ஒழியப் பணம் வரவில்லை.
கணவனிடம் அவள் கேட்டிருக்கிறாள்.
இன்னும் சீட்டு எடுக்கவில்லை என்ற பதில்தான் அவரிடமிருந்து வந்தது.
யாசகனின் அம்மாவுக்குச் சந்தேகம் வந்துவிட்டது.
இதனால் பெரிய சண்டையே வந்துவிட்டது.

அப்போதுதான் யாசகனின் அப்பா உண்மையைப் போட்டுடைத்தார்.
“அது போனமாதமே எடுத்திட்டன்” என்று எவ்விதமான தயக்கமுமின்றிக் கூறியிருக்கிறார்.
சிறிதுநேரம் ஸ்தம்பித்த யாசகனின் அம்மா ஆற்றாமையால் கத்தி அழுதிருக்கிறாள்.
இப்படிப் பல நிகழ்வுகளால் அவள்பட்ட துன்பங்கள் ஏராளம்.
யாசகனின் அப்பாவுக்குத் தான் செய்வது பிழை என்றும் புரியும்.
அவரின் உறவினர்களின் ஆலோசனையும் வற்புறுத்தலும் சதிச் செயலுமே அவரின் செயல்களுக்கான காரணம்.
இதை எனக்குச் சொன்னவனும் யாசகனே.
இவைகளெல்லாம் அவளின் தனிப்பட்ட வாழ்க்கையின் ரணங்கள்.
சமூக வாழ்வில் அவள் நேரடியாக ஈடுபடாவிட்டாலும் யாசகனின் அரசியல் வாழ்வில் மறைமுகமாக ஆதரவு தெரிவித்தே வந்தாள்.
இரவு நேரங்களில் அரசியல் வகுப்புகளுக்குச் செல்லும் யாசகன் வரநேரமாகிவிடும்.
யாசகனின் அப்பா கோபமாக அவனின் வரவுக்காகக் காத்திருப்பார்.
யாசகன் வீட்டின் பின் பக்கத்தால் வர அவனைத் தகப்பனுக்குத் தெரியாமல் வீட்டினுள் அனுமதித்து உணவு கொடுத்துப் படுக்கைக்கு அனுப்பிவிடுவாள்.

சிலவேளைகளில் யாசகனோடு அவன் அரசியல் பற்றி உரையாடுவாள்.
சிலவேளைகளில் பல புரட்சிகரமான காரியங்களிலும் ஈடுபடுவாள்.
யாசகன் வீட்டுக்குப் பொன்னி என்ற குறைந்த சாதிப்பெண் அரிசிமா இடிக்க வருவாள்.
அந்தப் பிரதேசத்தில் எல்லோருக்கும் அரிசி இடித்து வறுப்பது பொன்னியே.
அவளுக்கு எல்லாரும் சிரட்டையில்தான் தேனீர் கொடுப்பார்கள்.
யாசகனின் வீட்டில் மட்டும் சாதாரண குவளையில் கிடைக்கும். இதனால் யாசகனின் அம்மா மற்றவர்களிடம் திட்டு வாங்கியதுண்டு.
இதற்கு யாசகனின் அம்மா
"அவையளும் மனிசர்தானே" என்ற ஒரே சொல்லில் முடித்துவிடுவாள்.
அவளுக்குள் அவளை அறியாமலேயே கார்க்கியின் தாய் வாழ்கிறாள் என்று நான் நினைப்பதுண்டு.
துயரங்களை அவள் விழுங்கும் பாங்கும் அவற்றுக்கெதிராக அவள் வெளிப்படுத்தும் உஸ்ணமும் நான் ரசித்தவை.
யாசகன் அந்தத் தாயைப்பற்றிச் சொல்லும் போதோ அல்லது நான் அந்தத் தாயைக் காணும்போது எனக்குள் நானே அவளின் உள்ளே கனன்று கொண்டிருக்கும் வெப்பத்தை உள்வாங்கியிருக்கிறேன்.

அவள் கடவுளைத் தேடிக் கோயிலுக்குச் சென்றதை நான் கண்டதேயில்லை.
அவளுக்கு உலகம் அவள் குடும்பந்தான்.
குடும்பம்தான் அவள் கடவுளும். ஒரு தடவை யாசகனை அவன் பெரிய தாய் குறைவாகக் கதைத்ததற்காக அவளை அக்குவேறு ஆணி வேறாக்கிவிட்டாள்.
இப்படியான சந்தர்ப்பங்களில் அவள் போராளியாகவே மாறி விடுவாள்.
யாரைப் பேசுகிறோம் என்ன பேசுகிறோம் என்று நினைக்கவே மாட்டாள்.
வாயில் வரும் சொற்களை மட்டுப்படுத்தவே மாட்டாள். பரோபகாரி.
தனக்கு நான்கு ஆண்பிள்ளைகள் என்ற தைரியத்தில் கொடை வள்ளலாகவும் சில வேளைகளில் மாறிவிடுவாள்.
இப்படியான சந்தர்ப்பங்களில் இவள் ரா. கணபதியின் அம்மாவாக மாறிவிடுகிறாள்.
ரா. கணபதியின் அம்மாவாகவும் கார்க்கியின் அம்மாவாகவும் தோற்றுகின்ற ஆதிரைக்கு எதிர்பாராமல் அந்தக் கொடிய வியாதி வந்தது.
பாம்புப் புற்றைச் சுற்றிக் கறையான் வீடு அமைப்பதுபோல் அவளுக்குள்ளும் புற்று ஆக்கிரமித்தது.
யாசகனும் அவன் சகோதரர்களும் கலங்கிப் போனார்கள்.

யாசகனின் அப்பா நொறுங்கிப்போனார்.
அப்போதான் அவர் எவ்வளவு அன்பை தன் மனைவிமேல் வைத்திருந்தார் என்பது புரிந்தது.
தனிமையில் இருந்து அவர் கண்ணீர்விட்டதைத் தான் பார்த்ததாக யாசகன் என்னிடம் கூறியிருக்கிறான்.
அவர்மட்டுமல்ல அவரின் சகோதரியும் தன் தவறை உணர்ந்து யாசகனின் தாயைத் தன் சகோதரிபோல் பார்த்ததாகவும் யாசகன் கூறினான்.
யாருமே எதிர்பார்க்கவில்லை.
முழுக் குடும்பமுமே பதட்டம் அடைந்தது.
முதலில் கொழும்புக்குக் கொண்டு வந்தார்கள்.
கொழும்பிலே அவன் தாயின் ஒன்றுவிட்ட சகோதரி வீட்டில் வைத்துப் பல விதமான வைத்தியர்களை அணுகினார்கள்.
தாயின் ஒன்றுவிட்ட சகோதரியை தன் வாழ்நாளில் மறக்கவே முடியாதென அடிக்கடி சொல்வான்.
மகரகமவுக்குக் கொண்டோடினார்கள்.
மகரகம என்பது மகரகம என்ற இடத்தில் உள்ள புற்று நோய் வைத்தியசாலை.
எப்படியும் அவளைக் காப்பாற்றிவிட வேண்டுமெனத் தங்களாலான மட்டும் முயற்சித்தார்கள்.
விதி வலிதாயிற்றே!
யாசகனுக்கும் அப்போதான் வேலை கிடைத்திருந்தது.
இனி அம்மாவையும் அப்பாவையும் கொழும்புக்குக் கொண்டுவர வேண்டுமென அவன் கனவு கண்டு கொண்டிருந்த காலமது.

நோய் அவளில் படரத் தொடங்கியது.
உடலுறுப்புகளோடு தன்னிச்சை வாரத்துக்கு நோய் சொந்தம் கொண்டாடத் தொடங்கியது.
திண்ம உணவுகள் அவள் தொண்டைக் குள்ளால் செல்ல மறுத்தன.
நானும் யாசகனோடு கொழும்பில் நின்றிருந்தேன்.
யாசகன் அழுவான். நான் அவனைத் தேற்றுவேன்.
நான் அழுவேன் அவன் என்னைத் தேற்றுவான்.
முதல் மாதச் சம்பளம் அவன் கைக்கு வருகிறது.
இருவருமாக ஓடிச் சென்று கிறேப்ஸ் பழம் வாங்கினோம்.
அதையும் கொண்டு மகரமை வைத்தியசாலைக்குச் சென்று அம்மாவின் படுக்கைக்குச் செல்ல அங்கே அம்மா உசாராக எழும்பி இருந்து அருகில் உள்ள கட்டிலில் படுத்துக் கிடப்பவரோடு அரசியல் கதைத்துக் கொண்டிருந்தார்.
மெதுவாக அவர்களைக் குழப்பாமல் அருகில் சென்று பின் பக்கமாக நின்று கொண்டோம்.
ஆக்கபூர்வமாக உரையாடல் நடக்கிறது.
எங்களைக் கண்டுகொண்ட அம்மா சிரித்து எங்களை அவர்களுக்கு அறிமுகம் செய்கிறாள்.
நாங்களும் சிரித்துத் தலையாட்டினோம்.
தாதிவந்து அம்மா எதுவும் சாப்பிடவில்லை எனக் கூறினாள்.
நாங்கள் வாங்கிச் சென்ற கிறேப்ஸ் பழத்தைப்

பிழிந்து சாறாக்கி அவளின் வாயில்
ஊற்றினான் யாசகன்.
அவனுடைய முதற் சம்பளம் சாறாகத் தாயின்
நெஞ்சைக் குளிர்வித்தது. காலமும் விதியும்
யாருக்காகவும் காத்திருப்பதில்லை.
அந்த அந்த நேரம் அதது நடந்தே தீரும். நடந்தது.
அந்தப் புனிதவதி போய்விட்டாள்.
காலம் அவளைக் காவு கொண்டுவிட்டது.
இப்படியொரு அம்மா எங்களுக்கு இனி எப்போ
கிடைப்பாள்? என்ற வினாவோடு எங்களின் காலம்
நகர ஆரம்பித்தது.
அந்த இழப்பை யாசகனால் தாங்க முடியவில்லை.
அவனை என்னால் முடிந்தளவுக்கு
அமைதிப்படுத்தினேன்.
இறப்புத் தவிர்க்க முடியாதது என்பதை எடுத்துச்
சொன்னேன்.
துயரங்களை விழுங்கிக்கொண்டால்தான் நாம்
அடுத்த கட்டத்துக்கு நகரலாம் என்பதைத் தெளிவாக
எடுத்துக் கூறினேன்.
காலம் அவனைச் சரியான பாதையில் நகர்த்தும் என
நினைக்கிறேன்

*அரும்பு 2018*

# நரபலி

*(இந்தக் கதை கி.பி 1223 காலகட்டத்தில் நடைபெற்றது. இது குளக்கோட்ட மன்னன் காலமெனவும் ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்)*

தம்பலகாமம் கோணேசர் ஆலயம் பிரசித்தி பெற்ற ஆலயம். இந்த ஆலயம் அப்பிரதேச மக்களின் மத்தியில் மிகப் பெரிய இடத்தைப் பெற்றிருந்தது. அந்தப் பிரதேசத்தில் உள்ள தொழும்பர் என்ற முக்கியமான இரு குடும்பங்களில் பிறந்த பெண்தான் சுதேசினி.

சுதேசினியின் முகம் வாடியிருந்தது.

அருகில் இருந்த அவளின் தகப்பன் ஆறுதல் கூறிக் கொண்டிருந்தார்.

அவரின் முகமும் சோகமாகவே இருந்தது.
தொழும்பர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இவர்கள்.
இந்தத் தொழும்பர் குடும்பம் கோயிலிலிருந்து
பெரும் பகுதி வருவாயைப் பெறுபவர்கள் இவர்கள்
பன்னிரு வருடத்துக் கொருதரம் கோயிலில்
நடைபெறும் திருவிழாவின் இறுதி நாளன்று
தங்கள் குடும்பத்தில் உள்ள கன்னிப் பெண்ணை
கோணேசருக்குப் பலி கொடுக்க வேண்டும்.
இந்த வருடம் சுதேசினியின் தந்தை முத்துமாகரின்
முறை. சுதேசினி அவருக்கு ஒரே பிள்ளை.
இந்த நரபலி நிகழாவிட்டால் அந்தக் கிராமத்தில்
அனர்த்தங்கள் நிகழுமென்பது ஒரு ஐதீகம்.
இந்த நரபலியை இட்டு யாரும் கவலை
கொள்வதில்லை. இதை ஒரு தெய்வீகச் சடங்காகவே
கருதுகிறார்கள்.
சிவனுக்குச் செய்யும் தானம் என்று எல்லாரும்
நினைப்பதால் கவலைக்கு அங்கு இருப்பதில்லை.
நாளை மதியம் அவளைப் பலியிட்டு விடுவார்கள்.
சுதேசினி அழகான சுறுசுறுப்பான பெண்.
அந்தக் கிராமத்தில் எல்லோருக்கும் அவளைப்
பிடிக்கும். உள்ளுக்குள் அவர்களுக்குக் கவலை
இருந்தாலும் வெளியே காட்டிக் கொள்ளமாட்டார்கள்.
இந்த மூடத்தனத்தைத் தட்டிக் கேட்குமளவுக்கு
அங்கு யாருக்கும் தைரியமில்லை.
சுதேசினி இதைப்பற்றி தகப்பனோடு சில சமயம்

கதைத்திருக்கிறாள்.

"அன்பே சிவம் என்கின்ற சிவன் உயிர்ப் பலியை ஏற்பாரா அப்பா?" என்று கேட்பாள்.

அதற்கெதிராகக் கதைப்பதே பாவம் என்று சொல்லி அவளின் வாயை அடைத்துவிடுவார்.

தான் உயிரை இழக்கும் போது எல்லோரும் கை தட்டி அரோகரா சொல்வதும் ஓம் நமசிவாய என்று சொல்வதும் அவளுக்குக் காட்டுமிராண்டித்தனமாக இருந்தது.

பலியிடுவதால் ஊருக்கு நன்மை கிடைக்கும் என்ற அதீத நம்பிக்கை அவர்களுக்கு சந்தோசத்தைக் கொடுப்பதை அவள் அவதானித்தாள்.

திருமணம் முடித்தால் பலியிடல் இல்லை என்ற வழமையும் உண்டு.

இந்தப் பலியைச் செய்வதற்காகவே திருமணத்தை தள்ளிப்போட்டுக் காத்திருப்பார்கள்.

ஏன் கன்னிப் பெண்களை மட்டும் பலியிடுகிறார்கள் என்றும் ஆண்களை ஏன் விட்டுவிட்டார்கள் என்றும் தனக்குள் வினா எழுப்பிக் கொள்வாள் சுதேசினி.

நாளை சுவாமி எழுந்தருளும் மாகியா மூலை என்ற வடக்கு வீதியில் விடியப்பற வேளையில்தான் பலி நடக்கும். சோகமாக அமர்ந்திருந்தாள்.

முத்துமாகர் அவள் அருகில் வந்து "எழும்பம்மா" என்றார். சுதேசினி தகப்பனை நிமிர்ந்து பார்த்தாள் முத்துமாகரின் கண்கள் கலங்கிவிட்டன.

அவளைக் கட்டிப்பிடித்துக் கண்ணீர் வடித்தார்.
முத்துமாகரோடு வேறும் சில கிராமத்துப் பெண்களும் வந்திருந்தனர்.
அவர்களோடு அவள் நடக்கத் தொடங்கினாள்.
அழைத்துச் சென்ற அவர்கள் அவளைக் குளிப்பாட்டிப் பட்டாடை எல்லாம் அணிவித்தார்கள்.
அப்போது கோயிலினுள்ளிருந்து நில பாவாடை மேற்கட்டிச் சீர்களுடன் இராச மேளம் தாம் தாம் என்று முழங்கியது.
மேளதாளத்தோடு தொழும்பர்கள் வந்து அவளைப் பலிபீடத்துக்கு அழைத்துச் சென்றனர்.
முத்துமாகர் ஓவென்றழுதார்.
பலிபீடம் கோயில் வெளியில் வடக்கு வீதியில் அமைக்கப்பட்டிருந்தது.
சுதேசினியின் கண்கள் கலங்கியிருந்தது.
எல்லாரையும் தள்ளிவிட்டு ஓடிப் போவோமா என்றும் நினைத்தாள்.
தகப்பனுக்காக மனசு மறுத்தது. தாய் வரவில்லை.
தாய் வருவதற்கு அனுமதியில்லை.
பலி பீடத்தின் நடுவே அவள் நிற்கிறாள்.
சுற்றவர இருந்த மக்கள் முழுப்பேரும் ஆண்களே.
பெண்கள் அங்கு வரமுடியாது.
பெண்களுக்கெதிரான அப்பட்டமான கொடுமை என்பது சுதேசினிக்குப் புரிந்தாலும் அவளால் எதுவும் செய்ய முடியவில்லை.

எல்லோரும் ஓம் நமசிவாய சொல்லிக் கொண்டிருந்தார்கள்.
அந்த ஓம் நமசிவாயவிலும் ஒரு சோகம் தெரிந்தது.
இருபாகக் குருமார்களும் உதவியாளர்களும் பலிபீடத்தின்முன் மடைபரப்பிக் கிரியைகளைச் செய்து கொண்டிருந்தனர்.
பிரதான குரு எழும்பி ஆடத் தொடங்கினார்.
தாரை தப்பட்டைகள் வேகமாக அடிக்கத் தொடங்கின.
மங்கள நிகழ்ச்சிகளில் ஒலிக்கும் நாதஸ்வரமும் வாசிக்கப்பட்டது.
மக்கள் ஓம் நமசிவாய சொல்லியபடி பலிபீடத்தையே பார்த்துக் கொண்டிருந்தனர்.
ஆடிக் கொண்டிருந்த பிரதான குருக்கள் வேகமாக வந்து சுதேசினியைச் சுற்றி சுற்றி ஆடினார்.
ஆடிக் கொண்டே ஏதோ தீர்த்தம் போலிருந்ததை சுதேசினிமேல் தெளித்தார்.
அவ்வளவுதான் அவள் பட்டமரமாக மேடைமீது சாய்ந்தாள்.
ஓம் நமசிவாய சத்தம் மெல்ல மெல்ல ஓய்ந்து கொண்டிருந்தது.
முத்துமாகர் ஓரமாக இருந்து அழுது கொண்டிருந்தார்.
சிவபெருமான் அழுதாரா சிரித்தாரா தெரியவில்லை.
அவர் கண்கள் ஆரம்பத்திலிருந்து மூடியே இருந்தன.

மகுடம் *2017*

# சத்தியாக்கிரகம்

நான் அப்படியே வீதி நடுவில் இருந்து விட்டேன்.

என்னை அந்த இடத்துக்குக் கூட்டி வந்தவர் இரு என்றதும்தான் இருந்தேன்.

“தூக்கு மேடை பஞ்சு மெத்தை”

“குண்டாந்தடிக்கு அஞ்ச மாட்டோம்”

அவர்கள் சொன்னபோது நானும் தொண்டை கிழியக் கத்தினேன். முன்னே துவக்குகளுடன் இராணுவம் நின்றிருந்தது.

நாங்கள் ஊர்வலமாகச் செல்வதை அவர்கள் விரும்பவில்லை என்பதை அவர்கள் முகம் காட்டியது.

என்னைக் கூட்டி வந்தவர் விடுவதாக இல்லை.
அவர் பெயர் எனக்கு ஞாபகமில்லை.
அவர் பாராளுமன்ற உறுப்பினர் இராஜநாதனின் ஆதரவாளர்.
அப்போது எனக்குப் பன்னிரண்டு வயது. எதுவும் எனக்குத் தெரியாத புரியாத வயது.
என்னைப்போல் பலரை வீடுவீடாகச் சென்று கூட்டி வந்திருந்தார்.
நான் ஒருவனே சிறுவயதுக்காரனாக இருந்தேன்.
வீதி நடுவில் இருந்த என்னை ஒரு ஆமிக்காரன் ஒற்றைக் கையால் பிடித்து இழுத்து வீதி அருகில் போட்டான்.
அவனுடைய அந்த முரட்டுக்கையின் அழுத்தம் எனக்கு நோவைத் தந்தது.
நாங்கள் சத்தியாக்கிரகம் செய்ய திருகோணமலை நகர கச்சேரியடிக்குச் செல்லப் போவதாகக் கதைத்தார்கள்.
சத்தியாக்கிரகம் என்றால் என்ன என்று எனக்குத் தெரியாது. எல்லாரையும் கலைந்து போகும்படி ஆமிக்காரன் கத்தினான்.
எங்களைக் கூட்டி வந்தவர் எல்லாரையும் பார்த்து வீதியில் அமரும்படி சத்தமாகக் கத்தினார்.
நாங்களும் போய் இருந்தோம்.
ஆமிக்காரனுக்குக் கோபம் வந்திருக்க வேண்டும்.
விறுவிறுவென்று வந்து எங்களைக் கூட்டி வந்தவரை

காலிலும் தலையிலும் பிடித்து ஊஞ்சலைப் போல் ஆட்டிவிட்டு ஆமி வாகனத்துள் தூக்கி எறிந்துவிட்டார்கள்.
அடுத்தது என் முறை. எனக்கு நடுங்கத் தொடங்கி விட்டது. அலாக்காக என்னைத் தூக்கி எறிந்து விட்டார்கள். தொப்பென்று போய் விழுந்தேன். உடம்பெல்லாம் நொந்தது.
இப்படிப் பலபேரைத் தூக்கி எறிந்தார்கள். ஆளுக்குமேல் ஆள் வந்து விழுந்தார்கள்.
இதற்குள் இந்த விடயம் ராஜநாதன் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டு அவர் வந்து விட்டார்.
வந்தவர் வாகனத்துள் என்னைக் கண்டு "அட கந்தையா மாஸ்டரின் மகனே" எனக் கேட்டுப் பின் அந்த ஆமிக்காரனுடன் கதைக்க அவன் எல்லோரையும் கீழை இறங்கச் சொன்னான். நானும் இறங்கினேன்.
ராஜநாதன் என்கின்றவரை அடிக்கடி என் வீட்டில் தேர்தல் காலங்களில் கண்டிருக்கிறேன்.
என்னுடைய அப்பா அவரின் தீவிர ஆதரவாளர். தேர்தல் என்றால் எங்கள் வீட்டில் ஒரே கூட்டமாக இருக்கும்.
அந்தக் காலத்தில் பிலிப்ஸ் றேடியோதான் எல்லார் வீட்டிலும் இருக்கும். பெரிய பெட்டி.
முன் பக்கத்தில் வெல்வெற் துணிபோட்டிருப்பார்கள். அதற்குள்ளால் நல்ல சத்தம் வரும்.

இலங்கை வானொலியின் வர்த்தக சேவை ஒலித்துக் கொண்டிருக்கும்.
வீட்டு முற்றத்தில் எல்லோரும் கூட்டமாக அமர்ந்திருந்து கதைப்பார்கள்.
அம்மா எல்லோருக்கும் தேநீர் போட்டுவந்து கொடுப்பாள்.
பாவம் அம்மா களைத்துப் போவாள்.
அவளின் களைப்பு அப்பாவுக்குப் பொருட்டாகத் தெரிவதில்லை.
அரசியலைப் பற்றிச் சத்தமாகக் கதைப்பார்கள்.
அம்மா என்னைப் போயிருந்து படிக்கும்படி கலைப்பாள்.
இந்தச் சத்தத்துக்குள் எதனைப் படிப்பது.
படிப்பது போல் பாவனை செய்து கொண்டு பாட்டுக் கேட்டுக் கொண்டிருப்பேன்.
சிறிது நேரம் அரசியல் கதைப்பார்கள்.
சிறிது நேரம் ஒலித்துக் கொண்டிருக்கும் பாட்டைப் பற்றிக் காரசாரமாக விவாதம் நடக்கும்.
அந்த விவாதங்கள் எனக்கு விளங்குவதில்லை.
சில நேரம் கூட்டாக இருந்து காட்ஸ் விளையாடுவார்கள்.
304 விளையாடுவதாகக் கூறுவார்கள்.
ஒரு தடவை அப்பாவிடம் அந்த 304 பற்றிக் கேட்டேன். அடி விழாத குறை.
“நீ சின்னப் பொடியன் உனக்கு அதெல்லாம்

வேண்டாம்" என்று அதட்டி அடக்கிவிடுவார்.
ராஜநாதன் அவர்கள் இடையில் வருவார்.
அப்பாவையும் வேறு இருவரையும் அழைத்துச்
சென்று தனிய வைத்துக் கதைப்பார்.
ஒரு தடவை ஒட்டுக் கேட்டேன். தேர்தலில் வெல்வது
பற்றியே கதைப்பார்கள்.
சில கிராமங்களின் பெயரைச் சொல்லி
அவர்களுக்குப் பணம் கொடுத்தால் நல்லது என
ராஜநாதன் சொல்வார்.
கவனமாய்க் கொடுக்கவேண்டும் என்றும் சொல்லிச்
செல்வார்.
எனக்குப் புரியவில்லை.
ஏன் பணம் கொடுக்கவேண்டும்.
ஏன் அதைக் கவனமாகக் கொடுக்க வேண்டும் என்று
எனக்குள் நினைத்துக் கொள்வேன்.
ஐயம் தீர்க்க அப்பாவிடம் கேட்டால் பேசிக்
கலைத்து விடுவார்.
திடீரென்று என்னுடைய தோளைப்பற்றிப்
பக்கத்திலிருந்தவர் குலுக்கியபோதுதான்
நிதானத்துக்கு வந்தேன்.
நினைவுகளிலிருந்து விடுபட்டு நடப்பவற்றை
அவதானித்தேன்.
ராஜநாதன் எங்களைக் கூட்டி வந்தவரிடம்
எல்லாரையும் கூட்டிக் கொண்டு கச்சேரியடிக்குப்
போகச் சொன்னார்.

ஊர்வலம் போவது எங்களைக் கூட்டி வந்தவரது முயற்சி என்றே நினைக்கிறேன்.
ஏனென்றால் அதற்காக அவர் ராஜநாதன் அவர்களிடம் வாங்கிக் கட்டிக் கொண்டார்.
பாவம்! தனக்கெடா வேலை தன் பிடரிக்குச் சேதம் என்பது அவருக்குத் தெரியாது போலும்.
பஸ்சில் ஏறிவிட்டோம். சொகுசு பஸ்.
ஒய்யாரமாய் இருந்து கொண்டு செல்கிறேன்.
ஏன் செல்கிறேன் என்பதும் எனக்குத் தெரியாது.
வீட்டை நினைத்துப் பார்த்தேன்.
அங்கே பெரிய ரகளை நடக்கும் என்று நினைக்கிறேன்.
நான் வந்தது அப்பாவுக்குத் தெரியும் அம்மாவுக்குத் தெரியாது.
இந் நேரம் அம்மாவுக்குத் தெரிய வந்திருக்கும்.
அப்பாவை அம்மா பிச்சுப் பிடுங்கியிருப்பாள்.
அம்மா பார்க்கிறதுக்குத்தான் அப்பாவி.
கோவம் வந்தால் அடக்கவே முடியாது.
அப்பா என்ன பாடுபடுவார் என்று கற்பனை பண்ணிப் பார்த்தேன். சிரிப்புத்தான் வந்தது.
அப்பா ஒன்றும் விரும்பி அனுப்பி வைக்கவில்லை.
வீட்டுக்கொருவன் போருக்கென அனுப்பி வைக்கவில்லை.
எங்களைக் கூட்டி வந்தவர் கேட்டவிதம் அப்பாவுக்கு மறுப்புச் சொல்ல முடியாமல் போகத் தலையாட்டி

விட்டார். இப்ப வாங்கிக் கட்டிக் கொண்டிருப்பார். பஸ்சில் எனக்குப் பக்கத்தில் இருந்தவர் முன்னால் இருந்தவரைத்தட்டி “அண்ணை அங்கை சாப்பாடு தருவினமே” என்று கேட்டார்.

முன்னால் இருந்தவருக்கும் சந்தேகம்.

“சத்தியாக்கிரகம் எண்டு தானே சொன்னவை. உண்ணா விரதம் என்டு சொல்லேல்லைத் தானே. அப்ப கட்டாயம் சாப்பாடு இருக்கும்” என்று ஆசுவாசப்படுகிறார்.

“காலைமையும் சாப்பிடேல்லை பெருங்குடலைச் சிறுகுடல் சாப்பிடுது” என்று எனக்குப் பக்கத்திலை இருந்தவர் அழாத குறையாகக் கூறினார்.

என்னுடன் யாரும் கதைக்கவில்லை.

நான் சின்னப் பொடியன்தானே.

பஸ் ஒரு மாதிரியாகக் கச்சேரிக்குக் கிட்டப்போய் நின்றது.

எட்டிப் பார்த்தேன்.

கச்சேரிக்குக் கிட்டவாய் ஏராளமான ஆமிக்காரங்கள் துவக்குகளோடை நிற்க ராஜநாதன் ஐயா அவர்களுடன் கதைச்சுக் கொண்டு நின்றார்.

எங்களை பஸ்சைவிட்டுச் இறங்க அனுமதிக்கவில்லை. சத்தியாக்கிரகம் என்ற சொல் எனக்கு விளங்கவேயில்லை. ஆரையும் கேட்கவும் துணிவில்லை.

பத்து வாகனங்கள் வரிசையாக நிற்பது தெரிந்தது.

அரை மணித்தியாலத்தால் எங்களை இறங்கி வரிசையாய் நிற்கச் சொன்னார்கள்.

பிறகு அப்படியே நடந்து சென்று நிலத்திலே விரிக்கப்பட்ட கிடுகுகளிலை இருக்கச் சொன்னார்கள்.

அமைதியாகப் போய் இருந்தோம்.

வெய்யில் கொழுத்தத் தொடங்கியிருந்தது.

தலையெல்லாம் சரியாய்ச் சுடத் திரும்பிப்பார்த்தால் தொங்கலில் ஒரு பந்தல் தெரிந்தது பந்தலுக்குள் ராஜநாதன் ஐயாவும் எங்களைக் கூட்டி வந்தவரும்.

எனக்குப் புரியவில்லை.

நேரம் நகர்ந்து கொண்டிருந்தது.

பசிக்கத் தொடங்கியது.

சாப்பாடு வருமோ வராதோ என்பதும் தெரியவில்லை.

பஸ்சில் வந்தவர்கள் எல்லாம் முணுமுணுக்கத் தொடங்கினார்கள் எங்களைக் கூட்டிவந்தவர் வந்து இன்னும் அரை மணித்தியாலத்தில் சாப்பாடு வரும் என்று கூறினார்.

எல்லாருக்கும் நிம்மதியாக இருந்தது.

சாப்பாடு வரும் என்கிறார்கள் ஆனால் இன்னும் சத்தியாக்கிரகம் தொடங்கவில்லை.

எனக்குப் புரியவேயில்லை.

எம்பி ஐயாவுக்கு பிரத்தியேகச் சாப்பாடு.

வயிறு முட்டச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்.

எங்களுக்கும் சாப்பாடு வந்தது.

ஆளுக்கொரு பாசல்.

அது என்னத்தைக் காணும்.
ஏதோ வந்தளவில் போதும் என்று சாப்பிட்டோம்.
நேரம் நகர்ந்து கொண்டிருந்தது.
எனக்குப் பொறுக்க முடியவில்லை.
எங்களைக் கூட்டி வந்தவரிடம் போய்
"அண்ணை சத்தியாக்கிரகம் எப்ப தொடங்கும்?"
என்று கேட்டேன். அவர் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தார்.
கொல்லென்று எல்லாரும் விழுந்து விழுந்து
சிரித்தார்கள்.
அவரும் சிரித்தார்.
தூரத்தில் இருந்த ராஜநாதனும் சிரித்தார்.
என்முதுகிலே தட்டி "சத்தியாக்கிரகம் முடியப்
போகுது
தம்பி"என்றார்.
திடுக்கிட்டுப்போய் நின்றேன்.

*வீரகேசரி 2018*

# நந்தனும் சின்னானும்

கரவெட்டியில்தான் இந்தக் கதை
தொடங்குகிறது.
கரவெட்டியில் சுந்தரமூர்த்தி மாஸ்டர் கதை
சொல்கிறார் என்றால் எல்லோருக்கும் விருப்பம்.
நல்ல வர்ணனையோடு அற்புதமாகச் சொல்வார்.
அவர் சொல்லும் கதைகளில் ஒரு புதுமை இருக்கும்.
வெள்ளிக்கிழமை மாலைவேளைகளில் தன் வீட்டுத்
திண்ணையில் இருந்துதான் கதை சொல்வார்.
திண்ணை என்பது பழையகாலத்துத்
திண்ணை அல்ல.
இந்தக் காலத்தில் அதை வெளி விராந்தா
என்றுதான் சொல்கிறார்கள்.

சுந்தரமூர்த்திக்கென்று ஓர் இரசிகர் பட்டாளமே உள்ளது. இன்றும் வெள்ளிக்கிழமை.

சுந்தரமூர்த்தி வெளிவராந்தாவில் வந்து அமர்ந்து விட்டார்.

கதை சொல்லத் தயார் என்பதுபோல் இருந்தார். அவரது இரசிகர் கூட்டம் ஒவ்வொருவராக வந்து அமர்ந்து கொண்டனர்.

இன்று என்ன கதையென ஆவலோடு அவரைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

அவர் செருமிக் கொண்டு இன்று நாங்கள் நந்தனது கதையைக் கேட்கப் போகிறோம் என்று கூறினார். இந்த நந்தனார் அறுபத்துமூன்று நாயனார்களில் ஒருவர் என்றார்.

நாயனார் கதையாக இருந்தாலும் சுந்தரமூர்த்தி மாஸ்டர் சொல்லும்போது புதுமையாக இருக்கும்.

ஆத்தனூர் என்றொரு கிராமம் இருந்தது.

இந்தக் கிராமத்தில்தான் நந்தன் பிறந்தான்.

இந்தக் கிராமத்தில் உள்ளவர்கள் எல்லாம் கூலித் தொழிலாளிகள்.

சாதியாலும் குறைந்தவர்களே.

இப்படி அவர் சொல்லும் போது அங்கிருந்த ஒருவர் “மாஸ்டர் அந்தக் கிராமம் எங்கடை கன்பொல்லை மாதிரித்தானே” மாஸ்டர் அதற்குப் பதில் சொல்வில்லவில்லை.

மாறாக அவனைப் பார்த்துப் புன்னகைத்தார்.

கதை தொடர்ந்தது.

அந்தக் கிராமத்தில் உள்ளவர்கள் எல்லோரும் பண்ணையார் வீட்டில் அடிமைகளாக வேலை செய்தனர்.

அவர்களுக்கு கூலி இல்லை.

பண்ணையார் கொடுக்கும் நெல்லையும் சொற்ப மரக்கறிகளையும் வெளியில் எங்காவது விற்றுத் தமக்குத் தேவையானவற்றை வாங்கிக் கொள்வார்கள்.

'கன்பொல்லையாக்கள் நெல்லியடிச் சந்தியிலை மூட்டை தூக்கிற வேலை செய்யிற மாதிரித்தானே' என்றார் ஒருவர். மற்றவரோ 'அவைக்கு சரியான குறைஞ்ச கூலிதான் கொடுப்பினம்' என்றார்.

இப்பொழுதும் சுந்தரமூர்த்தி மாஸ்டர் எதுவும் சொல்லவில்லை.

வெறுமனே புன்னகையை மட்டும் அவர்களுக்கு வழங்கினார்.

பண்ணையார்களில் பலர் பிராமணர்கள்.

இப்படியான ஒரு பிராமணப் பண்ணையார் வீட்டில்தான் நந்தன் வேலை செய்தான்.

கடுமையான வேலை.

சிறிது நேரம் தானும் ஓய்வெடுக்க விடமாட்டார்.

நந்தனோ சிவ வழிபாட்டில் ஈடுபாடு கொண்டவன்.

பண்ணையாருக்கு ஒரு சாதி குறைந்தவன் சிவனை வழிபடுவதா என்கின்ற கோபம்.

இதனால் தன் அடியாட்களை வைத்து அவனைத் துன்புறுத்துவார்.
நந்தனும் எதற்கும் சளைக்காது தன் வேலையோடு ஓம் நமசிவாய சொல்லவும் தயங்குவதில்லை.
மாஸ்டர் சிறிதுநேரம் கதை சொல்வதை நிறுத்திவிட்டு அமைதியாக இருந்தார்.
அவருடைய நெற்றிச் சதைகள் மட்டும் சுருங்கி விரிந்து கொண்டிருந்தன.
கரவெட்டியில் கன்பொல்லை என்று ஒரு கிராமம் உள்ளது.
இங்கே வாழ்பவர்கள் சாதி குறைந்தவர்களாகவும் கரவெட்டியில் உள்ள சாதி கூடியவர் வீடுகளிலும் அவர்களின் வயல்களிலும் கூலியின்றி ஓய்வற்ற வேலை புரிபவர்களாகவே இருந்தார்கள்.
இங்கே சின்னான் என்று ஒரு இளைஞன் இருந்தான்.
இவன் ஒன்றும் நந்தனைப்போல் சிவன்மேல் பக்தி கொண்டவனல்ல.
இவனைச் சாதி கூடியவர்களுக்குப் பிடிப்பதில்லை.
இவன் தன்னைச் சேர்ந்தவர்கள் அடிமைகளாக வேலை செய்வதை அறவே வெறுத்தான்.
இதனால்தான் சாதி கூடியவர்களுக்குச் சின்னானைப் பிடிப்பதில்லை.
சுந்தரமூர்த்தி மாஸ்டர் சிறிது இடைவெளி விட்ட இந் நேரத்தில் முன்னால் இருந்தவர்களில் ஒருவர் “மாஸ்டர் நந்தனைப் போலைத்தானே எங்கடை

கன்பொல்லைச் சின்னானும்.
அவனுக் கொண்டும் சிவனிலை பக்தியில்லை
அவன்ரை மக்களிலைதான் பக்தி.
சாதிகுறைஞ்சவனெண்டாலும் நேர்மையானவன்."
சுந்தரமூர்த்தி எதுவும் சொல்லவில்லை.
அந்த நந்தனது கதை தனக்குள்ளை ஓடிக்
கொண்டிருக்கிறதென்பதை எப்படிச் சொல்ல முடியும்.
சுந்தரமூர்த்தி மாஸ்டர் செருமிக்கொண்டு கதையைத்
தொடர்ந்தார்.
நந்தனின் சிவபக்திக்கு ஒரு எல்லை இல்லாதிருந்தது.
இரவு நேரங்களில் சிவனை நினைத்து அழுவான்.
சிவன் தனக்குக் காட்சி தரமாட்டாராவென ஏங்குவான்.
கதை தடைப்படுகிறது. சுந்தரமூர்த்தி மாஸ்டரின்
நொற்றி சுருங்கி விரியத் தொடங்கியது.
சின்னான் இரவு நேரங்களில் தன்னினத்தைச்
சேர்ந்தவர்களைக் கூட்டி வைத்து அவர்களின்
அடிமைத்தன்மையை விளக்கி அதற்கெதிராகப்
போராடவேண்டுமென்று அறிவுரை வழங்குவான்.
அந்தக் கிராமத்தில் யாருக்காவது உடல் நலக்
குறைவு வந்தால் ஓடிப்போய் உதவி செய்து
அவர்களைக் காப்பாற்றுவதில் தன் நேரத்தைச்
செலவிடுவான் சின்னான்.
மாஸ்டர் ஒரு கேள்வி.
சுந்தரமூர்த்தி அவனைக் கேள்விக் குறியோடு
பார்க்கிறார்.

“நந்தன் சிவனிலை பக்தி கொண்டமாதிரி
சின்னான் தன்ரை மக்களிலை பக்தி
கொண்டிருந்தான்.
அவனைப் பற்றிச் சரியான செய்தி வெளியாலை
வரவில்லை ஏன்?” எல்லாரும் தலை ஆட்டினார்கள்.
ஆனால் சுந்தரமூர்த்தியோ ஒரு வார்த்தை தானும்
சின்னானைப்பற்றிக் கூறவில்லை.
கதையைத் தொடர்கிறார்.
ஒரு நாள் நந்தன் பண்ணையாரை அணுகித் தான்
சிவனைக் காணச் சிதம்பரம் செல்லவேண்டும்
அதற்கு விடுமுறை தாருங்கள் என்று கேட்டான்.
அவரோ அவனைக் காலால் எட்டி உதைத்து
புலையனான நீ சிதம்பரம் போக முடியாது..
போய் வேலையைக் கவனி என்று சத்தமிட்டார்.
நந்தனோ நிலத்தில் புரண்டு அழுதான்.
கதை தடைப்படுகிறது. அவரது நெற்றிச்
சதைகள் சுருங்கி விரியத் தொடங்குகிறது.
ஒரு தடவை சின்னான் அந்த ஊரின் தலைவரான
ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரியையும் ஒரு
தியேட்டர் உரிமையாளரான பணக்காரரையும்
அந்த ஊர் பாராளுமன்ற உறுப்பினரையும்
தன் இனத்தவர்களின் பிரச்சினை சம்பந்தமாக
அணுகினான்.
அவர்களுக்கோ அடக்க முடியாத கோபம்.
ஒரு சாதி குறைஞ்சவன்

இப்படிக் கேட்பதோ என்று வெகுண்டெழுந்தார்கள். மாஸ்டர் செருமிக் கொண்டு கதையைத் தொடர்ந்தார். நந்தன் இப்படிப் பிடிவாதம் பிடிப்பதைக் கண்ட பண்ணையார் அன்றிரவு தன் சக பிராமணர் நால்வரைக் கூப்பிட்டு ஆலோசனை நடத்தினார். அவர்களும் இதை ஆரம்பத்திலேயே கிள்ளி விடவேண்டும் இல்லாவிட்டால் சாதி குறைந்தவர்கள் எல்லோரும் சிதம்பரம் போகவேண்டும் என அடம் பிடிக்கத் தொடங்கி விடுவார்கள் என்றனர்.
அப்போது இதைக் கேட்டுக்கொண்டிருந்த ஒருவர் "ஏன் மாஸ்டர் கோயிலுக்குத்தானே போகக் கேட்கிறான் .. பண்ணையாரும் ஒரு நாள் விடுப்புக் கொடுத்திருக்கலாமே" என்று கேட்டார்.
அப்போ இன்னொருவர் "அப்ப மட்டுமல்ல இப்பவும் அப்பிடித்தான். இதுகளுக் கெதிராகத்தான் சின்னான் போராடினவன்.
அவனை என்ன செய்தாங்களோ தெரியவில்லை"
மாஸ்டரும் சிரித்தபடி அந்தக் காலத்தில் சிதம்பரம் கோயிலுக்கு மட்டுமல்ல அந்தப் பகுதிக்கே சாதி குறைந்தவர்கள் போக முடியாது.
அப்படிப்போனால் அவர்கள் உயிரோடு வெளியே வரமுடியாது.
"ஏன் இஞ்சையும் அப்பிடித்தானே?
கோயிலுக்கை மட்டுமே தேத்தண்ணிக் கடைக்குள்ளேயும் போகேலாது"

கதை தடைப்படுகிறது. அவரது நெற்றிச் சதைகள் சுருங்கி விரியத் தொடங்குகிறது.

நெல்லியடியில் தேத்தண்ணிக்கும் சூசியத்துக்கும் பெயர்போன கடை சங்குன்னி கடை.. அந்த நேரம் 10 சதம் கொண்டுபோனால் ஒரு தேத்தண்ணி ஒரு வடை ஒரு சூசியம் வாங்கலாம்.

அதுவும் அந்தக்கடை லட்சுமித் தியேட்டருக்குப் பக்கத்திலை இருக்கிறதாலை எப்பவும் நிறைஞ்ச சனம். அந்தக் கடைக்குள்ளை சாதி குறைஞ்சவை போகேலாது. ஒரு தடவை சின்னானின் சகோதரன் போய் வாங்கின அடியை எழுத்திலையும் எழுத முடியாது. இந்தத் தடவை இடதுசாரிக் கட்சியைச் சேர்ந்தவர்கள் தேனீர்கடைப் பிரவேசத்துக்காக இக்கடையைத் தேர்ந்தெடுத்தனர்.

தேர்தல் காலமாதலால் சின்னான் தலைமையில் கூடிய கூட்டத்துக்குப் பாராளுமன்ற உறுப்பினரும் வந்திருந்தார். அந்தக் கூட்டத்தில் நாளை மறுநாள் சங்குன்னி கடைக்குள் பிரவேசம் செய்வது எனத் தீர்மானிக்கப்பட்டது. சின்னானை வளைச்சால்தான் கன்பொல்லை ஓட்டுகள் கிடைக்குமென்பதால் பாராளுமன்ற உறுப்பினரும் சம்மதித்தார்.

கதை தொடர்கிறது.

நந்தன் எப்படியாவது சிதம்பரம் செல்ல வேண்டுமென பிடிவாதமாக இருந்தான்.

பண்ணையாரோ அதற்குச் சம்மதியாமல் நந்தனை

ஒரு அறையில் வைத்துப் பூட்டிச் சித்திரவதை செய்தார்.

இதனால் நந்தனது சமூகம் குழப்பமடைந்து பண்ணையாருக் கெதிராகக் கிளர்ந்தெழக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. இந்தச் சூழ்நிலையைப் பிராமண சமூகம் விரும்பவில்லை.

அவர்கள் கூடிக் கதைத்தார்கள்......

கதை தடைப்படுகிறது. சுந்தரமூர்த்தியின் நெற்றிச் சதைகள் சுருங்கி விரியத் தொடங்குகிறது.

தேனீர்கடைப் பிரவேசத்துக்கான நாள் வந்தது.

சின்னான் தலைமையில் வந்தார்கள்.

இதனை கொஞ்சமும் சங்குன்னி கடை முதலாளி எதிர் பார்க்கவில்லை.

இவர்கள் நுழையப்போகும் தருணத்தில் எங்கிருந்தோ சிலர் கத்தி பொல்லுகளுடன் வந்து இவர்களைச் சரமாரியாகத் தாக்கினர்.

இதனைக் கொஞ்சமும் எதிர்பார்க்காத சின்னானைச் சேர்ந்தவர்கள் தறிகெட்டு ஓடினர்.

சின்னானுக்கு ஒன்றுமே புரியவில்லை.

அப்போதான் பாராளுமன்ற உறுப்பினர் வந்து இறங்கினார்.

அவரைத் தொடர்ந்து பொலிசாரும் வந்தனர்.

பாராளுமன்ற உறுப்பினரின் சதிதான் இது என்பதைப் புரிந்து கொள்ள சின்னானுக்கு நீண்ட நேரம் தேவையாக இருக்கவில்லை.

மாஸ்டர் நீர் அருந்திவிட்டுக் கதையைத் தொடர்ந்தார். கதை தொடர்ந்தது.

கூட்டம் கூடிக் கதைத்த பிராமணர்கள் நந்தன் போன்றவர்கள் தலையெடுப்பதை விரும்பாமல் அவனை இல்லாமல் செய்துவிட்டால் எல்லாம் அடங்கிவிடும் என்று முடிவெடுத்தார்கள்.

மாஸ்டர் கதையை நிறுத்திவிட்டு அவர்களைப் பார்த்தார்.

அவர்கள் கவலையோடு அவரைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

அவரது நெற்றி சுருங்கி விரியத் தொடங்கியது.

சாதியில் உயர்ந்தவர்கள் பாராளுமன்ற உறுப்பினர் தலைமையில் ஒன்று கூடினர்.

எப்படியாவது சின்னானைப் போட்டுத் தள்ளி விடவேண்டுமென்று முடிவெடுத்தனர்.

எந்தக் காரணம் கொண்டும் யார் செய்ததென்பது வெளியில் வரக் கூடாதென முடிவு செய்தனர்.

மாஸ்டர் செருமிக்கொண்டு கதையைத் தொடர்ந்தார்.

சிதம்பரம் சென்று சிவபெருமானைத் தரிசிக்க வேண்டுமென்பதில் பிடிவாதமாக இருந்த நந்தனை முடித்துவிடுவதே சாலச் சிறந்தது என முடிவு எடுக்கப்பட்டதால் அதை எப்படிச் செய்வது என்பது அவர்கள் முன் உள்ள பிரச்சினையாக இருந்தது.

இப்போ செய்தால் அதைத் தாங்கள்தான்

செய்தது என்பது வெளியே வந்து மிகப் பெரிய பிரச்சினையாகி விடுமென்று கருதினர்.

இதனால் திட்டம் உருவாகத் தொடங்கியது.

முன்னால் இருந்தவர்கள் உசாரானார்கள்.

அவர்கள் மனத்தில் இப்போ நந்தனார் இல்லைப் பதிலாக சின்னானே விஸ்வரூபம் எடுத்திருந்தான்.

சின்னானை முடிக்கவும் திட்டம் வரையப்பட்டது.

மாஸ்டர் கூறத் தொடங்கினார்.

சின்னானின் வீட்டை இரவோடிரவாகக் கொழுத்திவிடுவதென்று திட்டம் தீட்டினர்.

அவருக்கு முன்னால் இருந்த சகலரும் திடுக்கிட்டு அவரைப் பார்த்தனர்.

சின்னானின் மறைக்கப்பட்ட முடிவு மாஸ்டரின் வாயால் உணர்ச்சி மேலீட்டில் வெளிவந்துவிட்டது.

மயான அமைதி.

நந்தன் எப்படிச் சின்னான் ஆனான்?

மாஸ்டருக்குப் புரிந்துவிட்டது.

அவர் நந்தன் கதையைச் சொல்லிக் கொண்டிருக்கும் போது அவர் காலத்துச் சின்னான் கதை பின்புலத்தில் நகர்ந்து கொண்டிருந்தது யாருக்கும் தெரியாது.

உணர்ச்சி வசப்பட்டுக் கூறிவிட்டார்.

தன்னைச் சுதாகரித்துக்கொண்டு நந்தன் கதைக்கு வந்தார்.

நந்தனிடம் வந்த பண்ணையார் ‘தன்னுடைய

கனவில் சிவபெருமான் வந்ததாகவும் தன்னுடைய பக்தனை சிதம்பரத்துக்கு அனுப்பி வைக்கும் படியும் அங்கேதான் தான் அவரை ஆட்கொள்ளுவதாகவும் கூறினாரெனக் கூறி உனக்கு விடுதலை தருவதாகவும் கூறி அனுப்பி வைத்தார். நந்தனும் சந்தோசமாகப் புறப்பட்டான். நந்தன் சிதம்பரத்தை அடைய வாசலிலேயே அவனை எதிர் கொண்ட பிராமணர்கள் அவனைக் குளிப்பாட்டி அமரும்படியும் சிவபெருமான் வந்து அவனை ஆட்கொள்ளுவார் என்றும் கூறிச் சென்றனர்.

இதில் நம்பிக்கையற்ற நந்தன் அவர்கள் அறியாமல் கோயில் முன்றிலுக்குச் சென்றுவிட்டான்.

அவனை அங்கே கண்ட பிராமணர்கள் ஆத்திரங்கொண்டு பதகழித்தார்கள்.

அவன் கண்ணை மூடிச் சிவபெருமானைக் கும்பிட்டுக் கொண்டிருக்கும்போது அவன்மேல் எண்ணையை ஊற்றி நெருப்பைப் பற்ற வைத்துவிட்டு நந்தன் சோதியில் கலந்து விட்டான் ..... நந்தன் சோதியில் கலந்துவிட்டான் என்று பலத்துச் சத்தமிடலாயினர்.

ஓடி வந்தவர்கள் எல்லோரும் அதை உண்மையென நம்பி கையெடுத்துக் கும்பிடலாயினர்.

பாவம் நந்தன் கருகிக் கொண்டிருந்தான் என்று கூறிவிட்டு அமைதியாக இருந்தார்.

எல்லார் முகங்களும் இறுகி இருந்தன.

அவர்களில் ஒருவர் எழும்பி

“மாஸ்டர் சின்னானுக்கு என்ன நடந்தது?” என்று கேட்க இனி மறைத்துப் பயனில்லை என்று சின்னானைப் பற்றிக் கூறினார்.

“ சின்னானின் வீடும் பற்றி எரிந்து கொண்டிருந்தது. தன் இனத்துக்காகப் போர்க்கொடி எழுப்பிய சின்னான் சாம்பலாகிவிட்டான்” என்று கூறிய அவர் நந்தனை 63 ஆவது நாயனார் ஆக்கிப் பிராமண சமூகம் கொலைப்பழியிலிருந்து தப்பித்துக்கொண்டது. சின்னானைக் கொன்றவர்கள் பெயர் பெற்ற அரசியல் வாதிகளின் செல்லப் பிள்ளைகளாகினர்” என்று கூறி முடித்தார்.

தினகரன் 2018

# கலாசாரம்

படித்து முடித்து மூச்சுவிட முன்னம் அம்மாவும் அப்பாவும் என் கல்யாணம்பற்றிக் கதைக்க ஆரம்பித்துவிட்டனர். நான் இன்னும் அதைப் பற்றிச் சிந்திக்கவே இல்லை. என்னைப் பொறுத்தவரை நான் வேலை செய்யவேண்டும். சிறிது காலம் சந்தோசமாக இருக்கவேண்டும். நண்பர்களோடு ஜாலியாகச் சுத்தித் திரியவேண்டும். என்னுடைய 'பாட்னரை' நானே தெரிவு செய்யவேண்டும். என்னுடைய இந்த எண்ணங்களும் நிலைப்பாடும் என் அப்பா அம்மாவால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. முடிந்த மட்டும் விளக்கியும் அவர்கள் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள்.

அவர்களின் விளக்கங்கள் அவர்களைச் சுற்றியே இருக்கின்றன.
நான் அவர்களுக்குத் தாமதமாகப் பிறந்த பிள்ளையாம்.
ஒரே ஒரு பெண் குழந்தையாம்.
தங்களுக்கு வயது வந்து விட்டதால் தாங்கள் இறக்க முன் என்னுடைய கல்யாணத்தைப் பார்க்க வேணுமாம்.
அவர்களுடைய எண்ணங்களோடு என் எண்ணங்கள் எப்போதும் மோதுப்பட்டுக் கொண்டேயிருக்கின்றன.
என்னோடொத்த என்னோடு படித்த என் நண்பிகள் தாங்கள் விரும்பியதை விரும்பிய மாதிரியே செய்யும் நிலையில்தான் இருக்கிறார்கள்.
என்னுடைய அப்பா அடிக்கடி நாங்கள் தமிழர்கள் என்றும் எங்களுக்கென்று கலாசாரம் இருக்கிறதென்றும் அதைக் கைவிடக்கூடாது என்றும் கூறிக்கொள்வார்.
இந்தக் கலாசார விடயமெல்லாம் எனக்குப் புரிவதேயில்லை.
அப்பாவோடு இதைப்பற்றி நான் விவாதிப்பதுமில்லை.
அம்மாவுக்கென்று தனி முடிவு எடுக்கும் உரிமை வீட்டில் இருப்பதாகத் தெரியவில்லை.
ஆனாலும் அம்மாவுக்கும் அப்பாவுக்கும் எந்த விடயத்திலும் ஒற்றுமை இருந்ததில்லை.
சத்தமாக வாதம் செய்வார்கள்.

இறுதியில் அம்மா அவரின் கருத்தை ஏற்றுக் கொள்ளாமலே அடங்கிப் போவாள்.
என் வாழ்க்கையும் இப்படித்தான் அமைய வேண்டுமென்று அவர்கள் எண்ணுவதாகவே தெரிகிறது.
அவர்கள் பார்க்கின்ற மாப்பிள்ளையைத்தான் நான் திருமணம் முடிக்கவேண்டும்.
இந்த விடயத்திலும் இவர்களுக்குள் முரண்பாடு.
அம்மாவுக்கு லண்டனில் உள்ள பையன்களைப் பிடிப்பதில்லை.
அதனால் எனக்கு தன் சொந்தத்தில் யாழ்ப்பாணத்தில் மாப்பிள்ளை எடுக்கவேண்டும் என்று அடிக்கடி கூறிக் கொள்வாள். அப்பா இதற்கு எதிர்மாறு.
மாப்பிள்ளை லண்டனில் இருந்தால்தான் என்னோடு ஒத்துப்போவான் என்பார்.
ஆனால் அந்த மாப்பிள்ளை எங்கள் கலாசாரத்தை மதிப்பவனாக இருக்கவேண்டுமெனக் கூறுவார்.
நான் இருவர் வாத்தையும் ஏற்றுக் கொள்ள முடியாதென நேரே கூறிவிட்டேன்.
இப்படி நான் கூறியதால் என்னோடு சில நாட்களாக அவர்கள் கதைப்பதில்லை.
வீட்டில் நேரத்துக்குச் சாப்பாடிருக்கும் சாப்பிடுவேன்.
நிரம்பக் கஸ்டமாக இருந்தது.
அம்மாவிடம் சென்று மனம்விட்டுக் கதைத்தேன்.
யாழ்ப்பாணத்து மாப்பிள்ளைகளைக் கட்டமாட்டேன்

என்று சொன்னேன்.
அவர்களுடைய வாழ்க்கை முறை வேறு.
என்னுடைய வாழ்க்கை முறை வேறு என்று சொன்னேன்.
அவர்கள் இந்த நாட்டில் வந்து என் நண்பர்களுடன் பழகமாட்டார்கள் என்று சொன்னேன்.
நான் இங்கு ஆண் நண்பர்களுடன் பழகும்போது அவர்கள் சந்தேகக் கண்கொண்டு பார்ப்பார்கள் என்று கூறினேன்.
அதனால் பல பிரச்சினைகள் வருமென்றும் கூறினேன்.
ஆனால் அம்மா எதையும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை.
பிடிவாதமாகவே இருந்தாள்.
அம்மாவுக்கு இங்குள்ள பையன்களைப் பிடிக்காது.
அவர்கள் படித்திருந்தாலும் பழக்க வழக்கம் சரியில்லாதவர்கள் என்பது அம்மாவின் வாதம்.
ஆனால் அம்மாவுக்கு நண்பர்களோடு சேர்ந்து நான் 'வைன்' அருந்துவது இன்னும் தெரியாது.
இப்படி என்னுடைய பழக்கங்களையே தெரிந்து கொள்ளாத அம்மா எப்படி மற்ற பையன்களை விமர்சிக்கலாமென எனக்குள் நினைத்துக் கொள்வேன்.
இந்த நாட்டில் பெண்கள் வேலையிடத்தில் வைன் அருந்துவது சகஜம் என அம்மாவுக்குச் சொன்னால்

அவள் ஏற்றுக் கொள்ளவா போகிறாள்?
நான் அம்மாவுடன் கதைத்துக் கொண்டிருக்கும் போது அப்பா வந்தார்.
அப்பா நான் இருந்ததைக் கவனியாதவர்போல் அறைக்குள் சென்று விட்டார்.
எனக்குக் கவலையாக இருந்தது.
என்னைப் போய் அவருடன் கதைக்கும்படி அம்மா கூறினாள்.
எனக்கு அப்பாமேல் நல்ல விருப்பம்.
அவருக்கும் என்மேல் கொள்ளை ஆசை.
அவர் கதையாமல் இருப்பது எனக்கு என்னவோ போல் இருந்தது.
மெதுவாகப்போய் அப்பாவுக்குப் பக்கத்தில் இருந்து என் பக்கத்து நியாயங்களைக் கூறினேன்.
அப்பா ஒன்றும் சொல்லவில்லை.
அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தார்.
அம்மாவின் எண்ணத்தை விட்டுவிடு.
ஆனால் எனக்கு நீ ஒரேயொரு பிள்ளை.
உனக்கேற்ற கணவனை நான் இந்த நாட்டிலேயே கண்டு பிடிப்பேன்.
அதுவரை நீ பொறுமையாக இருக்க வேண்டும் என்றார்.
அப்பாவின் சுபாவமே இப்படித்தான். அப்பாவைப் பொறுத்தவரை எனக்குரிய கணவரைத் தேர்ந்தெடுக்க எனக்கு அனுபவம் போதாதென்பதே.

என்ன சொன்னாலும் பேசாமல் கேட்பார்.
ஆனால் செயல் என்று வரும்போது தான்
நினைத்ததையே செய்வார்.
அவரைப் பொறுத்தவரை ஊரில் திருமணம் முடிக்க
வேண்டும் என்ற எண்ணம் இல்லை.
காலங்கடத்தாமல் நடக்கவேண்டும்.
என்னைக் காலங்காலத்துக்கும் கண்கலங்காமல்
பார்க்கக் கூடிய மாப்பிள்ளை வேண்டும்.
என்னவோ தெரியவில்லை ஊரில் உள்ளவர்கள்
வெளிநாடுகளில் பிறந்து வளர்ந்தவர்களின் சரியான
சோடியாக இருக்கமாட்டார்கள் என என் மனம்
நினைத்தது.
நான் மட்டுமல்ல என்னைப்போன்ற எல்லோருமே
இப்படித்தான் நினைத்தார்கள்.
இந்தமுறை கோடை விடுமுறைக்கு இலங்கைக்குப்
போவதென்றும் என்னை வேறு எதுவும் ஒழுங்கு
பண்ண வேண்டாமென்றும் அம்மாவும் கேட்டுக்
கொண்டாள்.
எனக்கு அங்கே போக விருப்பமில்லை. அப்பாவிடம்
சொன்னேன்.
“அம்மாவை இந்த விடயத்தில் எதிர்க்காதே.
நானுந்தான் வேண்டாமென்றேன் அம்மா
கேட்கவில்லை.
நீ கவலைப்படாதை நான் இருக்கிறன்தானே.”
என்று கூறினார்.

அங்கே சென்று வந்த என் நண்பிகள் அவ்வளவு நல்லாகச் சொல்லவில்லை.

'அங்கே நுளம்பு கடிக்குமாம்.

வெய்யில் கூட இருக்குமாம்.' என்று பல விடயங்களைக் கூறியமையால் அங்கு போவதற்கு எனக்குப் பயமாக இருந்தது. ஆனாலும் அம்மாவும் அப்பாவும் பிடிவாதமாக நின்று என்னைச் சம்மதிக்க வைத்துவிட்டார்கள்.

கோடை விடுமுறையும் வந்தது. புறப்பட்டோம்.

நாங்கள் இலங்கையில் விமான நிலையத்தைவிட்டு வெளியில் வந்தபோது எங்களை வரவேற்க அம்மா வழியில் சொந்தமான ஒரு பையன் வந்திருந்தார். என்னைவிட ஒன்றிரண்டு வயது கூட இருக்கலாம். சுமாரான தோற்றம்.

அம்மா அவரை உறவு முறையில் எனக்கு அறிமுகப் படுத்தி வைத்தாள்.

யாழ்ப்பாணத்தை நோக்கி எங்கள் பயணம் ஆரம்பமாகியது.

அம்மாவும் அந்தப் பையனும் ஊர் விடயங்களைக் கதைத்துக் கொண்டு வந்தனர்.

அவர்கள் விரைவாகக் கதைத்தமையால் எனக்கு அரையும் குறையுமாய் விளங்கியது.

நான் என் மொபைல் போனில் கவனத்தைத் திருப்பி விட்டேன்.

அப்பா களைப்பினால் வானில் ஏறிய சிறிது

நேரத்தில் தூங்கத் தொடங்கிவிட்டார்.
பல மணி நேரங்களின் பின் யாழ்ப்பாணம் அடைந்தோம்.
அந்தப் பையன் எங்களுக்கு மிக உதவியாக இருந்தார்.
அவர் கதைக்கின்ற விதம் பழகுகின்றவிதம் மற்றவர்களைவிட வித்தியாசமாக இருந்தது.
நாங்கள் யாழ்ப்பாணத்திலிருந்து மற்ற இடங்களுக்குச் செல்வதாக இருந்தால் அவரே வந்தார்.
என்னோடு அவர் பழகும் விதமும் நல்லாகவே இருந்தது.
அம்மாவுக்கும் அப்பாவுக்கும் அந்தப் பையனை நன்கு பிடித்திருந்தது.
"அந்தப் பையன் எப்பிடி அம்மா?" என்று என்னை அம்மா கேட்டா.
நானும் "He is very nice and decent" என்று சொல்லி வைத்தேன். என்னுடைய பதில் அம்மாவுக்குச் சந்தோசத்தைக் கொடுத்திருக்க வேண்டும்.
அடுத்தடுத்த நாள் அம்மாவும் அப்பாவும் என்னிடம் வந்து
" அந்தப் பையனை கல்யாணம் முடிக்கிறியா" என்று கேட்டார்கள். எனக்குத் திகைப்பாக இருந்தது.
அப்பா எப்படி இதற்குச் சம்மதித்தார் என்பதுதான் புரியவில்லை.
எப்படி இவ்வளவு சுலபமாக முடிவெடுக்கிறார்கள்.

வாழ்நாள் முழுவதும் நடக்கப்போகின்ற
வாழ்க்கையின் துணைவரை ஓரிரு நாட்களில்
முடிவெடுக்கிறார்கள்.
நான் எதையுமே சிந்திக்காமல் ‘முடியாது’ என ஒரே
வார்த்தையில் கூறிவிட்டேன்.
அவர்களுக்கு முகத்திலறைந்தது போல் இருந்திருக்க
வேண்டும். அவர்களுக்கு என் பதில் நிரம்ப
ஏமாற்றத்தைக் கொடுத்திருக்க வேண்டும்.
அப்பா எதுவும் சொல்லாமல் விறுக்கென்று போய்
விட்டார்.
அம்மா அப்படியே இருந்துவிட்டாள்.
நல்லவேளை ஏன் ‘முடியாது’ என்று கேட்கவில்லை.
நானும் விளக்கம் ஏதும் சொல்லவில்லை.
இதற்குப் பின் எங்களுக்கிடையில்
அந்நியோன்னியமான கதைகள்
இருக்கவில்லை.
அந்தப் பையனும் வழமைபோல் வந்து எங்களுக்கு
உதவி செய்தார்.
இவ்வளவு நேரமும் என் பெயரைக் கூற மறந்து
விட்டேன்.
என் பெயர் பூரணி.
அந்தப் பையனின் பெயர் திவாகரன்.
அம்மாவும் அப்பாவும் அவரைச் திவா என்றே
கூப்பிடுவார்கள்.
அவர் சிலசமயங்கள் என்னோடிருந்து கதைப்பார்.

நான் வாழும் நாட்டைப்பற்றிக் கதைப்பார்.
விபரங்கள் கேட்பார்.
எனக்குத் தமிழ் அவ்வளவாக வராது.
திவா தமிழில்தான் என்னோடு கதைப்பார்.
நாங்கள் கதைத்துக் கொண்டிருக்கும்போது
அம்மா பெருமூச்சு விட்டபடி எங்களைப் பார்த்துக்
கொண்டிருப்பாள்.
நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன.
இலங்கையைவிட்டுப் புறப்படும் நாளும் வந்தது.
அப்போதும் அப்பையனே வந்து உதவி
முழுவதையும் செய்தார்.
மீண்டும் நாம் எங்கள் நாட்டுக்கு வந்துவிட்டோம்.
காலம் நகர்ந்து கொண்டிருந்தது.
அம்மாவும் அப்பாவும் அதைப் பற்றிக்
கதைக்கவேயில்லை.
அம்மா ஒரு நாள் அந்தப் பையனின் பிறந்த
தினத்துக்கு வாழ்த்துச் சொல்லும்படி என்னைக்
கேட்டாள். நான் ஏன் எனக் கேட்டதற்கு 'பாவம்
எவ்வளவு உதவி செய்தவர்.
ஒரு நன்றிக்காகச் செய்தால் என்ன.
குறைந்தா போய்விடுவாய்' என்று கேட்டாள்.
நியாயம் இருந்தது.
மறுக்காமல் பிறந்த தின வாழ்த்து அனுப்பினேன்.
நன்றி எனப் பதில் வந்ததோடு 'எப்படி
இருக்கிறீர்கள்' என்ற வினாவும் வந்தது.

பதில் அனுப்பவேண்டிய நிர்ப்பந்தம்.
அனுப்பினேன். இப்படிக் கதை சில நாட்கள் தொடர்ந்தது. பின் எனது முகப் புத்தக முகவரி கேட்டார். அதையும் கொடுத்தேன்.
முகநூல் வட்ஸ் அப் என்று எங்களின் உரையாடல் தொடர்ந்தது.
சாதாரணமாக இரண்டு நண்பர்கள் கதைப்பது போல்தான் கதைத்துக் கொண்டோம்.
வித்தியாசமாக நாம் எதுவும் கதைத்ததில்லை.
இப்படித் தொடர்ந்த உரையாடல்களினால் எனக்கும் அவர்மீது ஒருவித லயிப்பு வந்தது.
அந்த லயிப்பைக் காதல் என்பதா நட்பு என்பதா என எனக்குப் புரியவேயில்லை.
யாரை 'முடியாது' என மறுத்திருந்தேனோ அவர் வேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டேன்.
அம்மா என்னைப் பார்த்து நமட்டுச் சிரிப்புச் சிரிப்பாள். அப்பாவும் அப்படித்தான்.
வட்ஸ் அப்பில் தொடங்கி முகநூலுக்குச் சென்று இப்போ தொலைபேசியில் கதைக்கிற அளவுக்கு முன்னேறியிருந்தோம்.
மீண்டும் இலங்கைப் பயணம்.
இந்தத் தடவை சந்தோசமாகவே புறப்பட்டேன்.
அவருக்கென்று சில் பொருட்களை வாங்கவும் தவறவில்லை.
அங்கு சென்றதும் அவர்தான் வந்திருந்தார்.

யாழ்ப்பாணம் சென்றதும் என்னுடைய அப்பா அம்மாவுக்கும் அவருடைய அப்பா அம்மாவுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடந்தது.
முடிவில் யாழ்ப்பாணத்தில் எழுத்தையும் கல்யாணத்தை எங்கள் நாட்டிலும் வைப்பதென முடிவாயிற்று.
எழுத்தும் கோலாகலமாக நடந்தது.
மோதிரம் மாற்றிக் கொண்டோம்.
அவரோடு சில மணித்தியாலங்கள் தனிமையில் கதைத்தேன்.
எதுவும் எனக்குத் தோன்றவில்லை.
அவசர அவசரமாக எல்லாம் நடந்து விட்டது.
எங்கள் நாட்டுக்கு வந்து அவரைக் கூப்பிடுவதென ஏற்பாடு.
திரும்ப வந்துவிட்டோம்.
நாங்கள் வந்து இரு கிழமையால் அவரிடம் இருந்தொரு கடிதம் வந்தது.
நான் தனக்கு மட்டுமே சொந்தமென்றும் அடிக்கடி பார்ட்டிகளுக்குப் போக வேண்டாம் எனவும் மற்றவர்களோடு பழகுவதை மட்டுப்படுத்துவதும் நல்லது எனவும் எழுதியிருந்தார்.
நான் இலங்கையில் அவரோடு கதைக்கும் போது எனது ஆண் நண்பர்களுடன் வெளியே போவது பற்றியும் அவர்களது இயல்புகள் பற்றியும் கூறியிருந்தேன்.

அப்போது அவர் எதுவும் கூறவில்லை.
அமைதியாகக் கேட்டுப் புன்னகைத்தாரே
யொழிய எதுவும் எதிர் மறையாகக்
கதைக்கவில்லை.
இப்போ இப்படி எழுதியிருக்கிறார்.
எனக்குக் குழப்பமாக இருந்தது.
அம்மாவிடம் காட்டினேன்.
தனக்கும் நான் பார்ட்டிக்குப் போவது விருப்ப
மில்லையென்றும் அவர் சரியென்றும் அம்மா
வாதாடினாள்.
நான் அம்மாவைக் குற்றம் சொல்ல முடியாது.
நானும் சேர்ந்துதானே முடிவெடுத்தேன்.
அப்பாவிடம் கூறினேன். அவர் இங்கே வந்தால்
எல்லாம் சரியாகிவிடும் என்றும் அவருக்கு
இந்த நாட்டுப் பழக்க வழக்கங்கள் பெரிதாகத்
தெரியாததனால் அவரைக் கூப்பிடும் அலுவலைத்
துரிதப்படுத்தும்படி கூறினார்.
இந்தப் பிரச்சினை வருமென்ற படியால்தான்
முதலில் மறுத்திருந்தேன்.
இப்போ என்ன செய்வது?
அப்பா சொன்ன வழியை யோசித்தேன்.
நானே இலங்கை போய் அவரை விரைவாகக் கூட்டி
வருவதெனத் தீர்மானித்தேன்.
அப்பாவும் ஆமோதிக்கச் சென்றுவிட்டேன்.
எல்லாம் சரியாக நடந்து அவர் என்னோடு இங்கு

வந்து விட்டார்.
வந்த முதல் நாள் என்னுடைய அல்பமொன்றைப் பார்க்கக் கொடுத்தேன்.
பார்த்தார்.
என்ன நினைத்தாரோ தெரியவில்லை ஒன்றும் கூறவில்லை.
நாங்கள் இருவரும் தனியே வெளியில் சென்றோம்.
அங்கே வைத்துக் கூறினார்.
'நான் ஒன்று கூறுவேன் நீங்கள் குறையாக நினைக்கக் கூடாது' என்றார்
'கூறுங்கள்' என்றேன்.
'உங்கடை அல்பத்திலை நீங்கள் மற்ற ஆம்பிளையளின்ரை தோளிலை கை போட்டு நிற்கிறது.. எனக்குப் பிடிக்கேல்லை.
இதுவரை பரவாயில்லை.
இனிமல் அப்பிடி நடக்காமல் பார்க்க வேணும்' என்றார் சிறிது நேரம் எதுவும் பேசாமல் 'இஞ்சை இது எல்லாம் சாதாரணம் வெறும் நட்புத்தான் என்றேன்'
அவர் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. நான் தனக்கு மட்டும்தான் என்று வாதிட்டார்.
குழப்பமான நிலையில் வீடு வந்து சேர்ந்தோம்.
அம்மாவிடம் நடந்தவற்றைக் கூறினேன்.
'இனி ஒன்றும் செய்யேலாது. நீ பணிஞ்சு விட்டுக் கொடுத்துத்தான் போகவேண்டும்'

அம்மாவின் இந்தக் கூற்றினை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.
வளர்ந்த ஒரு நாட்டிலிருந்து கொண்டு இப்படியான ஒரு மிருகத்தனமான கட்டுப்பாட்டுக்குள் என்னைக் கொண்டு வர முடியவில்லை.
அவருக்குச் சில விடயங்களைப் புரிய வைக்க முயன்றேன்.
அவர் புரிந்து கொள்ளும் மன நிலையில் இருக்க வில்லை.
என்னுடைய கணவன் தான் என்ற நிலைப்பாட்டில் தான் சொல்வதை நான் கேட்டுத்தான் ஆக வேண்டுமென்றும் விவாதம் செய்தார்.
அதற்குப் பின் அவரோடு நான் கதைக்கவில்லை.
என் மனம் போராடிக் கொண்டிருந்தது.
வாழ்நாள் காலமும் இந்தப் பிரச்சினை தொடரும் என எனக்குப்பட்டது.
எப்படி இதிலிருந்து வெளியே வருவது.
ஒன்றில் நான் அவர் சொல்வதுபோல் எனக்கென்று எதுவுமில்லாத அடிமை வாழ்க்கையை ஏற்றுக் கொள்ள வேண்டும் அல்லது அவரை விட்டு விலக வேண்டும்.
அவர் கூடாதவரல்ல.
அவரின் நிலை நான் அவருக்கு மட்டும்தான். வேறு யாரும் நட்போடு என்மேல் அன்பு செலுத்தினாலும் அவரால் தாங்கமுடியாது.

ஒரு கட்டத்தில் முறிவு வரலாம்.
அது இப்போதே முறிந்தால் என்ன என்று என் மனதுக்குப்பட்டது.
அம்மா அப்பாவிடம் கலியாண ஏற்பாடுகளை சிறிது தாமதிக்குமாறு கேட்டுக் கொண்டேன்.
இதனால் அவர்கள் முழுமையாகக் குழப்பமடைந்தனர்.
என்னுடைய பிரச்சினையை அவர்களுக்குப் புரிய வைக்க முயன்றேன்.
'நீ சொல்லித்தானே எல்லாவற்றையும் செய்தோம்' என்று பந்தை என் பக்கம் திருப்பி அடித்தனர்.
குழப்பத்துக்கு மேல் குழப்பம்.
'ஆண் நண்பர்களுடன் நெருங்கிப் பழகுவதைத் தவிர்க்கச் சொல்லித்தானே அவர் கேட்கிறார்.
அதில் என்ன பிழை?' என்று அப்பா கேட்டார்.
அப்படியானால் அவருக்கு என் மேல் நம்பிக்கையில்லையா? இந்த நம்பிக்கையின்மை ஆரம்பத்திலேயே வந்தால் எப்படி நீண்ட காலம் வாழ்வது?
வெளியில் வேலைக்குப் போனால் அதை எப்படித் தவிர்ப்பது. சிலவேளை வேலையை விடச் சொல்வாரோ?
எப்படி அது சாத்தியமாகும்? வாழ்க்கை முழுவதும் இப்படி ஒரு பயத்துடனும் விருப்பமின்மையுடனும் எப்படி வாழ்வது. அவரிடமே இதைச் சொன்னேன்.
அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த அவர் 'அப்ப

என்ன செய்ய நினைக்கிறாய்?' என்று கேட்டார். எனக்கு என் முடிவைச் சொல்லத் தயக்கமாக இருந்தது. அவரே சொன்னார்.

'அப்ப எங்களுடைய வாழ்க்கையை முடித்துக் கொள்ள விரும்புகிறாய்.

அது தானே' எனக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை.

அவரைப் பார்க்கப் பாவமாக இருந்தது.

ஊரிலிருந்து கூட்டிவந்து அவரை அவமானப் படுத்துவதுபோல் எனக்குப்பட்டது.

எதையும் மறைக்காமல் நேரடியாகவே கதைக்கிறார்.

வாழ்க்கை தொடங்கு முன்பே முடிவைப் பற்றிக் கதைக்க வைத்துவிட்டேனே எனக் கவலையாக இருந்தது.

மிகமிக நல்ல ஒரு மனிதர்.

அவர் வாழ்ந்த சூழ்நிலை அவரை இப்படிச் சிந்தித்திருக்க வைத்திருக்கலாம்.

காலப்போக்கில் அவர்

மாறலாம் என்ற எதிர்பார்ப்போடு ஏன் வாழ்க்கையைத் தொடங்கக் கூடாது எனவும் நினைத்தேன். அவரைப் பந்தத்திலிருந்து வெட்டி விடுவதொன்றும் கடினமான காரியமல்ல.

ஆனால் அதனால் எத்தனை பேருக்குத் துன்பம்.

இந்த முடிவு நான் பிரச்சினையிலிருந்து தப்பி ஓடுவது போலல்லவா இருக்கிறது.

‘பிரச்சினையை எதிர் கொண்டு போராடி வெற்றி பெறுவதுதானே வாழ்க்கை’ இப்படி அப்பா எத்தனை தடவை கூறியிருக்கிறார்.

மனம் ஒரு ஆறுதல் நிலைக்கு வர ஆரம்பித்தது. இதைத்தான் இரத்தத்தில் ஊறியுள்ள கலாசாரம் என்கிறார்களோ!

அப்பா அம்மாவிடம் போய் கலியாண வேலைகளைத் துரிதப்படுத்தும்படி கூறினேன்.

பார்வை *2018*

# உடைந்த கண்ணாடி

இன்னும் இரு நாட்களில் கல்யாணம்.
காந்தனின் சந்தோசத்திற்கு அளவேயில்லை.
இந்தியாவில்தான் கல்யாணம்.
லண்டனிலிருந்து புறப்பட்டு இன்றுதான் இந்தியா வந்திருந்தான்.
பெண்ணை இன்னும் அவன் நேரில் பார்க்கவில்லை.
அம்மாதான் இந்தக் கல்யாணத்தைப் பேசியிருந்தாள்.
படம் அனுப்பியிருந்தாள்.
படத்தில் அவள் கொள்ளை அழகு.
தலையாட்டி விட்டான்.
பெண்ணுக்கும் தகப்பன் இல்லை.
நாளை யாழ்ப்பாணத்திலிருந்து தாயும் அவளும்

வருவதாக எழுதியிருந்தாள் காந்தனின் அம்மா.
காந்தனுக்கு முப்பத்தியிரண்டு வயது.
நான்கு பெண்களுக்கு அவன் அண்ணன்.
இரவும் பகலும் வேலை செய்வான்.
கடும் உழைப்பால் அவர்கள் நால்வருக்கும்
திருமணம் செய்து வைத்து நிமிர்ந்தபோது
முப்பத்தியிரண்டு வயதாகியிருந்தது.
ஒரு நாள் அம்மாவின் கடிதம் வந்தது.
அன்புள்ள தம்பிக்கு இனி நீ கல்யாணம் கட்டவேணும்.
வயது நல்லாகக் கூடியிட்டுது. இந்தக் கடிதத்தோடை
ஒரு படம் அனுப்பியிருக்கிறன். நல்ல குடும்பம்.
பெட்டையும் நல்ல வடிவு. உனக்குப் பிடிச்சால் மீதி
விடயங்களை நான் கதைக்கலாம்.
இப்படிக்கு அம்மா என்றிருந்தது.
படத்தைப் பார்த்தான். அழகிதான்.
வயதுதான் கொஞ்சம் கூட வித்தியாசம்.
உடனேயே சம்மதம் தெரிவித்துக் கடிதம் எழுதி
விட்டான்.
அவன் பதில் கிடைத்ததும் அவன் அம்மா
சந்தோசங்கொண்டு காரியத்தில் இறங்கித்
துரிதமாக எல்லாம் நடந்துவிட்டது.
ஆம் இன்னும் இரு நாட்களில் கல்யாணம்.
இரு பக்கத்தாரும் வந்து விட்டார்கள்.
படத்தில் பார்த்ததைவிட அழகாக இருக்கிறாள் என
மனதிற்குள் சொல்லிக் கொண்டான் காந்தன். பல

தடவை அவளோடு கதைப்பதற்கு முயற்சித்தும் முடியவில்லை.
காந்தனும் அவன் அம்மாவும் கீழ் வீட்டிலும் பெண்ணும் அவள் அம்மாவும் மேல் வீட்டிலும் இருந்தார்கள்.
கல்யாண வீட்டு அலுவல்கள் மும்முரமாக நடந்து கொண்டிருந்தன.
காந்தன் ஒரு அப்பாவியான இளைஞன்.
தன் குடும்பத்திற்காகத் தன் வாழ் நாளில் பெரும் பகுதியைச் செலவழித்துவிட்டான்.
ஓய்வு எடுத்ததே இல்லை.
அந்த வீட்டு பல்கனியில் நின்று யோசித்துக் கொண்டிருந்தான்.
அவன் யோசித்துக் கொண்டிருப்பதைப் பார்த்து அருகில் வந்த அவன் அம்மா
“என்ன தம்பி யோசிக்கிறாய்.
எல்லாம் நல்லாய் நடக்கும். தம்பி எதுக்கும் அந்தப் பிள்ளையோடை ஒருக்காய் கதைச்சுப் பாரன்” என்றாள்.
பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலிருந்தது.
“நான் மருமகளின்ரை அம்மாவோடை கதைச்சிட்டு வாறன்” என்று கூறிக்கொண்டே மேல்மாடிக்கு அவனின் அம்மா சென்று விட்டாள்.
என்ன பதில் வருமோ என்று யோசித்துக் கொண்டேயிருந்தான்.

அந்தப் பெண்ணின் பெயர் காயத்திரி.
கல்யாணம் முடிந்ததும் காயத்திரிக்கு விரைவாக விசா எடுத்து லண்டனுக்குக் கூட்டிச் சென்று நல்ல வாழ்க்கை வாழவேண்டுமென்று கனவு காணத் தொடங்கினான் காந்தன்.
அம்மா வந்து தோளில் தட்டியபோதுதான் நிஜ உலகுக்கு வந்தான்.
“அவை ஓமெண்டு சொன்னவை நீ இப்ப போ தம்பி” அம்மா சொன்னவுடனேயே மாடிப்படிக்கட்டில் ஏறத் தொடங்கிவிட்டான்.
மேலே சென்றதும் காயத்திரியின் அம்மாதான் வரவேற்றாள்.
“இருங்கோ தம்பி. மகள் வருவா இப்ப” என்று கூறிவிட்டு அந்த அம்மா கீழே போய்விட்டாள்.
ஒரு ஐந்து நிமிடத்தின் பின் காயத்திரி அறையைவிட்டு வெளியே வந்தாள்.
“மன்னிச்சுக் கொள்ளுங்கோ.
பிரண்ட்டோடை கதைச்சுக் கொண்டிருந்தனான்” என்று சிரித்துக் கொண்டே வந்து காந்தன் இருந்த கதிரைக்கு முன் கதிரையில் இருந்தாள்.
அவனுக்குத் திகைப்பாக இருந்தது.
அவனுடைய கற்பனையில் அவள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண்ணாதலால் வெட்கப் பட்டுக் கொண்டே வருவாள் என்றே அவனது மனத் திரையில் காட்சி விரிந்திருந்தது.

காட்சி வேறுவிதமாக இருந்ததால் கொஞ்சம் குழம்பித்தான் போனான்.

“ம்.. சொல்லுங்கோ. கதைக்கவேணுமெண்டு சொன்னியளாம்” அவளே தொடங்கினாள்.

அவன் பதில் சொல்வதற்கு வாயைத் திறக்க அவளுடைய கைத் தொலைபேசி அலறியது.

“கொஞ்சம் பொறுங்கோ வாறன்” என்று கூறிவிட்டுக் கதைத்தாள். கதை முடிந்தது.

“ம் சொல்லுங்கோ”

“அப்பிடி ஒண்டும் இல்லை.

நான் உங்களைப் பார்த்ததில்லை.

அதனாலை கதைப்பம் எண்டு நினைச்சன்.” அவன் தடக்கித் தடக்கிச் சொன்னான்.

“உங்களைப் பார்த்தால் வெளி நாட்டிலை இருந்து வந்த ஆள் மாதிரித் தெரியேல்லை. என்ரை நண்பிகள் சொன்ன மாதிரி இல்லை”

“ஏன் உங்கடை நண்பிகள் என்ன சொன்னவை?”

“வெளியிலையிருந்து வந்தா கொஞ்சம் நெருக்கமாய் படபடவென்று கதைப்பாங்கள் என்று சொல்லிச்சினம்”

அவன் மெதுவாகச் சிரித்தபடி “உங்களைப் பார்த்தால் யாழப்பாணத்திலையிருந்து வந்த பிள்ளை மாதிரித் தெரியேல்லை. சரியான போவேட்டாய் இருக்கிறியள்.” என்றான்.

அவள் சிரித்தபடி

“அதெல்லாம் அந்தக் காலம். இப்ப அப்பிடி நீங்கள்

பெண்களைப் பார்க்க முடியாது”
காந்தன் அவளின் கதைகளைக் கேட்டு
ஆச்சரியப்பட்டான்.
“நீங்கள் எங்களைக் குறைவாய் மதிப்பிடிற மாதிரித் தெரியுது. நாங்கள் எங்கடை ஆசைகளை விட்டு உங்களைப்போல இருக்கிற அக்கா தங்கைமாரைக் கரையேற்ற இரவும் பகலும் உழைக்கிறம்.
நாங்கள் போவேட் இல்லை என்று நீங்கள் சொல்லிறதைக் கேட்கச் சிரிப்பாய்க் கிடக்குது”
காந்தன் குரலை உயர்த்திச் சொன்னவிதம் அவளுக்குச் சிறிது பயத்தைக் கொடுத்ததோடு அவன் சொல்வதிலுள்ள உண்மையும் அவளுக்குப் புரியாமலில்லை. அதற்குள் அவளுக்குத் தொலைபேசி அழைப்புவர அவன் எழும்பி “நீங்கள் கதையுங்கோ நான் போட்டுவாறன்” எனக் கூறியவண்ணம் வெளியேறி விட்டான்.
தொலைபேசியை எடுத்த காயத்திரி “ம் சொல்லுங்கோ.
அந்தாள் போயிட்டுது.” என்றாள்.
மறுபுறத்தில் ஏதோ கண்டிப்பாகக் கூறப்பட்டிருக்க வேண்டும்.
“ஓமோம்..நான் கவனம்.
கலியாண வேலை வேகமாய் நடக்குது.
கொஞ்சம் பயம்தான் பார்ப்பம்” என்று கூறிவிட்டு தொலைபேசியை வைத்துவிட்டாள்.

பல்கனிக்குச் சென்று ஒவ்வொரு கோணத்தில் செல்பி எடுத்தாள்.

இதனைக் கவனித்த வீட்டுக்காரர் பகடியாக "என்னம்மா அவர் வந்தாப் போலையும் செல்பி எடுக்கிறியள். நடக்கட்டும்..நடக்கட்டும்" என்று கூறிவிட்டுப் போக மெல்லிய ஒரு புன்னகையை உதிர்த்துவிட்டு அவள் உள்ளுக்குள் போய் விட்டாள். வீட்டுக் காரர் வெளியில்போக காந்தனும் அங்கு வந்தான்.

"என்ன ஒரே செல்பி வருகுது போல" என்று அவனுக்கும் அவர் கூறினார்.

"செல்பியோ அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை அங்கிள்" என்று அவன் கூற வீட்டுக்காரர் கொஞ்சம் குழப்பமடைந்தார். ஏதோ இருக்கிறது. கண்டு பிடிக்க வேணும். அவர் துப்பறியும் வேலையில் இறங்கினார்.

அடுத்த நாள் காயத்திரியின் அம்மா வந்து "பிள்ளை மாப்பிள்ளையோடை கொஞ்சம் கதைக்க வேணுமாம்" என்று காந்தனின் தாய்க்குச் சொல்ல காந்தனுக்குச் செய்தி சென்றது.

"என்ன கதைக்கப் போகிறாள்.

கொஞ்சம் வாய்க்காறிதான்.

எதுக்கும் போய்த்தான் பார்ப்பமே"

என்று தனக்குள் நினைத்தபடி மேல் மாடிக்குச் சென்றான்.

அவள் அவனுக்காகக் காத்திருந்தாள்.

காந்தன் சென்றதும் “வாங்கோ இருங்கோ” என்று சொல்லிவிட்டு சிறிது நேரம் பேசாமல் இருந்தாள்.
“ஏதோ கதைக்க வேணும் என்று வரச் சொன்னியள்..” என்று காந்தன் ஆரம்பித்தான்.
“எங்கடை கல்யாணம் முடிஞ்சதும் என்னைக் கூப்பிட எவ்வளவு மாதம் செல்லும்” என்று கேட்டாள்.
“எல்லாம் சரியாய் இருந்தால் கிட்டதட்ட 3 மாதம் எடுக்கும்”
“அப்பிடியெண்டால் நான் உங்களிட்டை ஒண்டு கேட்பன் நீங்கள் ஓமெண்ட வேணும்” என்றாள்.
பீடிகை பலமாக இருந்தது.
“அது நீங்கள் கேட்கிற விடயத்தைப் பொறுத்தது. பரவாயில்லை கேளுங்கோ” என்றான் காந்தன்.
சிறிது நேரம் பேசாமலிருந்த அவள்
“எங்கடை முதலிரவு நான் லண்டனுக்கு வந்தாப் போலைதான் நடக்க வேணும்”
அவன் திடுக்கிட்டுப்போய் அவளைப் பார்த்தான்.
முதலிரவு அவனுக்கொரு பிரச்சினை இல்லை.
அது இல்லாமல் போனாலும் கவலை இல்லை.
ஆனால் இது ஒரு பெண்ணின் வாயால் வந்தது அவனுக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது.
அவனொன்றும் சொல்லவில்லை.
“என்ன ஒன்றும் சொல்லவில்லை” அவள் திரும்பவும் கேட்டாள்.
அவன் பதில் சொல்லாமலே எழுந்தான்.

அவளுக்குக் கோபம் வந்திருக்க வேண்டும்.
“ஏய் பதிலைச் சொல்லிப் போட்டுப் போவன்” என்று ஒருமையில் கத்தினாள்.
அவளை ஒரு புழுவைப் பார்ப்பதுபோல் பார்த்தான்.
கீழே வந்த அவனுக்குத் தலை சுற்றியது.
எங்கோ ஒரு இடத்தில் தவறு நடப்பது அவனுக்குப் புரிந்தது.
துப்பறியும் காரியத்தில் இறங்கியிருந்த வீட்டுக்காரர் முகநூலில் சென்று அவளைப் பற்றிய சகல விடயங்களையும் எடுத்துவிட்டார்.
விடயங்களைப் பெற்றவுடன் அவர் கலங்கிப் போனார்.
எப்படியாவது இந்தக் கல்யாணத்தை நிறுத்த வேண்டும்.
முதலில் பெண் பக்கத்தாரோடை கதைக்க வேண்டும்.
விறுவிறு வென்று மேல்மாடிக்குச் சென்றார்.
ஏற்கனவே காந்தன் பதில் கொடுக்காததால் குழம்பிப் போயிருந்த காயத்திரி வீட்டுக்காரரைக் கண்டதும் மேலும் குழப்பமடைந்தாள்.
“அம்மாவைக் கூப்பிடுங்கோ” என்றார்.
அவளின் தாய் உள்ளிருந்து வெளியே வந்தாள்.
“அம்மா இந்த வீட்டிலை எத்தினையோ கல்யாணம் நடந்திருக்கு. உங்கடை மகளும் நீங்களும் அந்தப் பையனைக் கட்டத்தான் வந்திருக்கிறியளோ” என்று கேட்டார். தாய் பதில் கூறமுன் முன்னுக்கு வந்த

காயத்திரி
“உங்களுக்கு ஏன் இந்தப் பிரச்சினை யெல்லாம்.
நீங்கள் வாடகைக்குக் குடுக்கிற ஆள்.
அவ்வளவோடை வாயைப் பொத்திக் கொண்டு
இருக்கோணும்”
ஈட்டிபோல சொல்லுகளை அள்ளி வீசினாள்.
வீட்டுக்காரர் உசாராகிவிட்டார்.
“எங்கடை வீட்டிலை தவறு நடக்க விடமாட்டன்.
உங்கடை முகநூலிலை நீங்கள் வேற
பொடியனோடை தொடர்பு இருக்கிற மாதிரித்
தெரியுது.
உண்மையைச் சொல்லவேணும்” என்று உரத்துச்
சொன்னார்.
“ ஓம் எனக்கு இருக்குத்தான் அதுக்கென்ன?”
வீட்டுக்காரருக்கு வாயடைத்துப் போயிற்று.
“அப்ப இந்தக் கலியாணம் ஏன்? அவனைக்
கூப்பிட்டுக் கட்டலாம் தானே”
அவரின் இந்தக் கேள்விக்கு அவள்
பதிலளிக்கவில்லை.
வெண்ணெய் திரண்டு வரும்போது தாளி உடையிற
கட்டத்துக்கு வந்து விட்டதென்பதை அவள் உணர்ந்து
கொண்டாள்.
படாரென்று கதவைச் சாத்திவிட்டு அறைக்குள்
போய்விட்டாள்.
வெளியிலிருந்த தாய் தானும் போக எழும்பியபோது

“அம்மா நீங்கள் கொஞ்சம் இருங்கோ”
அந்தத் தாய் எதுவும் கூறாமல் இருந்தாள்.
கதவைச் சாத்திக்கொண்டு உள்ளே போன காயத்திரி சட்டென்று வெளியே வந்து “அம்மாவிட்டை ஒண்டும் கேட்கவேண்டாம். நானே எல்லாம் சொல்லிறன்.
இது நானும் என்ரை காதலனும் போட்ட திட்டம்தான்.
அவருக்கு லண்டனிலிருந்து வரமுடியாது.
நான் எப்பிடியும் போயாக வேண்டும்.
அதற்கு இவரைப் பயன்படுத்தினன்.
இது அம்மாவுக்கும் தெரியும்..” வீட்டுக்காரர் அந்த அம்மாவை புழுவைப் பார்ப்பதுபோல் பார்த்தார்.
அவள் தொடர்ந்தாள்.
“நான் ஒண்டும் கூடாதவளில்லை.
சூழ் நிலைதான் என்னை இப்படிச் செய்யத் தூண்டியது.
இஞ்சை வந்து இந்தப் பையனைப் பார்த்த பிறகுதான் நான் எவ்வளவு பாவம் செய்யிறனெண்டு விளங்கிச்சுது.
இப்ப ஒண்டுமே செய்யேலாது.
அதனாலைதான் இவரைக் கூப்பிட்டு முதலிரவு இல்லை எண்டு கூறினனான்.” என்று அவள் கூறியபோது வீட்டுக்காரர் காதைப் பொத்திக் கொண்டார்.
“இனிக்காணும்..” என்று கூறிவிட்டு பிரமை பிடித்தவராகக் கீழே வந்தார்.

அங்கே காந்தன் தன் பெட்டியில் உடுப்புகளை
அடுக்கிக் கொண்டிருந்தான்.
வீட்டுக்காரர் ஏதோ சொல்ல முயற்சிக்க
“அண்ணை நான் அம்மாவுக்கு எல்லாம்
விளக்கியிட்டன். இந்தக் கலியாணம் சரிவராது.
நீங்கள் எனக்கும் அம்மாவுக்கும் செய்த உதவிகளுக்கு
நன்றி. நான் நாளைக்கு லண்டனுக்கு வெளிக்கிடிறன்”
வீட்டுக்காரர் தலையாட்டிக் கொண்டே தன்
வீட்டுக்குள் நுழைந்து கொண்டிருந்தார்.

*பார்வை 2018*

# பச்சோந்தி

சபாபதி ஒரு நல்ல எழுத்தாளர். அமைதியாக மேசையிலிருந்து எழுதிக் கொண்டிருந்தார்.

.......இறைவனின் படைப்பில் மனிதப் படைப்பு மகத்தானது. இந்தப் படைப்பில் நாம் செய்யும் பாவங்கள் ஏராளம்.

பதவி வெறி பிடித்தவர்களாக அலைந்து கொண்டு இருக்கிறோம்.

இந்தப் பதவிகளுக்காக எவ்வளவு சூழ்ச்சிகள் செய்கிறோம்.

இந்தப் பதவிகளுக்காக உறவுகளைக் கூடப் பகைத்துக் கொள்கிறோம்.....

என்று அவர் எழுதிக் கொண்டிருக்கும்போது

தொலைபேசி அடிக்கிறது. நிமிர்ந்து பார்க்கிறார்.
தொலைபேசியை எடுப்பார் யாருமில்லை.
அது அநாதரவாக அடித்துக் கொண்டிருக்கிறது.
இந்த வீட்டில் எல்லாருமே செவிடர்களாக
இருக்கிறார்கள்.
நான் எவ்வளவு முக்கியமான விடயங்களை எழுதிக்
கொண்டிருக்கிறேனென்பது ஏன் யாருக்கும்
புரிவதில்லை.
இப்படித் தனக்குள்ளே மற்றவர்களை வைது
கொண்டு தொலைபேசியைப் போய் எடுக்கிறார்.
மறுகரையில் ஆலயமொன்றின் தர்மகர்த்தா
கதைக்கிறார்.
நாளைக்கு ஆலயத்தில் தேர்தலாம்.
இவரை மறக்காமல் வந்து வோட்டுப் போட
வேண்டுமாம்.
இவருடைய அந்த ஒரு வோட்டு மிக முக்கியமாம்.
தொலைபேசி வைக்கப்படுகிறது.
ஆலயத்தில் ஏன் தேர்தல்? இந்தத்
தேர்தலுக்காக நான் என்னுடைய வேலைகள்
எல்லாவற்றையும் விட்டுவிட்டுப்
போகவேண்டுமாம். நான் எப்போ அந்த ஆலயத்தில்
அங்கத்தவரானேன். புரியவில்லை.
எனக்காக அவரே அங்கத்துவப் பணத்தைக் கட்டி
என்னை அங்கத்தவராக்கி தனக்கு வோட்டுக்
கேட்கிறார் இப்போ.

இது எவ்வளவு தவறு.
அன்பே சிவம் என்கின்ற ஆலயத்தில் ஏன் போட்டி.
இப்படி தனக்குள் முணுமுணுத்துக் கொள்கிறார்.
இவர் ஒன்றும் இலேசுப்பட்டவர் இல்லை.
இவருக்கும் அந்தப் பதவியில் ஆசை.
தன்னை ஏன் ஒருவரும் அந்தப் பதவிக்குப் போட்டி போடக் கேட்கக் கூடாது எனப் பல தடவை வேதனைப்பட்டிருக்கிறார். தலையை ஆட்டியபடி மேசைக்கு வந்து விடுகிறார் அவருடைய எழுத்து தொடர்கிறது.

போட்டியும் பொறாமையும் மனிதர்களை சுயநலமிகளாக மாற்றி விடுகிறது.
ஆலயம் என்று கூடப் பார்ப்பதில்லை.
தாங்கள் உயர்ந்த பதவியில் அமர்ந்துவிட வேண்டும்.
மற்றவர்கள் தங்களை பெரியவர்களாக எண்ண வேண்டும்.
இதுதான் இன்றைய மனிதர்களின் எண்ணங்களாக உள்ளது....
மீண்டும் அவருடைய எழுத்துக்கு இடைஞ்சல் வந்துவிடுகிறது.
இந்தத் தடவை அவரின் மனைவி வந்து தொலைபேசியை எடுத்து விடுகிறாள்.
அப்பாடா என்று இவர் பெருமூச்சு விடுகிறார்.
ஆனாலும் தன் வேலையில் அவரால் கவனம்

செலுத்த முடியவில்லை. காதைத் திருப்பி மனைவி என்ன கதைக்கிறாள் என்று ஒட்டுக் கேட்கிறார். கதை சுவராசியமாக இருக்கிறது. ஆனால் அவரால் முழுமையாக விளங்கிக் கொள்ள முடியவில்லை. கதை முடிந்து விடுகிறது.

அங்கே தொலைபேசி வைத்ததும் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு எழுதுவதுபோல் பாசாங்கு செய்கிறார்.

அவர் மனைவி விடயத்தைச் சொல்வதற்காக எட்டிப் பார்க்கிறாள்.

அவர் எழுதிக் கொண்டிருக்கிறார்.

அவரைக் குழப்பக்கூடாது என்று போய் விடுகிறாள். இவர் எங்கே எழுதுகிறார். பாசாங்கல்லவா செய்து கொண்டிருந்தார்.

கதையைக் கேட்காவிட்டால் மண்டை வெடித்து விடும் போலிருந்தது.

எழும்பிப் போய் கேட்கிறார்.

“அது ஒன்றும் இல்லை.

பக்கத்து வீட்டுப் பரமநாதன் மனைவி எடுத்திருந்தாள்.

இப்போது சமைக்கிறேன்.

பின்பு சொல்லுகிறேன்” என்று அவள் முடித்து விட்டாள்.

அவருக்கு ஏமாற்றமாகப் போய்விட்டது.

மீண்டும் தன்னுடைய மேசைக்குச் சென்று எழுதத்

தொடங்குகிறார்.
...மனிதர்கள் வாழப்போவதோ சிறிது காலம்தான். இந்தச் சிறிய காலத்தில் எத்தனை பிரச்சினைகள். ஆளுக்காள் பொறாமை.
தம்பியோடு அண்ணன் கதைப்பதில்லை.
அண்ணனோடு தம்பி கதைப்பதில்லை.
தங்கையோடு அக்கா கதைப்பதில்லை.
அக்காவோடு தங்கை கதைப்பதில்லை.
ஏனிந்தப் பிரச்சினைகள். வாழப்போகின்ற இந்தக் குறுகிய காலத்தில் எல்லோரும் சந்தோசமாக இருந்துவிட்டுப் போகலாமே....
என்று அவர் எழுதிக் கொண்டிருக்கும் போது அவரின் மனைவி அவருக்கு முன்னால் வந்திருந்தாள்.
“தொலைபேசி எடுத்தது பக்கத்துவீட்டுப் பரமநாதனின் மனைவி கமலா” என்றாள்
“அதுதான் தெரியுமே. மேற்கொண்டு சொல்” என்றார்.
“பரமநாதனுக்கு இரு சகோதரர்கள்.
ஒரு சகோதரரின் பிள்ளைக்கு இன்னும் மூன்று மாதத்தில் கல்யாணம் நடைபெற உள்ளது.
பரமநாதனுக்குச் சகோதரர்களோடு பிரச்சினை.
அவர் தான் போகமாட்டேன் என்று பிடிவாதம் பிடிக்கிறாராம்....”
“அவர் சரிதானே. அவர்கள் அவருக்குச் செய்தவைகளை எப்படி மறக்க முடியும்.
இதிலே தன்மானம் தானே முக்கியம்.

வாழப்போகின்ற இக்காலத்தில் அவர் மானத்துடன் வாழ்ந்து விட்டுப் போகட்டுமே.
நீ என்ன சொன்னாய்.”
“நான் ஒன்றும் புதிதாகச் சொல்லவில்லை.
நீங்கள் உங்கள் பிரசங்கங்களில் அடிக்கடி கூறுவதைத்தான் சொன்னேன்.
வாழப்போகின்ற காலம் மிகச் சொற்பம்.
அதற்குள் ஏன் இந்தப் பிரச்சினைகள்.
போகும்போது என்ன கொண்டா போகப்போகிறோம்.”
என்றே சொன்னேன்.
அவள் தன்னைக் குத்திக்காட்டுவதாக அவருக்குப் பட்டது.
சரி சரி நீ போய் உன் அலுவலைப்பார் என்று விரட்டி விட்டார்.
அவள் போனதும் அவரது எழுத்துத் தொடர்ந்தது.

மனிதர்களுக்குள்தான் எத்தனை பேதங்கள். நான் பெரிது நீ பெரிது என்று சண்டையிடுகிறார்கள். சாதி பேதம் பார்க்கிறார்கள்.
சாதி குறைந்தவர்கள் என்று ஒரு சாராரை ஆலயத்துக்குள் விட மறுக்கிறார்கள்.
சாதி குறைவென ஒரு சாராரை ஒதுக்கி அவர்களை அடிமைகளாக நடத்துகிறார்கள்.
இது எவ்வளவு தவறானது.....
இப்படி அவர் எழுதிக் கொண்டிருக்கும்போது

வீட்டினுள் பெரிய சத்தம் கேட்டது. மகனும் தாயும் வாதம் செய்து கொண்டிருந்தனர்.

“உன் அப்பா கேள்விப்பட்டால் உன்னைக் கொன்று விடுவார். மறந்துவிடு..”

அவரும் மெதுவாக எழும்பி வருகிறார்

“என்ன என் பெயர் அடிபடுகிறது. யாருக்கு என்ன பிரச்சினை”

“உங்கள் மகன் காதலில் விழுந்து விட்டான். காதலிப்பது சாதி குறைந்த பிள்ளை ஒன்றை. உங்களுக்கு விருப்பமிராதெனக் கூறினேன். முடியாது என்கிறான்.”

“அது எப்படிச் சாத்தியமாகும்.

எங்களுடைய கௌரவம் இவனுக்குத் தெரியாதா?

என்னுடைய அப்பா தெருவால் நடந்து சென்றால் வழியால் போகின்றவர்கள் தோளில் கிடக்கும் சால்வையை இடுப்பில் கட்டிக்கொள்வார்கள். என் அப்பாவுக்கு முன்னால் செருப்போ அணிய மாட்டார்கள். ஏன் இப்போ நான் கிராமத்துக்குப் போனால் கடவுளைக் கண்டமாதிரி அல்லவா இருக்கிறார்கள்.

இவைகளையெல்லாம் தவிடு பொடியாக்கவா உன் பிள்ளை காதலிக்கிறான்.”

“அது என்ன உன் பிள்ளை.

அவன் உங்களுக்கும் பிள்ளை தானே.

உங்களுடைய ஒரு எழுத்தை அவன் படித்திருக்கிறான்.

நீங்கள் இப்போ
சொல்வதையா எழுதுகிறீர்கள்.
அந்த எழுத்தினால் உங்களை ஒரு முற்போக்கு
வாதியாக அவன் கருதிவிட்டான்.
அவனுக்கெங்கே தெரியப்போகிறது உங்கள்
பச்சோந்திக் குணம்.
ம்...காதலித்தும் விட்டான்."
பேச்சு தன்னைத் தாக்கத் தொடங்குகிறது என்றவுடன்
அவர் மெதுவாக நகர்ந்து விடுகிறார்.
..மேசைக்கு வந்து எழுதத் தொடங்குகிறார்.
என்னவோ தெரியவில்லை.
அவருடைய எழுத்துகள் இப்போ பலமிழக்கத்
தொடங்கி விட்டன.
கட்டுரையின் கடைசிப் பந்தியை எழுத
ஆரம்பிக்கிறார்.
எழுதிவிட்டு மீண்டும் ஒரு முறை வாசித்துப்
பார்த்தார்.
தன்னையும் தன் எழுத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தார்.
எவ்விதமான தொடர்புமில்லாத இரண்டு
கோணங்களாக தானும் தன் எழுத்தும் இருப்பது
அவருக்குள் ஒருவித வெறியை உருவாக்கிவிட்டது.
எழுதியவற்றை எடுத்துக் கிழித்தெறிந்தார்.
அறைக்குள் இருந்த பொருட்களை எல்லாம் தூக்கி
எறிந்தார்.
தன் சட்டையைக் கிழித்தார்.

குந்தி இருந்து ஓவென்று அழுதார்.
அவரின் மனைவியும் மகனும் சத்தங்கேட்டு ஓடி வந்தனர்.
அவரின் நிலை கண்டு குழம்பிப்போய் நின்றனர்.
அவர்களுக்கு அவரின் நிலை விளங்கியது.
அவருடைய மகன் மெதுவாகக் கீழே கிழித்துப் போடப்பட்ட துண்டுகளை ஒன்று சேர்த்துப் பார்க்கிறான். அதில்...

... எழுத்தும் எழுத்தாளனும் ஒன்றாகவே இருக்கவேண்டும்.
எழுத்தாளன் ஆசிரியராக மாறி விடக் கூடாது.
எப்பொழுதும் அவன் மாணாக்கராகவே இருக்க வேண்டும்.
கற்றுக்கொள்ளும் முனைப்பில்தான் அவன் இருக்கவேண்டும்.
இப்படியான ஒரு எழுத்தாளன்தான் சமூகத்தின் பிரச்சினைகளை சரியான முறையில் வெளிக்கொணர முடியும். அவனைத்தான் சமூகம் மதிக்கும்.......
என்றிருந்தது.

# சூடிக் கொடுத்தவள்

பெரியாழ்வார் ஒரு நாள் தன் தோட்டத்துக்கு நீரூற்றிக் கொண்டிருக்கும் போது துளசிச் செடியின் கீழ் அழுது கொண்டே இருந்த குழந்தைதான் ஆண்டாள்.

அழகும் கம்பீரமும் நிறைந்த அந்தக் குழந்தையைக் கண்டதும் திகைத்துப்போன பெரியாழ்வார் செய்வதறியாது திகைத்து நின்றார்.

அவர் மனம் குழப்பமடைந்தது.

யாருக்கோ களவாகப் பிறந்த குழந்தை என்பது அவர் மனதிற்குத் தெரிந்தபோதும் தன் தகுதிக்கு மாசு கற்பிக்கும் குழந்தை என்று நினைத்து அதனை வெறுத்தார்.

அதே நேரம் அந்தக் குழந்தையை அப்படியே விட்டுச் செல்லவும் மனம்வரவில்லை.
அந்தக் குழந்தையும் அவரைப் பார்த்துப் புன்னகைத்தது.
வருவது வரட்டும் என்று குழந்தையைத் தூக்கிக் கொண்டு வீட்டிற்குள் சென்றார்.
குழந்தையை வளர்த்திவிட்டு இதை எப்படிச் சமாளிப்பது என்று யோசிக்கத் தொடங்கினார்.
பாவம் பெரியாழ்வார்.
அவருக்குள் ஒரு தீர்மானம் உருவானது. இரவு வரை பொறுத்திருந்து இரவானதும் கோயிலில் சனசந்தடி குறையக் குழந்தையைச் சேலையால் சுற்றி மறைத்துக் கோயிலுக்கு எடுத்துச் சென்றார்.
சுற்று முற்றும் பார்த்துவிட்டுக் கர்ப்பக்கிரகத்துக்கு முன்னால் குழந்தையை வைத்துவிட்டு கோயில் மணியைத் தன்னால் முடிந்த மட்டும் பலமாக அடித்தார்.
அந்த நேரத்தில் ஆலய மணி வேகமாக அடிக்கப்படுவது கேட்டு கோயிலின் தர்ம கர்தாக்களில் சிலரும் வேறு சிலரும் ஓடோடி வந்தனர்.
வந்தவர்கள் பெரியாழ்வாரையும் கர்ப்பக்கிரகத்துக்கு முன்னால் வளர்த்தப்பட்டிருக்கும் குழந்தையையும் பார்த்துத் திடுக்கிட்டுப் பெரியாழ்வாரை வினாக் குறியோடு பார்த்தனர்.

பெரியாழ்வாரும் தான் மனதில் திட்டமிட்டு வைத்திருந்தபடி தான் கோயிலை மூடும் தருணம் குழந்தை அங்கு வளர்ததப் பட்டிருந்ததாகவும் குழந்தையின்மேல் எம்பெருமானின் மேலிருந்த பூ விழுந்ததாகவும் உடனே உங்களை வரவழைக்கத் தானே மணியடித்ததாகவும் முழுப்பூசணிக்காயைச் சோற்றில் மறைத்துச் சொல்லி முடித்தார்.

வந்தவர்களும் அவர் சொல்வதை நம்பி ஓம் நாராயணாய நமஹ என்று தோத்திரம் சொல்லி அந்தக் குழந்தையை ஆண்டவன் உவந்தளித்த குழந்தையாக்கி ஆண்டவன் தந்ததால் ஆண்டாள் என்றும் பெயரிட்டு குழந்தையை அன்னையின் அவதாரமாக்கிச் சென்றனர். அதன் பின் குழந்தையை வீட்டுக்கு எடுத்துச் சென்ற பெரியாழ்வார் மனைவியிடம் கொடுத்துத் தம் பிள்ளையாக வளர்க்கத் தொடங்கினார்கள்.

இப்படித்தான் ஆண்டாளின் பிறப்புக்கதை இருக்கிறது.

இப்போ ஆண்டாள் வளர்ந்து பருவக் குமரியாகிவிட்டாள். அவளுக்கு வரன் தேடவேண்டும். வரன் தேடுவது பெரியாழ்வாருக்குச் சுலபமான காரியமாக இருக்கவில்லை.

சமயங்களிலே சமணமும் புத்தமும் பெண்ணோடு சம்பந்தப்பட்ட வாழ்க்கையை முற்றாக நிராகரித்திருந்தன.

இறைவனை அடைவதற்குப் பெண்கள் தகுதியானவர்கள் இல்லை என்பது இவர்களின் வாதமாக இருந்தது.
இந்த நிலையைப் புரிந்த சைவமும் வைஸ்ணவமும் எதிர் நிலையெடுத்து பெண் சம்பந்தப்பட்ட காதலுக்கும் காமத்துக்கும் பச்சைக் கொடி காட்டின. ஆனாலும் பெண் பெண்ணாக குரல் கொடுப்பதை மறைமுகமாகத் தவிர்ப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தனர்.
அதாவது ஒரு பெண்ணுக்காக ஆண் குரலெழுப்பலாமேயொளியப் பெண் தன் உரிமைக்காகக் குரலெழுப்புவது அந்தக் காலத்தில் வேண்டத்தகாததாக இருந்தது.
சாதிப் பிரிவினைகளையும் சமயவிதிகள் மூலமாக நிரந்தரமாக்கினர். பெண் அடிமைத்தனத்தையும் மறைமுகமாக நிரந்தரமாக்கினர்.
இந்தச் சமயங்களின் சமூகத் தலையீடுகள் ஆண்டாளையும் பாதிக்கவே செய்தன.
சிறுவயதிலேயே தமிழைக் கையாள்வதில் திறமையுள்ளவளாக விளங்கிய ஆண்டாள் தன் பதினைந்து வயதிலேயே அழகான கவிதை எழுதும் திறமை பெற்றிருந்தாள்.
ஆண்டாளின் காலத்தில் காதல் திருமணங்களைவிட பெற்றார் பார்த்துச் செய்யும் திருமண முறையே வலிமை பெற்றிருந்தது.

ஆண்டாள் பெற்றார் பார்த்துச் செய்யும் திருமணத்தில் அசையாத நம்பிக்கை கொண்டவளாக இருந்தாள். அன்றைய போக்கும் அப்படித்தான் இருந்தது. காதல் திருமணத்தைவிட பெற்றார் பார்த்துச் செய்யும் திருமணத்துக்கு முக்கியத்துவம் அதிகமாக இருந்தது.

பலர் ஆண்டாளின் அழகுக்காகப் பெண்கேட்டு வரத் தொடங்கினார்கள்.

இந்தப் பெண் பார்க்கும் படலம் ஆண்டாளுக்குப் பிடித்தே இருந்தது.

ஒவ்வொரு தடவையும் அவர்கள் வரும்போது மாப்பிள்ளைகளைப் பார்த்து மானசீகமாக ரசிப்பாள். வருபவர்கள் ஒவ்வொருவரும் ஆண்டாளின் பிறப்பு ரகசியத்தை ஏற்றுக் கொள்ளாதவர்களாகவே இருந்தார்கள். வெளிப்படையாகச் சொன்னால் தாய் தகப்பன் இல்லாத ஒரு அனாதையாகவே அவளைப் பார்த்தார்கள். கடவுளின் குழந்தையெனப் பெரியாழ்வாரும் மனைவியும் எவ்வளவோ எடுத்துரைத்தும் அவர்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கவில்லை.

முறைப்படி திருமணம் செய்யாத இருவருக்குப் பிறந்த குழந்தையாகவே அவளைப் பார்த்தார்கள். இவர்களின் விமர்சனங்களும் நையாண்டிகளும் அதனால் தன்னை வளர்த்தவர்கள் படும் துன்பங்களும் அவளுக்குள் ஒரு பொறியை உருவாக்கி இருக்க வேண்டும்.

எந்த ஆண்களைப் பார்த்து ரசித்துத் தனக்குக் கணவனாகப் போகின்றானோ என்று நினைத்து நினைவில் படுக்கையறைவரைக்கும் அழைத்துச் சென்றாளோ அதே ஆண்களை வெறுப்போடு பார்க்கத் தொடங்கினாள்.

அவர்கள் மீது அவளுக்கொரு வன்மம் உருவாகத் தொடங்கியது.

சிறுவயதிலிருந்தே பெரியாழ்வோரோடு வாழ்ந்ததால் தினமும் ஆலயத்துக்குச் செல்வதும் அதன்பின் அவர் நிகழ்த்தும் உபந்நியாசங்களுக்குச் செல்வதும் அவள் வழக்கமாக இருந்ததால் பல கடவுளர்களின் கதைகள் உள்ளத்தில் பதிந்திருந்தன.

ஆண்களுக்கெதிரான வன்மம் இந்தக் கதைகளினூ டாகப் பீறி எழுந்தன.

கண்ணன் பல பெண்களோடு சல்லாபம் இடுவதும் பெண்கள் அவனின் சல்லாபத்துக்காகக் காத்திருப்பதும் அவளுக்கு வியப்பைக் கொடுத்தன.

மகாபாரதத்தில் பாஞ்சாலியை ஐவரையும் பகிரும்படி சொல்வதும் அதற்கேற்ப பாஞ்சாலியும் ஐவருக்கும் மனைவியாக வாழ்வதும் அவளால் சகித்துக் கொள்ள முடியவில்லை.

இதைக் கதையாகப் பெரியாழ்வார் சொல்லும் பொழுது அதை ரசித்து மோகித்து இன்பமுறும் ஆண்களையும் பெண்களையும் பார்த்து வெறுப் படைந்த அவளின் ஆண்கள் மீதான வன்மம்

வேறொரு திசையில் பயணிக்கத் தொடங்கியது.
பெண்ணைப் போகப் பொருளாகவும் அடிமையாகவும் பார்க்கும் ஆண்களையும் அதற்குத் தூபம்போடும் சமயத்தையும் கடவுளர்களையும் வேறுபட்டவிதமாகப் பார்க்கத் தொடங்கினாள்.
மனிதர்களை வெறுக்கத் தொடங்கினாள்.
மனிதர்களுடனான கல்யாணம் என்ற பந்தத்தை அறவோடு வெறுத்தாள். தன்னை இந்த நிலைக்குக் கொண்டு வந்த கடவுளைப் பழிவாங்கவேண்டுமென்ற உணர்வு அவளுள் கிளர்ந்தெழுந்தது.
காதல் திருமணத்தை வெறுத்த அந்தச் சமூகத்தில் கோபம் கொண்டு கடவுளையே காதலிக்கத் தொடங்கினாள்.
சிறுவயதிலிருந்தே திருமால்மேல் காதல் கொண்டதாகவும் மானிடர்கள் தனக்கு ஒரு பொருட்டல்ல என்றும் தன் செயலால் உலகுக்குத் அறிவித்தாள்.
பெண்களை அடிமைகளாகப் பார்க்கும் ஆழ்வார் சமூகத்தை அறவோடு வெறுத்தாள்.
அவளுடைய இந்தப் போக்கால் கலங்கிப்போன பெரியாழ்வார் செய்வதறியாது திகைத்தார்.
பாலியல் கருத்துக்களையெல்லாம் சர்வ சாதாரணமாக கவிதை மூலமாகக் கதைத்தாள்.
அவள் தன் பாலியல் எண்ணங்களை கனவாக வெளிப்படுத்திய தோடல்லாமல் அதனோடு

திருமாலைத் தொடர்புபடுத்தியமை பெரியாழ்வாரைச் சினங் கொள்ள வைத்தது. காமம் சம்பந்தப்பட்ட விடயங்களை பெண்கள் உரைப்பதும் ஆழ்வார்களால் தடை செய்யப்பட்டே இருந்தது.

இவளின் இச் செய்கைகளால் பெரியாழ்வார் வெளிப்படையாகவே அவளைக் கடிந்து கொண்டார்.

மக்களும் இவளின் கடவுள் மேலான காதலை விமர்சிக்க ஆரம்பித்து விட்டனர்.

அபச்சாரம் என்றனர். அவர்கள் எதிர்க்க எதிர்க்க படுவேகமாக எதிர் வினையாற்றினாள்.

சாடைமாடையாகப் பெரியாழ்வாரைக் கிண்டல் செய்யவும் தொடங்கினர்.

மொத்தத்தில் அவளுக்குக் கல்யாணம் சரிவராததால் மூளைபிசகி விட்டதெனக் கதைக்க ஆரம்பித்துவிட்டனர்.

இது ஆண்டாளை இன்னும் ஆண்களுக்கெதிராகக் கிளர்ந்தெழ வைத்துவிட்டது.

ஆனாலும் அவளின் கவிதைகள் எல்லாம் ஒரு பெண் ஆண் மீது கொண்ட காதலின் உச்ச நிலையையே பிரதிபலித்தன. இதனைத் திருமால்மேல் கொண்ட பக்தியால்தான் அப்படி எழுதுகிறாள் என்று ஒரு கூட்டம் கூறினாலும் அப்படி அல்ல என அவளின் கவிதைகள் வாதிட்டு நின்றன.

ஆண்டாளின் காலத்தில் ஒரு ஆண்தான் காதல் இன்பத்தை வெளிப்படையாக கூறலாம் என்ற

வழமை இருந்து வந்தது.
ஆண்டாள் இதனை உடைத்தாள்.
ஆண்களுக்கெதிராக ஆண்டாள் எழுப்பிய முதல் யுத்தபேரிகை அவளின் காமரசம் பொங்கும் காதல் கவிதைகள்.
அவளின் இந்த நடக்தையால் ஆழ்வார் சமூகம் திடுக்கிட்டது.
ஆண்களே பெண்களாகத் தம்மைக் கற்பனை செய்து பெண்களுக்காகக் குரல் கொடுப்பதாகப் பாவனை செய்த ஆழ்வார் சமூகம் சற்றுத் திடுக்கிட்டது.
பெண்ணே பெண்ணின் குரலாக எழுந்ததால் ஆழ்வார் சமூகம் கொதித்தது. பெண்கள்மேல் தாங்கள் கொண்டு வந்த ஆதிக்க சாம்ராஜ்ஜியம் உடைந்து விடுமோ எனக் குழம்பினர்.
இந்தக் குழப்பம் ஆண்டாளுக்கெதிரான யுத்தமாக மாறியது.
பெரியாழ்வாரே திருமாலுக்கான மாலைகளைப் புனைவார்.
ஆண்டாள் அதனைக் கொண்டு வந்து ஆலயத்தில் கொடுப்பது வழக்கம்.
அன்று மாலையைக் கொடுக்க முன்பு அந்த மாலையைத் தனக்குப்போட்டு தன் காதல் மணாளனாக திருமாலை நினைத்து உள்ளுக்குள் சந்தோசம் அடைந்தாள்.
ஒவ்வொரு நாளும் இதனைச் செய்தாள்.

இந்தச் செயலும் அவள் மரபைச் சின்னாபின்ன மாக்கிய ஒரு செயலே. இவள் இப்படிச் செய்வதை அவதானித்த ஆலயத்திலுள்ள ஆழ்வார் ஒருவர் சந்தர்ப்பத்தை உபயோகப்படுத்தி ஊர் முழுக்கப் பரப்பிவிட்டார்.

ஊரே ஆண்டாளுக்கெதிராகக் கொந்தளித்தது.

பெரியாழ்வார் கூடத் தன் வர்க்கத்தின் பின்னால் தான் நின்றார். மகள் என்ற உறவு கூட அங்கே செல்லாக் காசாகி விட்டது.

அச்சம் மடம் நாணம் பெண்களுக்கே உரியதென்ற கோட்பாட்டைத் தூக்கி எறிந்தாள் ஆண்டாள்.

ஆழ்வார் சமூகம் கலங்கியது.

ஆண்வர்க்கத்தால் அவளின் பிறப்பைக்காட்டித் தூக்கி எறியப்பட்ட தன் உணர்வுகளை திருமால்மேல் காதலாக்கி அந்த உணர்வுகளை எவ்வித நாணமு மின்றி எழுதிக் குவித்தாள் ஆண்டாள்.

இவளின் வெளிப்படையான இந்த யுத்தம் ஆழ்வார் சமூகத்தைக் கோபமுறச் செய்ததோடு சிந்திக்கவும் செய்தது. சதிக்கான திட்டமிடல் ஆரம்பமாகியது.

அவளின் இந்த யுத்தத்தை அவளின் பாணியிலேயே சென்று தீர்க்கத் தீர்மானித்தார்கள்.

பக்தியாக மாற்றினார்கள்.

அவளைக் கடவுளாக்கினார்கள்.

திட்டமிட்டசதி அரங்கேறியது.

அருவருப்புக்குரியவளாக இருந்த அவளை அவதாரமாக்கினார்கள்.

அருவருப்புக்குரிய அவளின் பிறப்பை
அற்புதமானது என்றார்கள்.
அவளின் யுத்தபேரிகையை தாரைதப்பட்டை
யாக்கினார்கள்.
அவளைக் கையெடுத்துக் கும்பிட வைத்தார்கள்.
சமய உலகத்தில் எந்த ஒரு பெண்
தலையெடுக்கிறாளோ அவளை வலுக் கட்டாயமாகக் கடவுளாக்கி அடக்குவதில் வெற்றி கொண்ட ஆதிக்க வர்க்கம் ஆண்டாளையும் விட்டு வைக்கவில்லை.
எப்படி காரைக்காலம்மையாரை இளம் பருவத்தி லிருந்து முதுமைப் பருவத்திற்கு மாற்றிச் சீரழித்தார்களோ அதே பாணியில் ஆண்டாளையும் அழித்துவிடத் தீர்மானித்தார்கள்.
தனி ஒரு ஆளாக யுத்தம் செய்த ஆண்டாள் கலங்கினாள். அவள் பின் வாங்கவில்லை.
தொடர்ந்து யுத்தம் புரிந்தாள்.
ஒரு நாள் மூலஸ்தானத்திற்குள் போன அவள்
திரும்பி வரவேயில்லை.
ஆண்டவனுடன் ஐக்கியமாகி விட்டதாகக் கூறினார்கள்.
பெண்களுக்காகப் பெண் குரலாகவே எழுந்த குரல்
திட்டமிடப்பட்டு அடக்கப்பட்டுவிட்டது.

*தினக்குரல் 2018*

*****

‘எழுத்தும் எழுத்தாளனும் ஒன்றாகவே இருக்கவேண்டும்.

எழுத்தாளன் ஆசிரியராக மாறி விடக்கூடாது.

எப்பொழுதும் அவன் மாணாக்கராகவே இருக்கவேண்டும்.

கற்றுக்கொள்ளும் முனைப்பில்தான் அவன்

இருக்கவேண்டும். இப்படியான ஒரு

எழுத்தாளன்தான் சமூகத்தின் பிரச்சினைகளை சரியான

முறையில் வெளிக்கொணர முடியும். அவனைத்தான் சமூகம் மதிக்கும்.......’

9 789554 041110

மகுடம் வெளியீடு



<u>ஆசிரியரின் ஏனைய படைப்புகள்</u>

கடல் கடந்து போனவர்கள் (நாவல்)
சில மனிதர்களும் சில நியாயங்களும் (நாவல்)
மண்ணில் தெரியுது வானம் (கட்டுரை)
என் பேனாவிலிருந்து... (தொகுப்பு)
தயாளனின் குறும்பாக்கள் (குறும்பா)

<u>வரவிருப்பவை</u>

திருக்குறும்பா
நானும் கவிதைகளும் (கவிதை)
கரும்பலகைகள் (நாவல்)